காமිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය
கமத்தொழில், கால்நடை, வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
MINISTRY OF AGRICULTURE, LIVESTOCK, LANDS AND IRRIGATION

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

Funded by
The European Union

ASMP
කෘෂි අංශ නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீன நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Sector Modernization Project

# செயல்பாட்டுக் கையேடு

# பட்டியலிடப்படாத பொதுக் கம்பனிகள்

விவசாய
நவீனமயமாக்கல்
திட்டம்




துயாரிப்பு: எம்.ஸ்ற்.எம் பர்காட்
நிறுவன அபிவிருத்தி ஆலோசகர்

A PARK
AGRICULTURE TECHNOLOGY DEMONSTRATION PARK

**இவ் வெளியீட்டின் அனுசரணையாளர்கள்  உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினராகும். இதன் உள்ளடக்கங்கள் அனைத்தினதுக்குமான தனி பொறுப்பை விவசாயம் கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின்கீழ் நடைமுறையில் உள்ள விவசாய நவீன மயமாக்கல் திட்டமாகும். இது தொடர்பான எவ்வித கருத்துக்களும் உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினரை சாராது என்பது குறிப்பிடத்தக்கது**

# திட்டப்பணிப்பாளரின் செய்தி

**ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எழுதப்பட்ட வரலாற்றை கொண்டஇலங்கை அதன் வளமான பாரம்பரியத்தில் பெருமிதம்கொள்கின்றது. விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமான அடிப்படைத் தேவையான மூல வளங்களான வேறுபட்ட வளமான மண்வகைகள், நிலஅமைப்பை பொருத்தமான வகையில் கொண்டு இருப்பதனால் நீண்ட காலமாக விவசாயத்தை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.**

**உலகளாவிய ரீதியில் விவசாயத்தின் பரிணாம வளர்ச்சி மிக வேகமாக இருந்த போதும் இலங்கை காலம்காலமாக பல சவால்களுக்கு முகம் கொடுத்தமையினாலும் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தியதன் காரணமாகவும் விவசாயத்துறை ஆதாயம் குறைந்த ஒரு தொழிலாக மாறியது. மேலும் பயிர் நிலங்கள் துண்டாடப்பட்டமையும் இலங்கையில் விவசாயம் வினைத்திறனாக மாற்றம் பெற சவால்களாகின.**

**இலங்கை விவசாய உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கு தனது அன்னிய செலாவணியில் கணிசமான பகுதியை ஒதுக்கியது. இருந்தபோதம் தனது நாட்டின் வளம்மிகுந்த மண்ணின் உற்பத்திதிறனை உணர்ந்த அரசு பயிர் உற்பத்தியை மேற்கொண்டு இறக்குமதியை குறைத்து அன்னிய செலாவணியை மீதப்படுத்தவும், சர்வதேச தேவையை பூர்த்திசெய்யக்கூடிய பயிர்வகையை கண்டறிந்து ஏற்றுமதி செய்வதன் மூலம் அன்நிய செலாவணியை ஈட்டிக்கொள்ளும் வாயப்பையும் கண்டறிந்தது.**

**இச்சந்தர்ப்பத்தை பற்றிக்கொள்ள அரசு விவசாயத்துறைசார் உயர் தொழில் நுட்பங்களுக்கு முன்னுரிமையளித்தது. 2017ல் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தை ( ASMP ) உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்பித்துவைத்தது.**

**இத்திட்டமானது அதிக சந்தைவாய்ப்புள்ளதும் உயர் உற்பத்தி திறன்கொண்ட மரக்கறி மற்றும் பழப்பயிர்களை வினைத்திறனாக மேற்கொள்ளக்கூடிய அயனமண்டல பயிர்களுக்கான பிரதேசங்களையே இலக்காக கொண்டு 2018 ம்ஆண்டில் ஏழு மாவட்டங்களில் முன்னொடித் திட்டங்களை ஆரம்பித்தது. ஆவையாவன யாழ்ப்பாணம், முல்லைத்திவு, அனுராதபுரம், பொலன்நறுவை, மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் மாத்தளையிலும் மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிஉதவியுடன் ஐந்து மாவட்டங்களான அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா, கண்டி, பதுளையிலும் விஷ்தரிக்கப்பட்டது.**

**கடந்த ஏழு ஆண்டுகளுள் இலங்கை விவசாயிகள் விவசாயத்தின் எண்ணக்கருவை மாற்றி உள்ளதுடன், நம்பிக்கை அற்று ஆர்வமிழந்த விவசாயிகளின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய தலைமுறையினருக்கு விவசாயத்தில் நம்பிக்கையை உண்டுபண்ணும் செழிப்பான மாற்றத்தை தந்துள்ளது.**

**தொழில்முனைவோருக்கு விவசாயத்துறையில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளதுடன். இவர்களிடையே முற்போக்கான சிந்தனையுடனான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.**

**இத் திட்டம் அதிக சந்தை வாய்ப்புள்ள அயன மண்டல காய்கறி பழங்களையே இலக்காக கொண்டது. 300 – 400 சிறு பண்ணையாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு உயர் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தும் விவசாய தொழில் நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டது. திட்டமானது உலகவங்கியின் 64 மில்லியன் யூஎஸ் டொலர் கடன்தொகையுடன் 25 மில்லியன் யூஎஸ் டொலர் நன்கொடையடன் தட்டம் வலுவூட்டப்பட்டது. இன்றுவரை திட்டம் 65 மில்லியன் யூஎஸ் டொலர்அன்நிய செலாவணியை ஏற்றுமதிமூலமும் 3 மில்லியன் யூஎஸ் டொலர்களை உள்நாட்டிலும் பெற்றுள்து.**

இத்திட்டம் நவீன முறையில் விளைநிலத்தின் வினைத்திறனை அதிகரித்துள்ளது. அதி உயர் அடர்த்தி முறையான இரட்டை வரிசை மற்றும் முள்ளந்தண்டு வடிவிலான கத்தரித்தலும் பழக்கப்படுத்தல் முறைமையினையும் அறிமுகப்படுத்தி ஒரு அலகு பரப்பின் விளைச்சலை 2 தொடக்கம் 3 மடங்கு அதிகரித்துளது. வினைத்திறனான நீர்ப்பாசனத்திற்கு காலநிலைக்காரணிகளின் தகவலுடனான தன்னியக்க நீர்ப்பாசன பொறிமுறைத்திட்டம், நுண்நீர்பாசனத்துாடாக வினைத்திறனான பசளைப்பிரயோகம், சூரிய மின்கலத்துடனான நீர்பாசன அறிமுகம் மின்சாரத்தில் தங்கியிருப்பதை குறைத்தல், களைநாசினி அற்ற களைக்கட்டுப்பாடு,

திட்டத்தின் மற்றுமோர் பிரதான நகல்வாக தனிப்பட்ட விவசாயிகளை கம்பனி பங்குதாரராக மாறறும் நடவடிக்கையாகும். இதன்போது பட்டியலிடப்படாத பொது கம்பனிகள் ( PUC ) அறிமுகப்படுத்தப்பட்டு தனிப்பட்ட விவசாயிகளின் கூட்டு நடவடிக்கையும் விவசாய தொழில் முயற்சியின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்போது வாழ்வாதாரத்திற்காக செய்யப்பட்ட விவசாயம் சிறந்த தொழில் முயற்சியாக மாற்றம் பெற்றுள்ளது இதன் காரணமாக விவசாயிகள் கம்பனிகளின் பங்குதாரராக மாற்றம் பெற்று மதிப்பிற்குரிய தொழில் முனைவோராக உருவெடுத்துள்ளனர்.

விவசாய நவீன மயமாக்கல் திட்டமானது விவசாய தொழில் நுட்ப பூங்காவின் உற்பத்தியாளர்களை விவசய உற்பத்தியாளரகள் அமைப்பாக உருவாக்கப்பட்டு அவ்அமைப்புகளை இன்று கம்பனி சட்டம் 2007ம் ஆண்டு 7ம் இலக்க சட்டத்தின் கிழ் பதிவுசெய்துள்ளது விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் பயிர் உற்பத்தி கொத்தணிகளில, இவ்வாறு பதிவு செய்யப்பட்ட 59 பட்டியலிடப்படாத பொது கம்பனிகள் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த விவசாயிகள் கம்பனி சட்டமானது நேரடியாக தமது உற்பத்திகளை, சர்வதேச சந்தைப்படுத்தலுக்கான கொள்வனவாளர்களுடன் வியாபார நடவடிக்கைக்கு தகுதி வாய்ந்தவர்களாக மாற்றி உள்ளதால், இன்று எமது விவசாயிகளுக்கும் உலகளாவிய ரீதியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளகூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு விவசாய கம்பனியுடனும் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட பதனிடல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்து. இதன்மூலம் சர்வதேச சந்தையின் கேள்விக்கு ஏற்ற தரத்தில் உற்பத்திகளை தரப்படுத்தி பொதி செய்து அனுப்பும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்காரணமாக தரநிர்ணயம் நிச்சயப்படுத்தப்படுகிறது. இதன்போது உற்பத்தியாளர் மற்றும் கொள்வனவாளர்களான இரு சாராருக்கும் ஒரே மாதிரியான அனுகூலம் கிடைக்கவாய்ப்பு ஏற்படுகின்றது.

இந்த விவசாய கம்பனியின் எண்ணகருவானது விவசாய வியாபாரத்தை மிகவிரைவில் தனியார் மயப்படுவதை உறுதிசெய்கின்றது.

ஐரோப்பிய ஒன்றிய அனுசரணையுடனான பயிர் உற்பத்தி கொத்தணிகளின் நிறுவன விவசாய வியாபார அபிவிருத்தி ஆலோசகர் திரு எம்.ஸற்.எம். பர்காட் அவர்கள் இந்த கையேட்டை உருவாக்கியுள்ளார். கம்பனியின் வணிக மற்றும் நிருவாக செயல்பாட்டு நடவடிக்கைகள் நீண்டு நிலைக்கக் கூடியதும், வெற்றிகரமான கம்பனி வளர்ச்சிக்கும் கம்பனியில் நீண்டகாலம் சிறந்த முறையில் பங்குதார்கள் விவசாய வயாபார நடவடிக்கைக்காக தங்கி நிற்கவும் வழிகாட்டியாக உள்ளது.

கலாநிதி ரொகான் விஜகோன்
திட்டப் பணிபாளர்
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்.

## குறுஞ்சொற்கள்

AI- விவசாய ஆலோசகர்

AOA- அமைப்பு விதிமுறைகள்

ASMP – விவசாயத் துறைசார் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

BOD –பணிப்பாளர் சபை

BR –வியாபாரப் பதிவு

DOA –விவசாயத் திணைக்களம்

Do AD –கமநல அபிவிருத்தித் திணைக்களம்

DS –மாவட்ட செயலகம்

DSD – பிரதேச செயலகம்

EC – நிறைவேற்றுக் குழு

EDB – ஏற்றுமதி அபிவிருத்தி சபை

EPF - ஊழியர் சேமலாப நிதியம்

ETF –ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

EU – ஐரோப்பிய ஒன்றியம்

FPO – விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம்

GAP – சிறந்த விவசாய நடைமுறைகள்

GN – கிராம அலுவலர்

GOSL –இலங்கை அரசாங்கம்

IDB –கைத்தொழில் அபிவிருத்தி சபை

ITI –கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

MoA- கமத்தொழில் அமைச்சு

MASL –இலங்கை மகாவெலி அதிகாரசபை

MOU- புரிந்துணர்வு ஒப்பந்தம்

NEDA –தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

PDOA –மாகாண விவசாயத் திணைக்களம்

PMU- செயற்றிட்ட கண்காணிப்பு அலகு

PPMU –மாகாண செயற்றிட்டக் கண்காணிப்பு அலகு

PUC- பொது பட்டியலிடப்படாத கம்பனி

ROC - கம்பனிப் பதிவாளர்

WB – உலக வங்கி

**பொருளடக்கம்**


| | | பக்கம் |
|---|---|---|
| **1.0.** | **அறிமுகம்** | 09 |
| 1.1. | *PUC* இன் விசேட அம்சங்கள் | 09 |
| 1.1.1. | *PUC* க்களின் கொள்கைகள் | 10 |
| 1.1.2. | *PUC* களைக் கொண்டிருப்பதன் அனுகூலங்கள் | 10 |
| 1.1.3. | சட்ட ஒழுங்குமுறை மற்றும் நிர்வாக கட்டமைப்பு | 11 |
| 1.2. | *PUC* களின் வகை கூறல் | 11 |
| 1.3. | வணிக சுயாதீனத் தன்மை | 12 |
| 1.4. | *PUC* களை முகாமை செய்வதில் உள்ள சவால்கள் | 13 |
| 1.5. | *PUC* இன் குறிக்கோள்கள் | 14 |
| **2.0.** | ***PUC* களின் தொழிற்பாடு மற்றும் முகாமைத்துவம்** | 14 |
| 2.1 | *PUC* களின் கட்டமைப்பு | 15 |
| 2.2. | பல்வேறு மட்டங்களில் அங்கத்தவர்களது பொறுப்புக்கள். | 15 |
| 2.2.1. | தலைவரின் பொறுப்புக்கள் | 15 |
| 2.2.2. | பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் | 16 |
| 2.2.3. | நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களது பொறுப்புக்கள் | 17 |
| 2.2.4. | அங்கத்தவர்களது பொறுப்புக்கள் | 18 |
| **3.0.** | **மனித வள முகாமைத்துவம்** | 19 |
| 3.1. | ஆளணி முகாமைத்துவம் மற்றும் கொடுப்பனவுகள் | 19 |
| 3.2. | ஆட்சேர்ப்பு விதிமுறைகள்/ அனுமதிகள் | 19 |
| 3.3. | மனித வளத் திட்டமிடல் | 19 |
| 3.4. | ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, எதிர்கால திட்டங்கள் | 20 |
| 3.5. | ஏனைய நிறுவன பணியாளர்களது நிலைப்படுத்தல் | 21 |
| 3.6. | செயல்திறன் மதிப்பீடு | 21 |
| 3.7. | *BOD/EC* மற்றும் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் | 22 |
| 3.8. | தொடர்பாடல் வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் | 22 |
| 3.9. | அங்கத்தவர்களது ஓய்வூதிய கொடுப்பனவுகள் | 22 |
| **4.0.** | ***PUC* இற்கான நிதியிடல்/ முதலீடு செய்தல் மற்றும் அது தொடர்பான ஏனையவை** | 24 |
| 4.1. | நிதி முகாமைத்துவம் | 24 |
| 4.2. | மிகை நிதிகளின் முதலீடு | 24 |

| | | |
|---|---|---|
| 4.3. | பங்கு மூலதனம் | 25 |
| 4.4. | பங்குடைமைக்குரிய பங்குளின் விசேட அம்சங்கள் | 25 |
| 4.5. | அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | 26 |
| 4.6. | வழங்கப்பட்ட (பணம் செலுத்தி) மூலதனப் பங்குகள் | 26 |
| 4.7. | வெகுமதிப் பங்குகளை வழங்குதல் | 26 |
| 4.8. | இலாபத்தை பகிர்தல் | 26 |
| 4.9. | அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகளுக்கான அனுகல் | 26 |
| 4.10. | கணக்கீடு மற்றும் அறிக்கைப்படுத்தல் | 27 |
| 4.11. | கணக்கேடுகளை பராமரித்தல். | 27 |
| 4.12. | *PUC* இற்கான கணக்காய்வு முறைமைகள் | 28 |
| 4.13. | வருடாந்த சொத்துக்கள் சரிபார்த்தல் | 29 |
| 4.14. | கலைத்தல் | 29 |
| **5.0** | **தரவு முறைமை மற்றும் இணையத் தளங்கள்** | 30 |
| **6.0** | **நிர்வாக முறைமைகள்** | 31 |
| 6.1. | விளைதிறன் மிக்க நிர்வாகத்திற்கு தொடர் கூட்டங்கள் | 31 |
| 6.2. | நல்லாட்சிக்கான செயற்பாட்டுக் குழுக்கள் | 31 |
| 6.3. | அங்கத்தவர் சேவைகள் | 32 |
| **7.0** | **ஆக்கபூர்வமான வியாபாரத் தெரிவுகளை உருவாக்குதல் – பெறுமதிச் சங்கிலி அனுகுமுறை** | 33 |
| 7.1. | பெறுமதி சங்கிலி முகாமைத்துவம் | 34 |
| **8.0** | **வியாபார திட்டமிடல்** | 36 |
| 8.1. | வியாபார திட்டத்தை தயாரித்தல்/ இற்றைப்படுத்துதல் | 36 |
| 8.1.1. | பெறுமதிச் சங்கிலியைப் பகுப்பாய்வு செய்தல். | 36 |
| 8.1.2. | மதிப்பீடு மற்றும் முக்கியமான வாய்ப்புக்களை முன்னுரிமைப்படுத்துதல் | 36 |
| 8.1.3. | ஆபத்துப் பகுப்பாய்வு | 38 |
| 8.1.4. | சந்தையுடனான தொடர்புகள் | 38 |
| 8.1.5. | வியாபார வாய்ப்புக்களுக்கான நிதிசார் பகுப்பாய்வு | 39 |
| 8.1.5.1. | பாதீடு | 39 |
| 8.1.5.2. | நிதி அறிக்கைகள்/ கூற்றுக்கள் | 41 |
| **9.0.** | **மதிப்பீடு/ கண்காணிப்புக்கான செயலாற்றுகை குறிகாட்டிகள்** | 42 |

**இணைப்புக்கள்**


| | பக்கம் |
|---|---|
| *இணைப்பு 1 – கொத்தணித் தகவல்கள்* | 48 |
| *இணைப்பு 2 - ஒவ்வொரு PUC களாலும் பராமரிக்கப்படவேண்டிய புத்தகங்கள்/ பதிவுகள்/ கோவைகளின் பட்டியல்* | 49 |
| *இணைப்பு 3- BOD மற்றும் முகாமைத்துவப் பணியாளர்களுக்காக இனங்காணப்பட்ட பயிற்சித் தெரிவுகள்* | 50 |
| *இணைப்பு 4- PUC களுக்காக முன்மொழியப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகள்* | 51 |
| *இணைப்பு 5- PUC முகாமையாளர்/ கணக்காளருக்காக முன்மொழியப்பட்டுள்ள தொழில் விவரங்கள்* | 52 |
| *இணைப்பு 6- பரிசீலிப்பதற்கான வணிக வாய்ப்புக்களின் பட்டியல் மற்றும்* PUC *களுக்கு சிறந்ததை தெரிவு செய்தல்.* | 53 |
| *இணைப்பு 7-* PUC *பகிரப்பட்ட வசதிகளை வாடகைக்கு வழங்குவதற்கான வாய்ப்புக்கள்* | 54 |
| *இணைப்பு 8- PUC இன் வருடாந்த செயல்திறனை அளவிடுவதற்கான (தரப்படுத்துதல்) கருவிகள்* | 54 |
| *இணைப்பு 9- PUC இன் மாதாந்த முன்னேற்ற அறிக்கைக்கான மாதிரி படிவம்* | 57 |
| *இணைப்பு 11- PUC இன் சொத்துக்கள் பட்டியலுக்கான மாதிரிப் படிவம்* | 59 |
| *இணைப்பு 12- PUC அங்கத்தவர் தரவுக் கோவைக்கான மாதிரிப் படிவம்* | 60 |
| *இணைப்பு 13- கட்டண ரசீது புத்தகத்தின் மாதிரி ஃபோலியோ* | 61 |
| *இணைப்பு 14- விலைப் பட்டியலுக்கான மாதிரிப் படிவம்* | 62 |
| *இணைப்பு 15-காசோலைக் கொடுப்பனவு வவுச்சருக்கான மாதிரிப் படிவம்* | 63 |
| *இணைப்பு 16- காசுக் கொடுப்பனவு வவுச்சருக்கான மாதிரிப் படிவம்* | 64 |
| *இணைப்பு 17-கம்பனி விவரக் கோவைக்கான மாதிரிப் படிவம்* | 65 |
| *இணைப்பு 18- வரவுப் பதிவுக்கான மாதிரிப் படிவம்* | 66 |
| *இணைப்பு 19 –நாளாந்த காசேட்டு சாராம்ச மாதிரி* | 67 |
| *இணைப்பு 20- விவரிக்கப்பட்ட கண்காணிப்புத் திட்டத்திற்கான மாதியுடன் கூடிய கட்டமைப்பு வரைவாக்கம் (Matrix-A, B, C, D)* | 68 |
| *இணைப்பு 21-விவசாயியான அங்கத்தவர் ஒருவரை மதிப்பீடு செய்வதற்கான நியதிகள்* | 73 |
| *இணைப்பு 22-விவசாயி தலைமைத்துவ மதிப்பீட்டுக்கான நியதிகள்* | 81 |
| *இணைப்பு* 23- *பயனுள்ள நிறுவனங்கள், அவற்றின் பணிகள் மற்றும் தொடர்பு விபரங்கள்* | 84 |


ASMP New Districts (EU) and Crop Clusters
Legend
Badulla District Project Area
Kandy District Project Area
Vavunia District Project Area
Kilinochchi District Project Area
Ampara District Project Area
Main Crops
CH Chili
HM Hybrid Maize
JP Jumbo Peanut
SP Seed Potato
HA Hass Avocado
SS Soursop
VG Carrot/ Leeks
PG Pomegranate
PF Passion Fruit
PT Papaya Tainung
MT Mango TEJC
VS Vegetable Seed
AB Ambul Banana
JAFFNA
KILINOCHCHI
MULLAITIVU
MANNAR
VAVUNIYA
ANURADHAPURA
TRINCOMALEE
PUTTALAM
POLONNARUWA
BATTICALOA
KURUNEGALA
MATALE
KANDY
AMPARA
GAMPAHA
KEGALLE
BADULLA
NUWARA ELIYA
COLOMBO
MONERAGALA
KALUTARA
RATNAPURA
HAMBANTOTA
GALLE
MATARA
Agriculture Modernization Project
-10000
40000
90000
140000
190000
240000
290000
500000
450000
400000
350000
300000
250000
200000
150000
100000
50000

## 1.0. அறிமுகம்

இந்த தொழிற்பாட்டுக் கையேடானது இலங்கை அரசாங்கம் (**GOSL**)/ விவசாய அமைச்சு (**MoA**) வலுவூட்டி மேம்படுத்துவதற்காக (பொது பட்டியல்படுத்தப்படாத கம்பனிகளுக்கு/ **PUCs**) உதவுவதற்காக வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஐந்து மாவட்டங்களில் உள்ள சிறிய விவசாயிகளை வலுவூட்டுவதற்கான செயலுபாயமொன்றாக விவசாய துறைசார் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (**ASMP**) ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை கம்பனிப் பதிவாளரின் கீழ் சட்டப்பூர்வமாக பதிவுசெய்யப்பட்ட விவசாய நிறுவனங்களை உருவாக்குவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட பெறுமதி சங்கிலி அபிவிருத்தி அணுகுமுறையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் உள்ள சிறு விவசாயிகளை வலுவூட்டுவதற்கான ஒரு சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் தலையீடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் கருதப்படுகிறது.

வவுனியா, கிளிநொச்சி, கண்டி, பதுளை மற்றும் அம்பாறை ஆகிய ஐந்து மாவட்டங்களில் 22 கொத்தணி கம்பனிகளுக்கான கொத்தணி அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து நிறுவுவதில் செயற்றிட்ட முகாமைத்துவ அலகானது (PMU) கமத்தொழில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அளப்பரியதொரு பணியை ஆற்றுகின்றது. சிறு விவசாயிகளுடனான இந்த கூட்டு அணுகுமுறைகள் நிலையான வருமானம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான வெற்றிகரமான முயற்சிகளை நிரூபித்துள்ளன. **(கொத்தணி விபரங்கள் – இணைப்பு 1 ஐ பார்க்கவும்)**

சட்டப்பூர்வமாக உரித்தான விவசாய கம்பனிகளின் PUCகளின் உருவாக்கமானது, மதிப்புச் சங்கிலிகள் மற்றும் மாற்றீட்டு வருமான உருவாக்கத் தெரிவுகளை தெரிவு செய்வதில் கூட்டு விவசாய வணிக செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வத்தைக் வெளிக்காட்டியுள்ளது. இருப்பினும், கம்பனியின் நிலையான எதிர்காலத்திற்காக அடையாளம் காணப்பட்ட வணிக நடவடிக்கைகளின் தொழிற்பாடு மற்றும் முகாமை தொடர்பில் சிறு விவசாய கொத்தணிகளுக்கு மேலும் ஆலோசனை/ வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது. சிறு விவசாயிகளின் கூட்டு அணுகுமுறையின் பொறுப்பாளராக செயற்படுவதற்கு, விவசாய கம்பனிகளின் (PUCs) நிர்வாகப் பிரிவின் அறிவு/ திறன்/ வணிகத் இயலுமைகளை மேம்படுத்துவதற்கான அவசரத் தலையீடுகள் இதற்கு அவசியமாகிறது.

செயல்பாட்டு அம்சங்கள் மற்றும் சிறந்த நிர்வாகம் குறித்த இந்த கையேடு, PUC களின் முகாமைத்துவத்திற்காக சிறந்த வணிக நடைமுறைகளை மேற்கொள்வதற்கு தேவையான வழிகாட்டுதல் மற்றும் கட்டமைப்பை வழங்குவதற்காக நிறுவப்பட்டது, அதே நேரத்தில் பங்குதாரர்களை கம்பனியுடன் நீண்ட காலம் தரித்திருப்பதனூடாக நிலையான அபிவிருத்திக்கு வசதியளிக்கின்றது. மேலும் இந்த கையேடானது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், புத்தாக்கம், பணத்திற்கான மதிப்பு, இடர் முகாமைத்துவம் மற்றும் ASMP இன் கீழ் நிறுவப்பட்ட அந்தந்த கம்பனிகளின் நோக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் வணிக முயற்சிகள் தொடர்பான செயல்திறன் மதிப்பீடு ஆகியவற்றை உறுதி செய்கிறது.

இந்த உள்ளக தொழிற்பாட்டுக் கையேட்டின் வழிகாட்டல்கள், சங்கத்தின் யாப்புக்களில் (AoA) கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதில் கவனம் செலுத்துகிறது மற்றும் இலங்கையின் சட்ட கட்டமைப்பிற்கு இணங்குவது மற்றும் இலங்கையின் கம்பனிச் சட்டம் 2007 இன் கீழ் நிறுவப்பட்ட அனைத்து PUC களுக்கும் பொருந்தும். சிறு விவசாய முயற்சியாண்மையாளர்கள் தமது பங்குகளை விவசாய வணிக நிறுவனமாக மாற்றுவதன் மூலம் நேரடியான கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்.

EU-PUCக்கான இந்த தொழிற்பாட்டுக் கையேடு, அதன் அன்றாட வணிக செயற்பாடுகளின் போது பின்பற்ற வேண்டிய கம்பனியின் முகாமைத்துவப் பிரிவுக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குகின்றது. தேவை ஏற்படும் போது ஏதேனும் மாற்றங்கள், மேம்படுத்தல்கள் அல்லது உள்ளடக்கங்களை விரிவுபடுத்துவதற்காக இந்த கையேடு அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட வேண்டும். அத்துடன் உயர் மட்டத்திலான வெளிப்படைத் தன்மையைப் பராமரிக்கும் போது வணிகச் செயல்பாடுகள் மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளுக்குத் தேவையான முடிவை BOD எடுக்கிறது.

## 1.1. PUC களின் விசேடமான அம்சங்கள்

இலங்கையில் உள்ள சிறு விவசாயிகள் தனித்தனியாக தொடர்ந்து செயற்படுகின்றனர், அங்கு விவசாய **உற்பத்திகளை மொத்தமாக** இரு வழிப் போக்குவரத்து செலவுகளும் உள்ளடங்கும் வகையில் விற்பனை செய்தல் மற்றும் விவசாய **உள்ளீடுகளை சில்லறை விற்பனையில்** கொள்வனவு செய்வதற்கிடையேயான வேறுபாட்டினை நன்கு அறிந்துள்ளனர். இது விவசாயத்தை ஒரு நஷ்டமடைந்த நிறுவனமாக மாற்றியுள்ளது. இதன் காரணமாக விவசாய குடும்பங்களில் உள்ள பெரும்பான்மையான அங்கத்தவர்கள் பிற வணிக வாய்ப்புகளை அல்லது இலாபம் சார்ந்த சேவைகள் அல்லது தொழில்துறை துறைகளில் வேலை தேடுகின்றனர். இந்தப் போக்கை மாற்றியமைப்பதற்கான ஒரு வழியாக, முதலீட்டு மற்றும் இலாபகரமான சிறு பண்ணை விவசாய வணிகத்தின் மீதான அதிகரித்த வருமானத்தை அடைந்து கொள்வதற்காக விவசாயிகளின் உள்ளீடு மற்றும் வெளியீட்டு சந்தை தேவைகளை ஒருங்கிணைக்க/ஒருங்கிணைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட/ கூட்டிணைக்கப்பட்ட விவசாய வணிக செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் PUC கள் பிரதானமாக நிறுவப்பட்டுள்ளது. PUCகள் அதன் பங்குதாரர்களுக்கு முழுமையாகச் உரித்தானதான நிர்வகிக்கப்படுகின்றன, அங்கு ஒவ்வொரு அங்கத்தவர்களும் அவர்களுக்குரிய பங்கிற்கு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட பெறுமதியைப் சந்தாவாக பெற்றுக் கொள்கின்றனர். நிறுவனத்தின் ஆரம்ப மூலதனத்தை உருவாக்குவதற்காக சந்தா செலுத்திய பங்குதாரர்கள் மிகவும் சக்தி வாய்ந்த உரிமையாளர்களாவார்கள். உத்தியோகபூர்வ பங்கு முதலீட்டிற்கு பங்களித்த பின்னரே இலங்கையின் கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக உறுப்பினர்களின் உரித்துக்கள் /உரிமைகள் செல்லுபடியாகும்.

பங்குதாரர்கள் அனைவரும் அவர்களது கிராம உத்தியோகத்தர் பிரிவு/ விவசாய ஆலோசகர் பிரிவுகளுக்கு அடிப்படையில் குழுக்களாக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுவும் அவற்றிற்குரிய PUC களுக்குமான நிறைவேற்று பிரிவுகளை உருவாக்குவதற்காக அவர்களது பிரதிநிதிகளை அடையாளம் காணவேண்டும். கம்பனிக்கான பணிப்பாளர் சபை மற்றும் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக பொறுப்பு நிறைவேற்றுப் பிரிவினை சாரும். ஐரோப்பிய ஒன்றிய (EU) மாவட்டங்களின் கீழ் உள்ள PUCகள் குறிப்பிட்ட PUCக்கான தெரிவுசெய்யப்பட்ட பெறுமதி சங்கிலிக்கு அமைவாக 75 முதல் 600 வரையான எண்ணிக்கையில் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளன. **(இணைப்பு 1 ஐப் பார்க்கவும்)**

அடையாளம் காணப்பட்ட பெறுமதி சங்கிலி மற்றும் மாற்று வருமானத் தெரிவுகளின் அடிப்படையில் பொது நலனுக்காக PUC உருவாக்கப்பட்டு நிறுவப்பட்டது, இது பங்குதாரர்கள் ஆண்டு முழுவதும் நிலையான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகிறது. கூடுதலாக சேர்க்கப்பட்ட பெறுமதியுடன் ஏற்றுமதி சந்தைகளை அடைவதை இலக்காகக் கொண்டு இலங்கை மக்களுக்கு உணவைப் பாதுகாப்பதற்காக உற்பத்தித்திறனை இரட்டிப்பாக்க அதே வேளையில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க GOSL இன் பணியின் ஒரு பெரிய பொருளாதார நோக்குடன் இந்த கருத்து இணைக்கப்பட்டுள்ளது.

### 1.1.1. PUC களின் கொள்கைகள்

கூட்டிணைந்த அனுகுமுறைகளுக்கு அத்தியாவசியமானவையாக PUC கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகையால், ஏனைய விவசாய வணிக கம்பனிகளுக்கு நிகரான வணிக கொள்கைகளை பின்பற்றுவது அவசியமாகும். அடையாளம் காணப்பட்ட வணிகக் கொள்கைகள் பின்வருமாறு,

- பெறுமதி சங்கிலி நோக்குடன் கூடியதாக பிரதானமன பெறுமதி சங்கிலிக்கான முன்னுரிமையுடன் PUC உருவாக்கப்பட்டுள்ளது.
- இலாபமீட்டக்கூடிய வணிக செயற்பாடுகள் மற்றும் அபாயங்களைத் இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கான செயலுபாயங்களை அடையாளம் காணல்.
- அங்கத்தவர்களுடன் நிறுவப்பட்டுள்ள தொடர்பாடல் மற்றும் வலையமைப்பினூடாக கம்பனி செயற்பாடுகள்/ கொடுக்கல் வாங்கல்கள்/ நிதி நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையினை பேணுதல்.
- கம்பனியினால் வழங்கப்படும் சேவைகளின் போது அனைத்து பங்குடைமையாளர்களும் சமமாக நடாத்தப்படுவதுடன் அனைவரும் சம அனுகூலங்களை வழங்குதல்.
- உரிய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளை உருவாக்குதல்.
- தனிப்பட்ட பங்குதாரர்கள் சேமிப்பு மற்றும் கடன் தொடர்புகளுக்காக முறையான வங்கிகளை அனுகுவதற்கு வசதியளித்தல்.
- சமூக மற்றும் சுற்றாடல் சார் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்தல்.

### 1.1.2. PUC கள் இருப்பதன் அனுகூலங்கள்

- சட்டபூர்வமாக வலுவூட்டப்பட்ட PUC களின் மூலம் எதிர்கால அங்கத்தவர்கள்/ பங்குதாரர்கள் அனுகூலம் பெற்றுக் கொள்கின்றனர்.
- பல்வேறு விவசாய வணிக நடவடிக்கைகளுக்கு பல்வேறு சந்தை அணுகல்/பிற PUCகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான பொதுவான தளத்தை உருவாக்கி கூட்டு அணுகுமுறையுடன் சிறு உற்பத்தியாளர்களுக்கு PUCகள் பலம் அளிக்கின்றன.
- முதன்மை தயாரிப்புகளின் ஒருங்கிணைப்பு PUC களை நம்பகமான/நம்பிக்கையான விவசாய வணிக நிறுவனமாக உயர்த்துவதை உறுதி செய்யும்.
- ஏனைய கொத்தணி மொடியுல்களுடன் ஒப்பிடும்போது வங்கிகளின் அங்கீகாரம் அதிகமாக இருக்கும் முறையான வங்கிகளால் அங்கீகரிக்கப்பட்டது

- உள்ளீடு வழங்குனர்கள், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய விவசாய வணிக நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு, PUC உடன் பங்குடைமை/ வணிகம்/ வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது
- தொழிற்பாடுகள் அனைத்தும் தெளிவாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்ளப்படுகின்றன. அவை ROC இற்கு அவசியமான உள்ளக மற்றும் சட்டரீதியான கணக்காய்வுகளூடாக (பங்குதாரர்களின் அதிக நம்பிக்கைக்கு வழிவகுத்த கணக்காய்வுகள்) உறுதி செய்யப்படுகின்றன.
- குறைந்தளவிலான அரசியல் தலையீடு. அரசியல் தலையீடு இல்லாத தன்மை காணப்படக்கூடும்.
- PUC மாதிரியானது நாடு முழுவதிலும் இருந்து மூலப் பொருள் உற்பத்தி அல்லது சந்தைப்படுத்தலை செயல்படுத்த உதவுகின்றது.

### 1.1.3. சட்ட ஒழுங்குமுறை மற்றும் நிர்வாக கட்டமைப்பு

பிரதானமாக செல்லுபடியாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன;

- தேசிய அரசியலமைப்பின் ஏற்பாடுகள்
- பாராளுமன்ற சட்டம் இயற்றுதல் –2007 ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம்
- அரச சுற்றுநிருபங்கள் – வரிகள், ஊழியர் சேமலாப நிதியம் (EPF)/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ETF), கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள்
- சங்கத்தின் யாப்பு (AoA)
- அங்கத்தவர்கள், PUC, மற்றும் PPMU ஆகியவற்றிற்கிடையேயான முத்தரப்பு உடன்படிக்கை
- மூலதனப் பங்கிற்கான ஒன்று சேர்ந்த அங்கத்தவர்கள்- ROC ஆல் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ பங்குச் சான்றிதழ்க்கள்
- உரிய பங்குதாரர்கள் மற்றும்  இலங்கை அரசிற்கிடையேயான (GOSL) புரிந்துணர்வு ஒப்பந்தம்

## 1.2. PUC இன் வகை கூறல்

PUC களின் நிறைவேற்றுக் குழு (EC)/ பணிப்பாளர் சபை (BOD) ஆகியன முகாமைத்துவம்/ தொழிற்பாடுகள் அனைத்தும் AoA இனால் வழங்கப்பட்டுள்ள விதமாக நிறைவேற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்பதுடன், இலங்கை கம்பனிப் பதிவாளரால் (ROC) விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கிவிதிகள் மற்றும் சட்டங்களின் அடிப்படையில் நியமங்கள் மற்றும் வழக்கமான நடைமுறைகளுக்கு அமைவாக அவை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

AoA என்பது கம்பனிக்கான ஒரு வழிகாட்டி வரைபடமாகும், இது அனைத்து PUCக்களுக்கும் கிடைக்கும், மேலும் ஒவ்வொரு PUC தொடர்பான வணிகப் பதிவு ஆவணங்களுடன், அனைத்து செயற்குழு அங்கத்தவர்களும் கையொப்பமிட்டு இணக்கம் தெரிவித்திருந்தனர்.

கம்பனியின்  செயற்பாடுகளை வெளிப்படையான முறையில் நிர்வகிக்கும் நியமங்களுக்குட்பட்ட நடைமுறைகளை AoA குறிப்பிடுகிறது. விரிவான நியமங்கள் மற்றும் நடைமுறைகள் AoA இல் உள்ள பல்வேறு பிரிவுகளின் கீழ் உட்பிரிவுகளின் எண்ணிக்கைகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந் நியமங்கள் மீறப்படும் பட்சத்தில் கம்பனியினூடாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும்.

PUCக்கள் தேசிய கொள்கை சட்டகத்தினுள் அவற்றின் தொழிற்பாடுகளை அமைத்துக்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் படி,  பணிப்பாளர் சபையானது பங்குதாரர்களின் திருப்தியை பெற்றுக் கொள்ளும் வகையில், வினைத்திறன் மிக்க வகையில் வள ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன், கம்பனியின் பணத்திற்கான பெறுமதி/லாபம் உறுதிசெய்யப்படுகின்றது.

மேலும் PUC கள் நிரல் அமைச்சுக்களுக்கு, குறிப்பாக கமத்தொழில் அமைச்சு, உள்ளக மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான அரசாங்கங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும், மேலும் அவை அனைத்து பங்குதாரர்களுடனும் வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவம் உள்ளிட்ட சிறந்த நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும். அனைத்து PUCகளும் வணிக செயற்பாடுகள், கம்பனியின் தீர்மானங்கள், அங்கத்தவர்களது பதில், பெறுமதி சங்கிலி மேம்பாடு, நிதி மூலங்களுக்கான அணுகல் போன்றவற்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பரப்புவதற்கான தெளிவான தொடர்பாடல் முறைமையொன்றை பராமரிப்பது அவசியமாகும்.

பின்வரும் செயற்பாடுகளை நிறைவு செய்வதை PUC கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- PUC இற்கான கம்பனிப் பெயர் மற்றும் அலுவலகத்தை நிறுவி கம்பனிப் பதிவாளரிடம் (ROC) அதற்கான வணிகப் பதிவினை செய்துகொள்ளல்.
- அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பங்களுடன் கூடியதாக PUC இற்கான வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பித்தல்.
- கம்பனிப் பதிவாளரின் அனுமதி பெற்றுள்ள கம்பனிச் செயலாளர் மற்றும் கம்பனி கணக்காய்வாளர்களை நியமித்துக்கொள்ளல்.
- உத்தியோகபூர்வ விண்ணப்பப் படிவங்களை வழங்குவதனூடாக பங்குகளில் முதலீடு செய்யக்கூடிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளல்.
- கம்பனி செயலாளரின் ஒருங்கிணைப்புடன் பங்குதாரர்களுக்கான பங்குச் சான்றிதழ்களை ஏற்பாடு செய்து விநியோகித்தல்.
- அங்கத்தவர்கள்/ பங்குதாரர்கள் உள்ளடங்கிய பதிவுப் புத்தகம் ஒன்றை ஆரம்பித்து பேணுதல்
- பதிவு செய்து 6 மாத காலங்களுக்குள் பொது அங்கத்தவர்களுக்கான கூட்டத்தை நடாத்துதல்.
- மாதாந்த கூட்டங்களுக்கான கால அட்டவணை ஒன்றை தயாரித்தல்.
- கம்பனிப் பதிவாளரிடத்தில் (RoC) பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகளால் பயன்படுத்தப்படவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் படிவங்களுக்கு அமைவாக அனைத்து தொடர்புடைய பதிவுகள், ஏடுகள், கோவைகள், ஆவணங்க்கள் மற்றும் அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்தல். **(இணைப்பு 2 ஐப் பார்க்கவும்).**

### 1.3. வணிக தன்னாட்சி

உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பங்குதாரர்களுக்கு உதவுவதற்கும், மலிவு விலையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும், விளைபொருட்களை ஒருங்கிணைப்பதற்கும், அவர்களின் விளைபொருட்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கும், போட்டித்தன்மை வாய்ந்த பண்ணை விலைகளுடன் பல்வேறு சந்தை அனுகல்களைக் கவருவதற்கும் PUCகள் நிறுவப்பட்டுள்ளன.

பங்குதாரர்களின் நலன்களை உறுதி செய்து பாதுகாக்கும் அதே வேளையில் போட்டித் தன்மையுடன் கூடிய சந்தை சூழலில் வணிக ரீதியான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் PUC களுக்கு உள்ளது. இது தொடர்பில், மனித வள முகாமைத்துவம், அறிக்கையிடல் மற்றும் செயல்திறன் மதிப்பீடு உள்ளிட்ட நடைமுறைகள் பகுப்பய்வு செய்யப்பட்டு, தேவைக்கேற்ப பொது அங்கத்தவர்களுடன் கலந்தாலோசித்து புதுமையான அணுகுமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

பதிவு செய்த உடனேயே PUCகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளதன் படி கம்பனி மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்டக்கூடிய வகையிலான வணிக நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் வேண்டும்.

- உற்பத்தியில் நிலவும் ஒட்டுமொத்த தேவைகள்/ அவசியங்கள் மற்றும் இடைவெளிகளை அடையாளம் காணல் மற்றும் அங்கத்துவத்தால் கையாளப்படும் உற்பத்திகள் மற்றும் பொருட்களை வழங்கல்.
- வருமானம் ஈட்டுவதற்காக, பிரதானமான உற்பத்தியாளர் / வழங்குனர் கம்பனிகள், விவசாய வணிக நிறுவனங்கள் போன்றவற்றின் கீழ் விநியோக உரிமங்களுடன் ஒருங்கிணைந்த உள்ளீட்டு சந்தைப்படுத்தல் சேவைகளை உருவாக்குதல்.
- ஐந்து வருடங்களுக்குள் ஒருங்கிணைந்த பண்ணை விளைபொருட்களின் பெறுமதி சேர்ப்புக்களை அடைந்துகொள்வதற்கான வழிகளைத் தீர்மானித்தல் மற்றும் அங்கத்தவர்களது வருமானத்தை 50% வரை உயர்த்துதல்
- பகிரப்பட்ட சேவைகளை ஊக்குவித்து வசதியளித்தல் –இயந்திரங்கள், அறுவடைக்குப் பின்னரான செயன்முறை, களஞ்சிய வசதிகள் போன்றனவற்றை வாடகைக்கு எடுத்தல்.
- பங்குதாரர்களுக்கு வசதியாக நுண் நீர்ப்பாசனம், பண்ணை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் சேவை/ திருத்தச் செயற்பாடுகள்/ உதிரிப் பாக வசதிகள் போன்றனவற்றை மேம்படுத்துதல்.
- கூட்டு ஊக்குவிப்புக்கான வணிக வாய்ப்புகளைக் கண்டறிந்து பட்டியலப்படுத்துதல். அங்கத்தவர்கள் வருடம் முழுவதும் வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான வருமான வாய்ப்புகளை கண்டறிதல். (உ+ம்: வீட்டுத் தோட்ட வழங்கல், விவசாய சுற்றுலாத்துறை/ ஏற்பாட்டியல்)
- PUC இன் லாபகரமான செயல்பாட்டிற்காக வருடம் முழுவதும் உற்பத்தி/சந்தைப்படுத்தல் மற்றும் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகளுடன் வணிகத் திட்டத்தை உருவாக்குதல்

- விலைத் தெரிவுகளை ஆராய்தல் - விலை நடத்தை/சந்தை இடங்கள், வருடாந்த அல்லது பருவகாலம் தொடர்பான தயாரிப்புகளுக்கான தேவைகளின் போக்குகள் ஆகியவற்றுக்கான தரவுகளை பகுப்பாய்வு செய்தல்
- மலிவான விலையில் தொழில்நுட்ப பரிமாற்றம், சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துதல், மிகுந்த வினைத்திறனுடன் கூடிய/ உற்பத்தித் திறனுடக் கூடிய நடைமுறைகளை அடையாளம் காணல், மாதிரிகளை மீளுருவாக்கம் செய்தல்.
- AOA ஆல் நிர்ணயிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையின் வரம்புக்கு உட்பட்டு அனைத்து பயனாளிகளும் ஒரு அங்கத்தவருக்கு குறைந்தபட்சம் ஒரு கம்பனிப் பங்கில் முதலீடு செய்திருப்பதை உறுதி செய்தல். (முன்மொழியப்பட்ட பயனாளிகளின் மொத்த எண்ணிக்கையில் 5%)
- மலிவு விலையில் நிதி மூலங்களுக்கான அனுகல் வசதிகளை அதிகரித்தல். முறையான வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்துதல், மொத்தக் கடன் வசதிகள் மூலம் பங்குதாரர்களுக்கு ஆதரவளித்து சிறு உரிமையாளர்களை PUC மூலம் முறையான வங்கியுடன் இணைத்தல்
- அறுவடைக்குப் பின்னரான செயற்பாடுகள் மற்றும் சேமிப்பில் பகிரப்பட்ட சேவைகள் மூலம் உற்பத்திப் பொருட்கள்/வீட்டுத் தோட்டப் பொருட்களின் அறுவடை இழப்பைக் குறைத்தல்
- பெறுமதி சங்கிலியில் தரக் கட்டுபாட்டினை உறுதிப்படுத்துதல் – அறுவடைக்கு முன்னரான மற்றும் அறுவடைக்கு பின்னரான தொழிற்பாடுகள் மற்றும் சந்தைக்கான வழங்கல்.
- வீட்டுக்கு வீடு/ நிகழ்நிலை சந்தைப்படுத்தல் உட்பட நிறுவப்பட்ட வாடிக்கையாளர் குழுவுடன் தர அடையாள சமத்துவத்தை கட்டியெழுப்புதல்.
- முன்னணி ஏற்றுமதி நிறுவனங்களுடன் மறைமுக ஏற்றுமதியாளர் இணைப்பாக அனுபவத்தைப் பெறும்போது நேரடி ஏற்றுமதி வாய்ப்புகளை கண்டறிதல்.
- உறுப்பினர்கள் அணுகக்கூடிய திட்டங்கள் மற்றும் திட்டங்களை அணுகுவதற்காக பொது/தனியார் நிறுவனங்களுடன் வலையமைப்புக்களை உருவாக்குதல்.
- அங்கத்தவர்களாக பங்குதாரர்களுடன் வலுவான தொடர்பாடல்/ வலையமைப்பு மற்றும் தகவல் பரவலை உறுதிசெய்தல்.

*தயவு செய்து **இணைப்பு 23** இல் தரப்பட்டுள்ள பயனுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிகளைப் பார்க்கவும் – இதனூடாக PUC கள் அவற்றிற்கு அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.*

## 1.4. PUC களின் முகாமைத்துவத்தில் எதிர்நோக்கும் சவால்கள்

- பதிவு செய்வதற்கான அதிக செலவு மற்றும் மீள் பதிவுக்கான நடைமுறைகள் குறிப்பாக பணிப்பாளர்கள், கம்பனியின் முகவரி போன்றவற்றில் மாற்றம் செய்தல், கம்பனிப் பதிவாளருடன் நேரடியாகவும் நிகழ்நிலை தளங்களூடாகவும் ஒருங்கிணைப்பை பேணுவது அவசியமாகும்.
- தொழில்சார் முகாமைத்துவம்/ கணக்காய்வு/ பொருத்தப்பாடு போன்றன அவசியமாகும் போட்டித் தன்மையுடன் கூடிய சூழல், கம்பனியின் ஆரம்ப கட்டத்தில் சிரமங்களை எதிர்கொள்ளலாம்
- தொடர்ச்சியான வரி மற்றும் கணக்காய்வு பொருத்தப்பாடு - நிறுவனத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அறிவு பெற வேண்டும்
- கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வருமானப் பதிவுகளை நிகழ்நிலை மற்றும் வழமையான முறையில் மேற்கொள்ளல்.
- பயிற்றப்பட்ட மற்றும் திறன் மிக்க மனித வளத்தை பெறுகை செய்வதில் வரையறைகள் காணப்படுகின்றன.
- வணிகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு போதியளவு நிதிசார் இயலுமை, தயார்நிலை இல்லாமை.
- ஒரு உற்பத்தியாளர்/சந்தை தளத்தின் கீழ் பலதரப்பட்ட சந்தைப்படுத்தல்களை பேச்சுவார்த்தை நடத்தவும் ஈர்க்கவும் தனிப்பட்ட மற்றும் திடீர் விவசாயப் பாரம்பரிய நடைமுறையை ஒருங்கிணைந்த சரியான நேரத்தில் விவசாய முறைக்கு மாற்றுதல்
- PUCs இன் உள்ளே நிலவும் சிக்கலான நிலமைகள் காரணமான வணிக செயற்பாடுகளுக்கு தடங்கல்கள் ஏற்படுகின்றன.

## 1.5. PUC இன் குறிக்கோள்கள்

- சிறு பண்ணை உற்பத்தியாளர்களை வணிக ரீதியான விவசாய வியாபாரங்களாக அங்கீகரித்தல்.
- பயிர்களின் பெறுமதிச் சங்கிலிகளைத் தெரிவு செய்வதற்காக விவசாயிகளால் வலுவூட்டப்பட்ட விவசாய வியாபாரத் தளங்களை உருவாக்குதல்.
- நேரடி சந்தை அனுகலுடன் கூடிய பகிரப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல்.
- கூட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் விலை அனுகூலங்களை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனம்சார்/ சந்தை முறைமை மற்றும் வழங்கல் மூலங்கள் ஆகியவற்றிற்கிடையே தொடர்பாடல் வலையமைப்பினை ஏற்படுத்துதல்.
- நல்லாட்சி மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்கள் மூலம் மேம்படுத்தப்பட்ட விவசாய வணிகத் தொழிறபடுகள்
- மேம்படுத்தப்பட்ட வருமானம், இலாபப் பகிர்வு, மற்றும் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ நலன்புரி ஆகியவற்றுடன் தொடர்புடைய ஏனைய சேவைகள் மூலம் அங்கத்தவர்களது திருப்தி மற்றும் தரித்திருத்தலை உறுதிப்படுத்துதல்.

### PUC இன் நோக்கக் கூற்று

“பங்குதாரர்களின் திருப்திக்காக நிலையான விவசாய வணிக முயற்சியாக முகாமை செய்யவும் தொழிற்படுவதாற்கும் ஒருங்கிணைந்த விவசாயி சார்ந்த நிறுவனத்தை நிறுவுதல்”

### PUC இன் பணிக்கூற்று

சிறிய விவசாய வணிக தொழில் முயறியாளர்களான சிறு பண்ணைகளைக் கொண்டிருப்பவர்களது வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான தொழில்நுட்பங்கள், பயிர்களின் உற்பத்தித் திறன், விவசாய வளங்களின் வினைத்திறன் மிக்கதும் நிலைபேறுடன் கூடியதுமான பயன்பாடு, உட்கட்டமைப்பு வசதிகளைப் பகிர்தல் மற்றும் தனியார்/பொது நிறுவன அமைப்புகளுடன் வலையமைப்பினை ஏற்படுத்துதல்.

PUC களின் வணிகத் தொழிற்பாடுகளுக்கு அமைய மேற்படி கூற்றானது மாற்றத்திற்குட்படலாம். நிறுவனத்திற்கு பொருத்தமான கூற்று ஒன்றை தயாரித்து நிறுவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள கம்பனி செயலாளருடன் ஒருங்கிணைப்புச் செய்ய/ கலந்துரையாட PUC களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

## 2. PUC களின் தொழிற்பாடு மற்றும் முகாமைத்துவம்

PUC களின் குறிக்கோள்களை தொழிற்படச் செய்வதற்காகவும் கம்பனியின் பங்குதாரர்களை திருப்தியடையச் செய்யக்கூடிய வகையில் சிறந்த திறன்களுடன் கூடியதாக கம்பனியின் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கம்பனியின் முகாமைத்துவ பதவிகள், தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினருக்குரிய பொறுப்புக்கள், அதிகாரங்கள், வகைகூறல்கள் என்பனவற்றை தெளிவாக வரையறை செய்வதற்கான உறுதியான பொறிமுறை அல்லது செயன்முறை ஒன்றைக் கொண்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். அனைத்து PUC களும் நிறுவனத்தின் அனைத்து முக்கிய செயற்பாடுகளையும் உள்ளடக்கிய முறைமைகள், செயன்முறைகள் மற்றும் நெறிமுறைகளை தெளிவாக வரையறுக்க வேண்டும்.

கம்பனியின் உருவாக்கத்திற்காக குழு சேர்ந்துள்ள அனைத்து உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக நிறைவேற்றுக் குழுவை (EC) தெரிவு செய்யும் போது மொத்த உறுப்பினர்களின் பங்கேற்பின் மூலம் முகாமைத்துவ அலகு உருவாக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களால் கம்பனியின் பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்படும். பணிப்பாளர் சபை அங்கத்தவர்களால் தலைவர் பதவிக்கு பொருத்தமான ஒருவர் அடையாளம் காணப்படுவார். கம்பனியின் பங்கு மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள அங்கத்தவர்கள் மிகவும் வலுமிக்க துறையினராக காணப்படுகின்றனர்.

PUC களை பதிவு செய்த பின்னர் கம்பனியின் தொழிற்பாடு சார்ந்த சட்டபூர்வமான தேவைகளுடன் இணங்கி செயற்படுவது அவசியமாகும். அவை பின்வருமாறு,

- கூட்டிணைக்கப்பட்டு ஒரு மாத காலத்தினுள் முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தை நடாத்துதல்.
- இறப்பராலான உத்தியோகபூர்வ பதவி முத்திரை மற்றும் பொறிக்கப்பட்ட முத்திரை ஆகியவற்றை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல். இவை தலைவர் அல்லது பொறுப்பளிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரிடம் பாதுகாப்பாக பராமரிக்கப்படல் வேண்டும்.
- குறியீடு ஒன்றை வடிவமைத்து உருவாக்குதல் மற்றும் கடிதத் தலைப்புகளுக்கான வசனங்களை உருவாக்குதல்.
- நிதி வருடம் நிறைவடைந்து 03 மாத காலப் பகுதியினுள் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துதல்.

- மாதாந்தம் தொடர்ச்சியாக சபைக் கூட்டங்களை நடாத்துதல். இரு சபைக் கூட்டங்களுக்கிடையே இடைவெளிக் காலம் ஒரு போதும் 90 நாட்களைத் தாண்டலாகாது (3 மாதங்கள்)

நியமிக்கப்பட்ட கம்பனி செயலாளர் ஒருவருடன் தொடர்புறுவதனூடாக மேற்படி அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் கம்பனியில் பதிவுகளை பேணுவது அவசியமாகும்.

## 2.1 PUC களின் நிறுவனக் கட்டமைப்பு

**தலைவர்**
பணிப்பாளர் சபையினால் பிரேரிக்கப்படுவார்

பணியாளர்கள்
முகாமையாளர்/
கணக்காளர்

**பணிப்பாளர் சபை**
நிறைவேற்றுக் குழுவினால் பிரேரிக்கப்படும் 5-7 அங்கத்தவர்கள்

ஆலோசனைப்
பணிப்பாளர்கள்/
DOA

**நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள்**
பொது அங்கத்தவர்களிலிருந்து 9-15 பேர் பிரேரிக்கப்படுவர்

**ஒவ்வொரு பெறுமதி சங்கிலியின் கீழும் தெரிவு செய்யப்பட்ட பங்குதாரர்களான விவசாயிகள்**
(தெரிவு செய்யப்பட்ட பெறுமதி சங்கிலிக்கு ஏற்ப பங்குதார்ர்களின் எண்ணிக்கை 75 முதல் 600வரை காணப்படலாம்)

## 2.2. பல்வேறு மட்டங்களிலும் உள்ள அங்கத்தவர்களது பொறுப்புக்கள்

### 2.2.1. தலைவரின் பொறுப்புக்கள்

பணிப்பாளர் சபையினர் ஒருமனதாக அல்லது பெரும்பான்மையான வாக்குகளுடன் தலைவர் தெரிவு செய்யப்படுவார். பதவிக் காலம் ஒரு வருடம் என்பதுடன் உச்ச பட்சம் இரண்டு வருடங்களாகும். ஆலோசகர் பதவியில் நியமனம் செய்யப்பட்ட இயக்குனர் ஒருபோதும் தலைவராக முடியாது. இன் கீழ் பதிவு செய்யப்பட்ட சில பணிப்பாளர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவரே தலைவர் ஆவார். தலைவர் ஒருவரை நியமித்தல் அல்லது மாற்றுதல் PUC இன் ஒரு உள்ளகச் செயற்பாடாகும் என்பதுடன் ROC இற்கு அதில் எந்தவித தொடர்பும் இல்லை.

- PUC ன் தலைவர் கம்பனியின் நாளாந்த செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளார்.
- தலைவர் சபைக்கும் பொது அமைப்பிற்கும் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளார்
- நிதி மற்றும் வளங்களைத் திரட்டும் பொறுப்புதாரராவார்
- திறைசேரி முகாமைத்துவம் – வங்கிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு கையொப்பமிடும் ஒரு நபராவார்.
- வியாபார உடன்படிக்கைகள்/ கம்பனியின் கடன் ஆவணங்கள் போன்றவற்றில் கையொப்பமிடுபவர்
- அங்கத்தவர்களது பங்குப் பங்களிப்புக்களூடாக சந்தாக்கள்/ வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு பொறுப்பானவர்.

- நிதி மற்றும் நிதி அல்லாத, வளங்கள், பகிரப்பட்ட சேவைகளை திரட்டுதல்.
- தெரிவு செய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலி, துணைப் பெறுமதி சங்கிலிகள் மற்றும் அவற்றை செயற்படுத்துதல் ஆகியவற்றின் கீழ் திட்டமிடல்/தயாரித்தல் மற்றும் வணிகத் திட்டத்தை நிறுவுதல் ஆகியவற்றின் பொறுப்பு.
- உற்பத்தியை ஒருங்கிணைத்து சந்தைப்படுத்துவதற்கு வசதியாக கள அளவிலான சிறு குழுக்களில் நுண்ணிய அளவிலான திட்டமிடலை ஒருங்கிணைப்பதில் ஈடுபடல்.
- கம்பனியின் சந்தாதாரர்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்வதற்காக உள்ளூர், அரச, தேசிய, சர்வதேச நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், சேவை வழங்குநர்கள், சந்தை அணுகல், உரிமையாளர் வணிக நடவடிக்கைகள், நிதியளிப்பு முகவர் ஆகியவற்றுடன் பங்குடைமைகளை மேம்படுத்துவதற்குத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ROC உடன் PUC தொடர்பான அனைத்து சட்டப்பூர்வ மீளக் கிடைப்பனவுகளையும் நிரப்புவதை மேற்பார்வையிடுவது அவரது கடமை. – (வருடாந்த கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட கூற்றுகள், வருடாந்த அறிக்கைகள், பணிப்பாளர் சபை (BOD) அங்கத்தவர்களின் மாற்றம், AOA இல் திருத்தங்கள் போன்றன.
- அறிவித்தல்கள், கூட்டக் குறிப்புக்கள், பொருத்தப்பாட்டு அறிக்கைகள், கோரத்தை பேணுதல் ஆகியன சகிதம் வழக்கமான சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான அனைத்து விதிமுறைகள் மற்றும் சட்டத் தேவைகளை உறுதிப்படுத்துதல்.
- நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தினூடாக அல்லது பொதுக் கூட்டத்தினூடாக சபையின் வெற்றிடங்களை நிரப்புதல்.
- வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்தி அனைத்து உத்தேச செயற்பாடுகளுக்குமான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
- நிறைவேற்றுக் குழுவிற்கான (EC) வருடாந்த தேர்தலை நடாத்துதல் மற்றும் பொதுக் கூட்டத்தின் கோரிக்கைக்கமைய பணிப்பாளர் சபைக்கான (BOD) பெயர்களைப் பிரேரித்தல்.
- வரி மீளக் கிடைப்பனவுகளை சமர்ப்பித்தல், சான்றிதழ்கள், நியமங்கள், குறியீடுகள் மற்றும் இன்னோரன்னவற்றின் அனுமதிப் பத்திரங்கள்/ அனுமதிகளைப் புதுப்பித்தல்,

### 2.2.2. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்

PUC கட்டமைப்பின் கீழ் இருக்க வேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கை ஐந்தாகும். இருப்பினும் கம்பனியை உருவாக்குவதற்காக பங்களிப்புச் செய்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 15 பணிப்பாளர் வரை அனுமதிக்கப்பட முடியும். பெரும்பான்மையான அங்கத்தவர்களது பங்கேற்புடன் இடம்பெற்ற பொதுக் கூட்டம் மூலமாக தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று சபையினரால் பணிப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவர். பணிப்பாளரின் பதவிக் காலம் ஆகக் குறைந்தது ஒரு வருமாகவும் ஆகக் கூடியது இரண்டு வருடங்களுமாகும்.

- பெறுமதி சங்கிலியின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் தொடர்புடைய நிறுவன முறைமைகளுடன் இணைந்து PUC-யை முகாமை செய்வது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
- உரிய கால இடைவெளியில் சபைக் கூட்டங்களை நடாத்துதல்.
- கூட்டங்கள், தீர்மானங்கள், நிதி நிலைமைகள், கணக்காய்வுகள் மற்றும் இன்னோரன்னவற்றின் அனைத்து பதிவுகள் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுவதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த வேண்டும்
- நிலைபேறுடன் கூடிய விவசாய வணிகத்திற்கான வணிகத் திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டதன் படி PUC இன் செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- மற்றும் அதன் பங்குதாரர்களான அங்கத்தவர்களுக்கு சேமிப்பு மற்றும் கடன் வசதியளிப்பதற்காக முறையான வங்கியியல் சேவைகளுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் (பொது நிதி நிறுவனங்கள் – PFI)
- ஆக்கபூர்வமான வணிக வாய்ப்புக்களை அடையாளம் காண்பதனூடாக அங்கத்தவர்கள்/ PUC இன் முதலீட்டு இயலுமையை வலுவூட்டுதல்.
- மற்றும் அதன் பங்குதாரர்களது வங்கிக் கணக்குகள்/ நிதி நடவடிக்களை தொடர்ச்சியாக கண்காணித்தல்/ பராமரித்தல்/ நிர்வகித்தல்.
- கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் நிதிச் செயற்பாடுகள் குறித்த கம்பனிச் சட்டத்தின் கீழான சட்டத் தேவைகள் மற்றும் ஏனைய அரச விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுதல்.
- உள்ளக கணக்காய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் மற்றும் நிதி நிலைமைகள் தொடர்பில் பதிவுகளைப் பேணுதல் மற்றும் அவ் விடயங்கள் தொடர்பில் பங்குதாரர்களை இற்றைப்படுத்துதல்.

- PUC இன் நிதியாண்டு நிறைவில் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் தேவைக்கேற்ப பொதுக் கூட்டங்களையும் நடாத்துதல்.
- PUC இன் AoA இனூடாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் போன்றனவற்றைப் பின்பற்றுதல்.
- பொது அங்கத்தவர்களுடன் ஒருங்கிணைந்து, குறிப்பிட்ட சந்தை நிறுவனங்களுடன் உற்பத்திப் பொருளின் வகை மற்றும் விவசாயி/ சந்தைகள் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பதை உறுதிப்படுத்துவதற்கான கண்காணிப்புத் திட்டமும் உள்ளடங்களாக தரங்களின் அடிப்படையில் முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்ட விலைகளுடன் உற்பத்தி விற்பனை உடன்படிக்கையினை தயாரித்து செயற்படுத்துதல்.
- வாக்களிக்காத பணிப்பாளர்கள் என்ற வகையில் ஆலோசகர்கள்/ நிபுணர்களை இணைத்தல்.
- சட்டபூர்வமான தேவைகளுடன் பொருந்துதல்- கணக்காய்வு அறிக்கைகள், VAT, வரி, ஊழியர் சேமலாப நிதியம் (EPF), ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF), மற்றும் ஏனையவை.

PUC வணிக நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் விருத்ஹ்டி செய்வதற்கும் அவர்களின் பொறுப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு ROC இல் பணிப்பாளர்கள் அவர்களது பெயர்களைப் பதிவு செய்வது அவசியமாகும். பணிப்பாளர்களை நியமனம் செய்வது அல்லது மாற்றுவது அல்லது நீக்குவது என்பது ROCக்கு தெரிவிக்கப்பட்டு, PUC செயல்பாடுகளைத் தொடர அனுமதி பெற வேண்டும். பதிவுசெய்யப்பட்ட பணிப்பாளர்கள் மாத்திரமே, PUC கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் முறையான வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் வங்கி பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பெறுவார்கள். இச் செயற்பாடானது, ஆவணங்களைத் தயாரித்து, சபையின் தீர்மானத்தின் மூலம் வங்கிக்கு பரிந்துரைகளை வழங்கும் கம்பனிச் செயலாளரின் மூலம் அதியாவசியமாக வசதியளிக்கப்படுகின்றது.

### 2.2.3. நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் பொறுப்புக்கள்

- நிறைவேற்றுக் குழு என்பது பங்குதாரர் விவசாயிகளுக்கும் PUC க்கும் இடையே பாலமாக உள்ளது, அதே நேரத்தில் பணிப்பாளர் சபைக்கு (BOD) உதவும் வகிபாகத்தை அது வகிக்கின்றது.
- கள செயல்திறனை அறிக்கைப்படுத்துதல் மற்றும் சபைக்கு ஆலோசனை வழங்குதல்.
- PUC இன் தீர்மானங்கள், செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிதிட்டங்கள் தொடர்பில் பங்குதாரர்களான விவசாயிகளுடன் தொடர்பாடல் செய்தல், தகவல்களை வழங்குதல் மற்றும் பொது அங்கத்தவர்களிடமிருந்து அவர்களுக்கும் தகவல்களை வழங்குதல்.
- கள மட்டத்தில் PUC இற்காக திட்டமிடப்பட்டுள்ள அனைத்து வணிகச் செயற்பாடுகளையும் முகாமை செய்தல் மற்றும் செயற்படுத்தல்.
- அங்கத்தவர்களான விவசாயிகள்/ சந்தை அனுகலுடனான ஒருங்கிணைப்புடன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளைக் கண்காணித்தல்.
- ஒன்றிணைந்து உள்ளீட்டு வழங்கல் மற்றும் விநியோகத்தை ஏற்பாடு செய்தல்.
- ஒன்றிணைந்த வெளியீட்டு சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை ஏற்பாடு செய்தல்.
- பகிரப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள்/ இயந்திரங்கள்/ உபகரணங்களை செயற்படுத்துதல் மற்றும் முகாமை செய்தல், அன்றாட வியாபாரம் குறித்த பதிவுகளை பேணுதல் மற்றும் சந்தைப் பரிவர்த்தனைகளுக்கு வசதியளித்தல்.

**தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களும் ROC இல் பதிவுசெய்து, தேவை ஏற்படும் போது தற்போதுள்ள குழு அங்கத்தவர்களை மாற்ற அல்லது புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்க முடியும்.**

**தற்போதுள்ள குழுவில் அங்கத்தவர்களாக இல்லாத ஏனைய பங்குதாரர்களை PUC கண்டறிந்து பரிந்துரைத்தால், புதிய பணிப்பாளரின் நியமனத்தை சரிபார்ப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலமாக ROC க்கு பரிந்துரைகளை அனுப்ப வேண்டும்.**

### 2.2.4. அங்கத்தவர்களது பொறுப்புக்கள்

*அனைத்து தனிப்பட்ட உற்பத்தியாளர்களும்/உற்பத்தியாளர் குழுக்களும் பங்கு மூலதனத்திற்கு சந்தா செலுத்துவதன் மூலமும், முன்னராக ROC இன் கீழ் பதிவு செய்ததன் மூலமும் மட்டுமே PUC இல் அங்கத்தவராக முடியும். பதிவுசெய்யப்பட்ட பங்குதாரர்களின் பங்கேற்புடன் மட்டுமே PUC முறையான பொதுக் கூட்டங்களை நடத்தலாம். ஆகையால், , PUC அனைத்து பயனாளிகளையும் பங்களிப்பதற்கும் கம்பனிப் பங்குகளில் முதலீடு செய்வதற்கும், எந்தவொரு முறையான மன்றங்களிலும் தீவிரமாக பங்கேற்க தகுதியான பங்குதாரர்களாக மாறுவதிலும் தலையிட வேண்டும்.; கம்பனிச் சட்டத்தின் படியான பொதுக் கூட்டங்கள்/ வருடாந்த பொதுக் கூட்டம்/ அதிவிசேட பொதுக் கூட்டங்கள்*

***அங்கத்தவர்கள் பின்வருவனவற்றிற்கு பொறுப்பானவர்களாவர்***

- *ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தில் பங்களிப்புச் செய்வதற்கான அர்ப்பணிப்பு*
- *வணிகத் திட்டத்தின் பிரகாரம்* PUC *இனால் ஒழுங்குசெய்யப்பட்ட செயற்பாடுகள்/ நிகழ்வுகளில் முனைப்புடன் பங்கேற்றல்.*
- PUC *இனால் அழைப்பு விடுக்கப்படும் கூட்டங்களில் கட்டாயமாக கலந்துகொள்ளல்.* (*சபை அல்லது நிறைவேற்றுக் குழு)*
- *பணிப்பாளர் சபையினரை தெரிவு செய்வதற்கான பொறுப்பு*
- *கூட்டத்தில் கலந்துரையாடலுக்கான நேரத்தில் கருத்துக்களைத் தெரிவித்தல்.*
- *நிர்வாகம் பணிகளைச் செய்யத் தவறினால் அல்லது கம்பனியின் செயல்திறன் மற்றும் அதன் நிலைபேறுடன்கூடிய தன்மையை பாதிக்கக்கூடிய தவறான திசையில் நகர்ந்தால், தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். (தேவையான சட்ட நடவடிக்கை).*
- *ஒடுக்குமுறைகள் மற்றும் தவறான முகாமைத்துவம் போன்ற சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் சட்ட சபைக்கு விண்ணப்பித்தல்.*
- *PUC/சந்தை அணுகலுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின்படி சரியான நேரத்தில் பயிரிடல் மற்றும் உற்பத்திப் பொருட்களை வழங்குவதற்காக PUC செயற்பாட்டுத் திட்டத்தை கடைபிடித்தல்.*
- *கம்பனியின் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு வாக்களித்தல்.*
- *தேவைக்கேற்ப அதிவிசேட மற்றும் விசேட பொதுக் கூட்டங்களை நடாத்துமாறு கோருதல்.*

*அனைத்து PUC நிர்வாகத்திற்கும் முகாமைத்துவம் மற்றும் செயல்பாட்டு அம்சங்களின் திறனை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியான சேவையில் பயிற்சி அவசியமாகும்.* PUC *வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும், வணிக நடவடிக்கைகள் அல்லது நிறுவனத்தை முகாமை செய்தல் குறித்த போதிய அறிவு மற்றும் விழிப்புணர்வு இல்லாததால், வணிகம் செய்ய இன்னும் தயாராக இல்லை.*

*ஆகையால் நிறைவேற்றுக் குழு மற்றும் பணிப்பாளர்கள் சபையினருக்கு அவர்களது தொழிற்பாடு மற்றும் இயக்க வினைத்திறன் ஆகியவற்றை அதிகரித்து கம்பனியின் நிலைபேறுடன் கூடிய எதிர்காலத்தை அடையும் பொருட்டு, அவற்றின் அங்கத்தவர்களுக்கு தொடர்ச்சியாக இயலளவு விருத்தி/ ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்* ***(அடையாளம் காணப்பட்ட பயிற்சித் தெரிவுகளை இணைப்பு 13 இல் பார்வையிடவும்)***

## 3. மனித வள முகாமைத்துவம்

### 3.1. ஆளணித் தேவை

நிர்ணயிக்கப்பட்டவாறு ஏதேனும் ஆளணிப் பதவியொன்றிற்கு ஆட்சேப்பு செய்யும் போது PUC கள் பொது அங்கத்தவர்களது அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். BOD இனால் நிர்ணயிக்கப்பட்டவாறு முகாமையாளர், கணக்காளர், விற்பனையாளர், அலுவலக உதவியாளர் போன்ற பதவியாளர் போன்ற பதவிகள் அடையாளம் காணப்படலாம். இவ் விடயத்தில் வெளிப்படைத் தன்மையை பேணும் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதறகான தீர்மானம் பொது அங்கத்தவர்களால் அனுமதிக்கப்படுவது அவசியமாகும். ஆட்சேர்ப்புக்குரிய சிறந்த நடைமுறைகளை அவதானிப்பதற்காகவும், சம்பள மட்டங்களில் தீர்மானமெடுப்பதற்காகவும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட மனித வளத்திற்கான தொழில் விபரங்களை தயாரிப்பதற்காகவும் உரிய DPD கள்/ மாகாண ASMP அலுவலகங்கள் மற்றும் உரிய திணைக்களங்களுடன் ஒருங்கிணைப்புடன் செயற்படுவது அவசியமாகும்.

### 3.2. ஆட்சேர்ப்பு நடைமுறை/ அனுமதி

ஆளணி ஆட்சேர்ப்புக்காக பணிப்பாளர் சபை (BOD) தொழில் விபரம், அவசியமான தகைமைகள், வழங்கப்படும் சம்பளம், ஆளணிக்குரிய நிதி ஏற்பாடுகள், அனுகூலங்கள், வேலை செய்வதற்கான சூழல், நேரம் போன்றன

உள்ளடங்கிய பொதுச் சபையில் அல்லது விசேட பொதுச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தொடர்பில் பொது அங்கத்தவர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆளணி ஆட்சேர்ப்பு/ சம்பள மீளாய்வு ஆகியன தொடர்பான தீர்மானங்கள் உற்பத்தி/ சந்தைப்படுத்தல் திட்டம்/ மனித வளத் திட்டம்/ PUC இன் செயற்பாட்டுத் திட்டம் ஆகியன உள்ளடங்கிய வணிகத் திட்டத்தின் தொழிற்பாடுகளின் மதிப்பீடு/ கணிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த மதிப்பீடானது பிரேரிக்கப்பட்ட BOD/EC அங்கத்தவர்களால் மேற்கொள்ளப் படவேண்டும்.

எந்தவொரு ஊக்குவிப்புத் தொகையும் எப்போதும் செயல்திறனின் அடிப்படையிலும், வணிகத் திட்டம் மற்றும் அதன் செயலுபாயங்களிலிருந்து பெறப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் நிறுவப்பட்ட பணிகள் மற்றும் செயல்பாடுகளுக்கு ஏற்பவும் இருக்க வேண்டும் என்பதை PUCகள் உறுதி செய்ய வேண்டும்.

### 3.3. மனித வள திட்டமிடல்

வணிகத் திட்டமானது, தெரிவுசெய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலியின் ஒவ்வொரு செயற்பாடு/துறை அல்லது உற்பத்தி, வழங்கல், செயன்முறையாக்கத்தின் சந்தைப்படுத்தல், விநியோகம் போன்ற PUC இன் பிரிவுகளின் கீழ் ஒருங்கிணைந்த மனித வளத் தேவைகளை உள்ளடக்கும்.

PUC கள் கம்பனியின் கட்டமைப்பை தெளிவாக அடையாளம் கண்டுள்ளது; சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு நிறுவனக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.




மேலே தரப்பட்டுள்ளது நிறுவனக் கட்டமைப்பொன்றின் உதாராணம் மாத்திரமே ஆகும். பெறுமதிச் சங்கியிலியின் கீழுள்ள ஒரு குறிப்பிட்ட PUC இன் கட்டமைப்புடன் பொருந்தும் வகையில் இது மாற்றம் செய்யப்படலாம்

### 3.4. ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு அடுத்த கட்ட திட்டங்கள்

ஒவ்வொரு PUC களும் PUC இன் வருடாந்த செயல்திறன் மீளாய்வுக்கு ஏற்ப அவற்றின் மனித வளத் தேவைகளை அடையாளம் காணவேண்டும். வேலை செய்யும் துறை அல்லது பணியின் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில் விவரிப்பு

தொழில்/ கல்வித் தகைமைகள்

உரிய துறையில் அனுபவம்

மொழி அறிவு/ கணிணி அறிவு

வயதெல்லை

ஆட்சேர்ப்பு முறை – விளம்பரம் (வெளியக/ உள்ளக), தேடிப் பெறல், புள்ளி வழங்கல் திட்டத்துடன் கூடிய நேர்முகப் பரீட்சை

*சபையானது பணியாளர்களுடன் செயல்திறன் உடனபட்டிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட வேண்டும். இதன் மூலமாக செயலுபாயத் திட்டம் மற்றும் பணியாளரின் செயல்திறன் என்பன ஒப்பிடப்பட்டு அவர்களது செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட முடியும் என்பதுடன், சம்பள ஏற்றங்கள் மற்றும் ஊக்குவிப்புத் தொகைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும்.*

*நிறுவனக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுக்கான பிரதானிகளாக உள்ள பணிப்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவின் பணியாளர் ஒருவர் இராஜினாமா செய்யும் பட்சத்தில் அவரது கடமைகளை செய்வதற்குரிய பொறுப்பை கொண்டுள்ளார். அதன் படி புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் வரையில் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை செய்தல் வேண்டும்.*

*தொழிலின் வகை (நிரந்தரம்/ தாற்காலிகம்/ அமையம்/ ஒப்பந்தம்), தகுதிகாண் காலம், அனுகூலங்கள் உட்படலாக சம்பளம் (ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம். மற்றும் ஏனைய உரித்துடையவைகள்), வேலைத் தளம், உரித்துடைய விடுமுறைகள், தொழிலை முடிவுறுத்துவதற்கான நிபந்தனைகள் (அறிவித்தல் வழங்க வேண்டிய காலம்), அலுவலக ஒழுக்கம், வெளித்தோற்றம், ஒழுக்கம், கீழ்ப் படிதல், கையளிக்கப்பட்டுள்ள கடமைகள், செயல்திறன் மதிப்பீடு, அறிக்கையிடும் உத்தியோகத்தர் மற்றும் இன்னோரன்ன விடயங்களை தெளிவாக உள்ளடக்கி அனைத்து பணியாளர்களுக்கும் உத்தியோகபூர்வமான நியமனக் கடிதம் வழங்கப்படல் வேண்டும்.*

***உத்தேச ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணைப்பு 04 ஐப் பார்க்கவும்***.

## 3.5. *ஏனைய நிறுவனங்களுக்கு பணியாளர்களின் நிலைப்படுத்தல்*

*சபையின் இணக்கப்பாடின்றி எந்தவொரு பணியாளரும் சேவை வழங்களுக்காக பிரிதொரு நிறுவனத்தில் பணியாற்ற விடுவிக்கப்படலாகாது. வெளிக்களப்படுத்தல் நிபுணத்துவம், ஆலோசனை, அறிவுரை உதவி, உள்ளீட்டு வழங்கல்/ சந்தை பேரம் பேசல் போன்ற பல்வேறு சேவைகளின் அடிப்படையில் அவற்றிற்குரிய கட்டணங்களை* PUC *கள் தீர்மானித்தல் வேண்டும்.*

## 3.6. *செயல்திறன் மீளாய்வு*

*வணிகத் திட்டத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையினால்* (BOD) *விளைதிறன் மிக்க செயல்திறன் மீளாய்வு முறைமை ஒன்று அறிமுகம் செய்யப்படல் வேண்டும். பணியாளருக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளுடன் பொருந்தும் வகையில் செயல்திறன் மதிப்பீட்டுச் செயன்முறை தயாரிக்கப்படல் வேண்டும். அதன் படி, தொடர்ச்சியான இடைவேளைகளில் பணியாளர்களுக்கு பரவலாக்கம் செய்வதனூடாக ஒவ்வொரு பணியாளர்களதும் உற்பத்தித் திறன்கள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் அத் தகவல்கள் உரிய அடுத்த கட்ட அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சபை மற்றும் பொது அங்கத்தவர்களுக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியினுள் கம்பனியின் மேம்பாட்டுக்காக பணியாளர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பின் அடிப்படையில் அவர்களுடைய செயல்திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அது பணியாளரின் பலங்கள் மற்றும் பலவீனங்களை மதிப்பீடு செய்வதாகும். அதன் மூலம்* PUC *இற்கு அதன் பெறுமதி மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கான இயலுமைகள் குறித்தும் மதிப்பீடு செய்வதாகும்.*

*செயல்திறன் மீளாய்வுச் செயன்முறையின் போது கீழே தரப்பட்டுள்ள வினாக்களின் பட்டியல் கருத்தில் கொள்ளப்பட முடியும்.*

- *பணியாளர் எதனை அடைகின்றார்?*
- *வழங்கப்பட்ட பணிகளை அடைவதில் அவர்களது அர்ப்பணிப்பு*
- *செயல்திறன்/ அடைவுக்கான சான்று*
- *பணியிடத்தில் கூட்டுறவு/ ஒருங்கிணைப்பின் மட்டம்*
- *வணிகச் செயற்பாடுகள் சார்ந்த தொடர்பாடலின் வினைத்திறன்*
- *சுய ஊக்கம் மற்றும் பிரச்சனை தீர்ப்பதில் புதுமையான அனுகுமுறை*
- *பணியாளர் மேலும் தன்னை மேம்படுத்த வேண்டிய துறைகள் மற்றும் அதனை தொடர்தல்.*

### 3.7. பணிப்பாளர் சபை (BOD)/நிறைவேற்றுக் குழு (EC) மற்றும் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள்

*நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்கள் திட்டமிட்டபடி வழக்கமான சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது, PUC-யை இயக்குவதிலும் முகாமை செய்வதிலும் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்பது அறிந்த விடயமொன்றாகும். இது தொடர்பாக, ஒவ்வொரு EC உறுப்பினரும் PUC இன் அபிவிருத்திக்காக தங்களது சேவைகளை விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளனர் அத்துடன் மொத்த உறுப்பினர்களின் சார்பாக திட்டமிட்டபடி வணிகங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறார்கள். ஆரம்பத்தில் நிறைவேற்றுக் குழுவின் (EC) இன் சேவைகள் தன்னார்வச் செயலாகக் கருதப்படுகின்றன, அங்கு ஒவ்வொரு கூட்டத்திலும் (குறிப்பாக BOD கூட்டங்கள்) செலவழித்த நேரத்தின் அடிப்படையில் அவ் வகையான சேவையை மதிப்பிடலாம். நீண்ட காலம் செல்லும் போது தன்னார்வ சேவையானது, கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அவர்களின் சொந்த நேரம் மற்றும் போக்குவரத்து செலவு காரணமாக ஊக்கமளிக்காமல் இருக்கலாம். எனவே, BOD கூட்டங்களில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்கு பணம் செலுத்துவதற்கு வரவு செலவு ஒதுக்கீடு கிடைக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்டது.*

*இது தொடர்பில், உத்தியோகபூர்வ கூட்டங்கள் / நிகழ்ச்சிகள் / சபைக் கூட்டங்கள் போன்றவற்றில் பங்கேற்பது தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் அரசாங்க உத்தரவுகள் மற்றும் சுற்றறிக்கைகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளை அடையாளம் காண DOA உத்தியோகத்தர்களுடன் BOD கலந்தாலோசிக்க வேண்டும். இதற்கான அரச கொடுப்பனவுகள் தொடர்பில் ஆராய்ந்து அதன் படி வழங்கப்படவேண்டிய தொகையை தீர்மானிக்க வேண்டும்.*

*BOD தீர்மானமெடுத்த பின்னர் உறுப்பினர் கருத்துக்கள் தொடர்பில் பொது அறிவிப்புகளைக் காட்சிப்படுத்துவதன் மூலம் பொது அங்கத்தவர்களது ஒப்புதலைப் பெற வேண்டும். எவ்வாறாயினும், PUC (பதிவு) நிறுவப்பட்டதிலிருந்து குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு BOD கள் தானாக முன்வந்து செயல்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டது, இதன் போது வணிக நடவடிக்கைகள் பொது அங்கத்தவர்களது அதிக திருப்தியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. PUC வருமானம் ஈட்டக்கூடிய வணிக வாய்ப்புகளைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்துவதனூடாக, ஒவ்வொரு மாத இறுதியிலும் நேர்மறை இருப்புநிலையை வைத்து அன்றாட செலவுகளை ஈடுகட்ட உதவுவது BOD மற்றும் PUC இன் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். PUC வருமானத்தைப் பொறுத்து சபைக் கூட்டத்தின் ஒவ்வொரு அமர்வுக்குமான கொடுப்பனவாக ரூ.1000 முதல் ரூ. 2000 வரை தீர்மானித்துக் கொள்ள முடியும். அதே நேரத்தில் சபைக் கூட்டத்தில் பங்கேற்காமைக்குரிய தண்டப் பணமாகவும் அதே தொகையை அறவிடுவதற்கு PUC தீர்மானிக்கலாம்.*

### 3.8. தொடர்பாடல் வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.

*உற்பத்தி, செயன்முறையாக்கம் மற்றும் சந்தை பேச்சுவார்த்தைகளை எளிதாக்கும் வகையில் பகிரப்பட்ட தகவல் தொடர்பாடல் முறைமைகளுக்கு PUC களுக்கு உதவி வழங்கப்படுகின்றன. தனிப்பட்ட தொடர்பாடல் மற்றும் போக்குவரத்துக்கான செலவுகள் PUC இனால் வழங்கப்படமாட்டாது.*

*இருப்பினும், PUC, பங்குதாரர்களிடையே வலையமைப்பு மற்றும் தொடர்பாடலுக்கு வசதியாக சந்தையில் கையக்கத் தொலைபேசி சேவை வழங்குநர்கள் மூலம் போட்டித் தன்மையுடன் குழு திட்டங்களை வழங்குமாறு அதன் சார்பாக பேச்சுவார்த்தை நடத்தலாம்.*

*அனைத்து PUC களும் PUC களின் அனைத்து உறுப்பினர்களையும் இணைக்க அதிகாரப்பூர்வ தொடர்பாடல் /வலையமைப்பு முறையாக WhatsApp ஐ ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. முழு பெறுமதிச் சங்கிலியையும் டிஜிட்டல் மயமாக்கவும், சந்தை அணுகலை இணைக்கவும் இது மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். எனவே, PUCகள் பெறுமதிச் சங்கிலியில் உள்ள அனைத்து செயற்பாட்டாளர்களையும் இணைக்கும் டிஜிட்டல் சங்கிலி அமைப்புகளை அணுகுவதற்கு தொடர்புடைய நிறுவனங்களுடன் பின்தொடர வேண்டும்.*

### 3.9. அங்கத்தவர் ஓய்வூதிய திட்டம்

*அங்கத்தவர்களது வயதை அடையாளம் கண்டு PUC கள் விவசாய சேவைகள் கொள்கை மற்றும் தேசிய அளவில் செயல்படும் திட்டங்களுக்கு ஏற்ப ஓய்வூதிய திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். மேலும், ஒருங்கிணைந்த செயன்முறையாக்கம் மற்றும் சந்தைப்படுத்துதலுக்காக விளைபொருட்களை வழங்கும் ஒவ்வொரு விவசாயியின் சேமிப்பையும் PUC ஊக்குவிக்க வேண்டும். அத்தியாவசிய சேமிப்பாக முன்னரே தீர்மானிக்கப்பட்ட தொகை மற்றும் விளைபொருட்களின் விற்பனை மற்றும் பிற உள்ளீட்டு சந்தைப்படுத்தல் மூலம் PUC இலாபத்துடன் சமமாக பங்களிக்கப்படும்.*

PUC மூலமாக ஓய்வூதிய அனுகூலகங்களாக ஒரு குறிப்பிட்ட வருடங்களுக்கு சேகரிக்கும் வகையில் PUC மூலம் மொத்த சந்தைப்படுத்தலுக்கு வழங்கப்படும் ஒவ்வொரு கிலோ உற்பத்திக்கும் ஒரு ரூபாய் மற்றும் PUC மூலம் வாங்கப்படும் ஒவ்வொரு கிலோ உள்ளீடுகளுக்கும் ஒரு ரூபாய் அத்தியாவசிய சேமிப்பை PUC நிர்ணயிக்கலாம். மேலும் PUC ஆனது, ஒவ்வொரு பங்குதாரரின் வெளியீடு மற்றும் உள்ளீடு சந்தைப்படுத்துதலுக்காக குவிக்கப்பட வேண்டிய போனஸ் பங்குத் தொகையாக வருடாந்த இலாபத்தில் இருந்து சேமிப்பை தீர்மானிக்க முடியும்.

**விவசாயிகள் ஓய்வூதிய முறைமை**

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அனுகூல திட்டங்கள் யாவும் 1987 மற்றும் 1990ம் ஆண்டுகளில் சட்டமாக்கப்பட்டுள்ளன. ஏனைய முறையான திட்டங்களுக்கு அணுகல் இல்லாத தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சமூகப் பாதுகாப்பையும், முதுமைக் காலத்தில் வழங்குவதையும் குறிக்கோளாக கொண்டது. இத்திட்டமானது விவசாயம் மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபையினால் (AAIB) நிர்வகிக்கப்படுகிறது, விவசாயம் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கு பொறுப்பான அமைச்சர்களால் ஒட்டுமொத்தமாக மேற்பார்வை செய்யப்படுகின்றது.

மேற்படி திட்டமானது AAIB இனால் செயற்படுத்தப்படுவதுடன் 1999ம் ஆண்டு 20ம் இலக்க விவசாயம் மற்றும் விவசாயிகள் காப்புறுதிச் சட்டத்தினால் வலுவூட்டப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைத் திட்டத்தின் படி 18 முதல் 59 வரையான வயதுடையவர்கள் இதில் இணைந்துகொள்வது இந்த திட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது இதற்கான பங்களிப்பு வயதின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் எனப்துடன் வருடாந்தம் இரண்டு தடவைகள் இது செலுத்தப்படல் வேண்டும். இதற்கான பங்களிப்பு வயதிற்கேற்ப மாறுபடும் என்பதுடன், 18 வயதில் ரூ 260 முதல் 59 வயதில் ரூ. 1380 வரையில் இத் தொகை வேறுபடுகின்றது. ஓய்வூதியதைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவதற்கு சேர்ந்துள்ள அங்கத்தவர்கள் அவர்களுக்கு வயது 60 ஐ அடையும் வரையில் பங்களிப்புத் தொகைகளை வழங்கியிருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் 5 வருடங்களுக்கு குறித்த் தொகை பங்களிப்பு வழங்கப்படல் வேண்டும்.

ஓய்வூதியத் தொகை ஒருவருக்கொருவர் வேறுபடும் என்பதுடன் அது இணையும் போது தீர்மானிக்கப்படும். அட்டவணையின் படி அத் தொகையானது மாதாந்தம் ரூ. 1000/- முதல் ரூ. 4167/- வரையில் காணப்படுகின்றது. தற்போதளவில் சுமார் 650,000 அங்கத்தவர்கள் இத் திட்டத்துடன் இணைந்துள்ளனர். கீழ் உள்ள மாவட்டங்களில் PUC கீழ் பதிவுசெய்யப்பட்ட சில பங்குதாரர்களும் இதில் இருக்கலாம்

தனியார் அமைப்பு என்ற வகையில் PUC இந்தத் திட்டம் தொடர்பில் ஆராயவும், அவசர நிதி, பணிக்கொடை, அங்கவீனர்களுக்கான ஓய்வூதியம் போன்ற மேலதிக சலுகைகளுடன் அதன் சொந்த ஓய்வூதியத் திட்டத்தைத் தீர்மானிக்கவும் முன்வரலாம். அதன் கீழ் மாதாந்த பங்களிப்புத் தொகையினையும் தீர்மானிக்க முடியும் என்பதுடன், ஒவ்வொரு கொத்தணியிலும் உள்ள சிறு விவசாயிகளால் மலிவு விலையில் விற்பனை செய்வதனூடாக கிடைக்கும் இலாப பகிர்வுகளையும் அத்தியாவசியமாக சேமிக்க முடியும்.

## 4. PUC உடன் தொடர்புடைய நிதியிடல்/ முதலீடு செய்தல் மற்றும் ஏனையவை

### 4.1. நிதி முகாமைத்துவம்

PUC நிதி நிர்வாகத்திற்கான சிறந்த நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும், பரிவர்த்தனைகளின் சரியான அறிக்கை மற்றும் அதன் வள ஒதுக்கீடுகளில் பணத்திற்கான மதிப்பைப் பாதுகாக்க வேண்டும்.

வலுவான உள்ளக கண்காணிப்பு/கட்டுப்பாட்டு முறைமையுடன் முகாமைத்துவப் பிரிவுக்கு BOD நிதி அதிகாரத்தை வழங்க வேண்டும். PUC-யின் நிதி நடவடிக்கைகள் போதுமான அளவு வளங்களைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தலைவருக்கு நேரடியாக அறிக்கையிடுவதை உறுதி செய்ய வேண்டும்.

நிதி முகாமைத்துவத்தின் முக்கிய காரணியாக இருப்பது, தகுதி வாய்ந்த, அறிவு மற்றும் அனுபவம் வாய்ந்த தனிநபர்கள் பணியிலமர்த்துவதை உறுதி செய்வதாகும். முகாமைத்துவப் பணியாளர்களுக்கு வழங்கக்கூடிய அதிகாரத்தின் அளவை பணிப்பாளர் சபை (BOD) தீர்மானிக்க வேண்டும்.

PUC இன் கீழ் பணியாற்றும் முகாமையாளர்கள்/ கணக்காளர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க முன்னர் நிதியியல் நடைமுறைகள் மற்றும் அறிக்கையிடல் முறைமைகள் தொடர்பில் பணிப்பாளர்கள் அவர்களது விழிப்புணர்வு, அறிவு மற்றும் திறன் ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகையால், PUC களின் பணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்களிடையே தவறான தொடர்பாடல் காரணமாக ஏற்படக் கூடிய முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக நிதி முகாமைத்துவம் சார்ந்த அம்சங்கள் தொடர்பில் ஆழமான பயிற்சியை PUC களின் பணிப்பாளர்கள் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாகும்.

### 4.2. மிகை நிதியினை முதலீடு செய்தல்.

பணியாளர்களின் சம்பளம் உட்பட மீண்டுவரும் செலவினங்களுக்கு வசதியளிப்பதற்காக PUC க்கு வெளிப்புற வரவு செலவு ஒதுக்கீடுகள் இல்லாததால், வருடாந்தம் நிலையான வருமானத்தை உருவாக்குவதற்காக முதலீட்டு கொள்கையை உருவாக்குவது முக்கியம்.

உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்களின் மூலம் BOD அதன் சொந்த வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு வசதியளிப்பதுடன் அதன் மூலமாக PUC இன் மீண்டுவரும் செலவினங்களை முகாமை செய்துகொள்ள வழிவகுக்கப்படுகின்றது. அதன் மிகை வருமானமானது எதிர்கால அபிவிருத்திசார் தலையீடுகள் மற்றும் PUC அங்கத்தவர்களான விவசாயிகளுக்கு வங்கிகளூடாக கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில் அவர்களுக்கு அவசியமான நிதி உதவிகளை வழங்குதல் போன்ற அங்கத்தவர்களுக்கான சேவைகளுக்காக சேமிக்கப்படும்.

PUCகள் தங்கள் வணிகத் திறன், வருமான இயலுமைகள், சொத்துகளின் மதிப்பு மற்றும் பங்கு மூலதனம் ஆகியவற்றை அங்கீகரித்த முறையான வங்கிகள் மூலம் வரையறுக்கப்பட்ட ஆய்வுகளைப் பெற ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்தக் கடன்கள் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட வேண்டும் மற்றும் வருடாந்தம் பொதுக் கூட்டங்கள் மூலம் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

வணிகத் திட்டச் செயற்பாடுகளுக்கு ஏற்ப குறிப்பாக உற்பத்தி உள்ளீடுகள்/சேகரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற தேவைகள் உறுதி செய்யப்பட வேண்டும், நிதியாண்டின் வர்த்தகம் அல்லது இருப்புநிலைக் குறிகாட்டியுடன் திருப்திகரமான அளவில் வருடாந்த கடன்கள் செயல்படுத்தப்படும். **(வர்த்தக கடனளிப்பு-நிறுவனம் அதன் கடனை சாதாரண வணிக நடவடிக்கைகளில் செலுத்தும் போது செலுத்த முடியும். இருப்புநிலைக் கடன் - நிறுவனத்தின் சொத்துக்களின் மதிப்பு அனைத்து பொறுப்புகளின் மதிப்பை விட அதிகமாக உள்ளது)**

முறையான வங்கி நடைமுறைகளுக்கு ஏதேனும் கடன் வாங்குவதற்கு பிணை தேவைப்படலாம். இது ஓராண்டில் திரட்டப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் அங்கத்தவர்களால் நிறைவேற்றப்பட்ட பங்குகளுக்கான பங்களிப்பின் சதவீதத்தின் விகிதாச்சாரத்தில் மாற்றப்பட்ட PUC சொத்துகளின் (உள்கட்டமைப்பு மற்றும் இயந்திரங்கள்) மதிப்பு ஆகியவற்றின் மூலம் ஓரளவு உறுதிசெய்யப்படலாம்.

PUC இற்கான முதலீடுகளுக்காக கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நன்கொடைகள்/ மானியங்கள்/ கடன்கள் போன்றன நிரல் அமைச்சு, விவசாய அமைச்சு, ASMP இல் இருந்து வெளியேறும் போது PUCகளுக்கான இணை நிறுவனங்கள் ஆகியவற்றினூடாக வரவேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் சட்டம்/விதிமுறைகளுக்கு ஏற்ப PUCகள் துணை நிறுவனங்களை கூட்டிணைக்க முடியும்.

குறிப்பாக PUC வணிகத் திட்டத்தின் கீழ் இலக்காகக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலி அடிப்படையிலான வணிகங்களில் வணிக நடவடிக்கைகளுக்கான கூட்டு முயற்சிகள் மற்றும் கூட்டணிகளில் நுழைய PUC ஊக்குவிக்கப்படுகிறது.

PUC இன் வருமான இயலுமையை அதிகரிப்பதற்காக, விளைபொருட்களின் மொத்த விற்பனை/சில்லறை வர்த்தகம், காப்புறுதிச் சேவைகள், விவசாய இயந்திரங்கள்/பழுதுபார்க்கும் சேவைகள், பண்ணை இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் வர்த்தகம் போன்றவற்றுக்கான உரிமை வணிகத்தை நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.3. பங்கு மூலதனம்

இது தனிப்பட்ட பயனாளிகளால் பங்களிக்கப்படும் நிறுவனத்தின் அடிப்படை நிதி வளம்/பங்கு ஆகும். கம்பனியின் சேவைகள் மற்றும் நன்மைகள் நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்காக சந்தாதாரர்களுக்கு மட்டுமே கிடைக்கும். பங்கு மூலதனம் என்பது PUCக்கான அங்கத்தவர்களது அர்ப்பணிப்பு மற்றும் அதன் பங்களிப்பின் அளவை விவரிக்கும் மிக முக்கியமான குறிகாட்டியாகும்

AoA ஒரு விண்ணப்பதாரரின் எண்ணிக்கை பங்குகள் நிறுவனத்தின் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் 5% மட்டுமே என்று குறிப்பிடுகிறது. அதன்படி, கம்பனி 300 அங்கத்தவர்களிக்கு இடமளிக்க முடிவு செய்தால், ஒவ்வொரு உறுப்பினரும் அதிகபட்சமாக 15 பங்குகளை (300x 5%) பெறலாம். ஒரு பங்கின் பெறுமதி ரூ. 5000 என தீர்மானிக்கப்படுகிறது மற்றும் ஒரு அங்கத்தவரின் மொத்த பங்கு முதலீடு ரூ. 75,000 ஆக இருக்கும். அதன்படி, 300 உறுப்பினர்களைக் கொண்ட PUC ஆனது ரூ. 1.5 மில்லியன் (குறைந்தபட்சம்) முதல் ரூ. 22.5 மில்லியன் (அதிகபட்சம்) வரையிலான மூலதனத்தை திரட்ட உதவும்.

கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்த ஒவ்வொரு பங்குதாரரும், முறையான கூட்டம், குறிப்பாக பொதுக் கூட்டங்கள், வருடாந்த பொதுக் கூட்டங்கள் அல்லது கம்பனி நடத்தும் அதிவிசேட பொதுக் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமையை வைத்திருக்கும் கம்பனியின் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் அங்கத்தவராக ROC இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு நடைமுறையில், முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட முறையான விண்ணப்பப் படிவம், பங்குதாரர் விவரங்கள் மற்றும் மொத்தப் பங்குகளின் பட்டியலிடப்பட்ட ஒரு சாராம்சம் மற்றும் வங்கி அறிக்கையின் மொத்த பங்கு மூலதன பெறுமதியை கம்பனி செயலாளரிடம் சமர்ப்பித்து ROC ஊடாக முறையான பங்குச் சான்றிதழ்களை ஏற்பாடு செய்து வழங்க வேண்டும். கம்பனி அனைத்து பங்குதாரர்களையும் பதிவு செய்து சான்றிதழ்களைப் பெறும் வரை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரையில், ROC அங்கத்தவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களில் எடுக்கப்பட்ட எந்த முடிவுகளையும் அங்கீகரிக்கவோ அல்லது பரிசீலிக்கவோ கூடாது.

### 4.4. சமபங்கின் விசேட அம்சங்கள்

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையிலான அங்கத்தவர்களுக்கு அமைய பங்கு மூலதனம் தீர்மானிக்கப்படுகின்றது – (எதிர்கால பயனாளிகளின் மொத்த எண்ணிக்கையில் 5%க்கு சமமான வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பங்குகளில் இணைக்கப்பட்டுள்ளது)

கம்பனியின் பங்குதாரராவதாற்காக ஒவ்வொரு அங்கத்தவரும் ஆகக்குறைந்தது ஒரு பங்கினையேனும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு நபர் அல்லது சில நபர்களது ஆதிக்கத்தை தவிர்த்துக் கொள்வதற்காக சம எண்ணிக்கையிலான பங்குகளின் எண்ணிக்கையினைப் பேணுவது சிறந்த நடைமுறையாக உள்ளது.

பங்குகளின் ஒதுக்கீடுகள் தொடர்பிலான நியமங்கள் AoA இனால் தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

பரிந்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் யாவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை பங்கு மூலதனத்திற்காக விண்ணப்பிப்பதற்காக பயன்படுத்த முடியும்

பங்குகள் ஒரு அங்கத்தவரிடமிருந்து இன்னொரு அங்கத்தவருக்கு சம பெறுமதியில் பரிமாற்றம் செய்யப்படலாம்.

பங்கு மூலதனத்தை கம்பனியின் செலவினங்களுக்காக மட்டுமே பங்கு மூலதனக் கணக்கிலிருந்து கடன் வாங்கலாம் மற்றும் PUC மூலம் வணிகங்கள் மூலம் ஈட்டிய லாபத்தின் பங்குடன் அதே கணக்கில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

RoC இன் ஒரு பதிவு செய்யப்பட்ட கம்பனியினை உருவாக்குவதற்கு ஆகக் குறைந்தது 10 பங்குதாரர்களேனும் இருப்பது அவசியமாகும். பங்கு மூலதனத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான உச்சபட்ச வரம்புகள் எதுவும் இல்லை.

### 4.5. அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் என்பது PUC அங்கத்தவர்களிடமிருந்து பங்கு பங்களிப்பாக சேகரிக்க அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகையாகும். இது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது மற்றும் AoA இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆரம்ப வரம்பை மீறும் போது அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்காக நிறுவனம் AoA இல் திருத்தங்களை கோரலாம்

### 4.6. வழங்கப்பட்ட (செலுத்தப்பட்ட) பங்கு மூலதனம்

ஒதுக்கப்பட்ட பங்குகளுக்கு நிகராக அங்கத்தவர்கள் உண்மையில் சந்தா செலுத்திய பங்கு மதிப்பு செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் என்று அழைக்கப்படுகிறது. முறையான வங்கி அமைப்புகள் இந்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்திற்கு நிகராக PUC களுக்கு கடன் வழங்குவதை பரிசீலிக்கலாம். எனவே, PUC அனைத்து பயனாளிகளையும் நிறுவனத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்ட மொத்த ஒதுக்கப்பட்ட பங்குகளை சந்தா செலுத்த ஊக்குவிக்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும்.

### 4.7. போனஸ் பங்குகளை வழங்குதல்.

போனஸ் பங்குதாரர்களாகக் கருதப்படும் மற்றும் ஆரம்ப கட்டத்தில் ஒவ்வொரு அங்கத்தவரும் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையின் விகிதத்தின் அடிப்படையில் வழங்கப்படும் இருப்புக்களின் அடிப்படையில் கூடுதல் பங்குகளை நிறுவனத்தால் வழங்க முடியும். சபையின் பரிந்துரை மற்றும் வருடாந்த பொதுக் கூட்டத்தின் மூலம் மட்டுமே போனஸ் பங்குகள் வழங்கப்படுகின்றன. போனஸ் பங்குகள் ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது.

### 4.8. இலாபத்தை விநியோகித்தல்.

PUCகள், PUC வணிகத் திட்டத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட வணிகச் செயற்பாடுகள் மூலம் ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில், PUC, மிகை இலாபத்துடன் கூடிய முதலீட்டின் நியாயமான வருமானத்தைக் PUC முதலீட்டு நிதியம்/ பங்குதாரர்களுக்கு வரி அல்லது ஈவுத்தொகையாக காட்ட வேண்டும்.

அறிவிப்புகள் வெளியிடப்பட்ட பதினைந்து (15) நாட்களுக்குள் இடைக்கால மற்றும் இறுதி வரிகள்/ஈவுத்தொகைகள் செலுத்தப்பட வேண்டும். PUC களின் ஊழியர்களுக்கு போனஸ் அல்லது இலாப அடிப்படையிலான ஊக்கத்தொகைகள் பொருந்தும் வகையில் வரிகள்/ஈவுத்தொகைகள் விநியோகம் செய்யப்பட்ட பிறகு வழங்கப்பட வேண்டும்.

வரிக்குப் பின்னரான இலாபத்தில் குறைந்தது முப்பது (30) சதவீதம் PUC முதலீட்டு நிதி/பங்குதாரர்களுக்கு, கடனீட்டுப் பரிசோதனையில் அடைந்துள்ள திருப்தியின் படி விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(வர்த்தக கடனளிப்பு—சாதாரண வணிக நடவடிக்கைகளில் செலுத்த வேண்டிய கடனை கம்பனி செலுத்த முடியும். இருப்புநிலைக் கடனளிப்பு – கம்பனியின் பொறுப்புக்களின் பெறுமதியை விடவும் கம்பனியின் சொத்துக்களின் பெறுமதி அதிகம்).**

### 4.9. அங்கத்தவர்களுக்கான கடன் அனுகல்

உள்ளீட்டுத் தேவைகள், தொழில்நுட்பம், பெறுமதி சேர்ப்பு மற்றும் சந்தை உதவிகள் ஆகியவற்றின் அடிப்படையில் முதன்மை உற்பத்தியாளர்/பங்குதாரர்களின் முக்கியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக PUC ஒரு சிறப்பு நோக்கத்துடன் நிறுவப்பட்டது என்பதை பங்குதாரர்கள் கவனிக்க வேண்டும். இது சம்பந்தமாக, PUC இவ்வாறான முக்கிய வணிக நடவடிக்கைகள் மற்றும் கம்பனியின் பெறுமதிச் சங்கிலி செயற்பாட்டின் ஒரு பகுதியாக கடன்களை வழங்குவதற்காக கூட்டாக திட்டமிடப்பட்ட விவசாய வணிக முதலீடு / நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தலாம்.

கம்பனி குறுகிய கால செயற்பாட்டு மூலதனத்தை கடன் வசதியாக கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியினுள் மீளச் செலுத்துவதற்கான நிபந்தனையின் கீழ் நீடித்துக் கொள்ள முடியும்., (உ+ம்: ஒரு பயிரின் முதிர்வுறும் காலம்). அத்தகைய கடன்கள் வணிக விருப்புடன் கூடிய கம்பனிகளுடன் இணைக்கப்படவேண்டும் என்பதுடன், இதன் போது ஒருங்கிணைப்பு மற்றும் கம்பனியினூடாக சந்தைப்படுத்துவதற்கு அவசியமான அறுவடைகளை PUC இற்கு வழங்குவதை அங்கத்தவர் உறுதிப்படுத்த வேண்டும்.

முறையான வங்கிகளுடன் கொடுக்கள் வாங்கல் செய்வதாற்கான இயலுமையின்மை மற்றும் போதுமான பிணையம் இல்லாத காரணத்தால் சிறு விவசாயி சமூகங்கள் முறைசாரா வங்கி முறைகளில் தொடர்ந்து சிக்கித் தவிப்பது அனைவரும் அறிந்த விடயமாகும். மேலும் தேவைப்படும் கடனின் அளவைப் பொறுத்து, இது தனிப்பட்ட விண்ணப்ப அடிப்படையில் வங்கியின் கட்டணங்களை ஈடுகட்டுவதற்கு போதுமானதாக இருக்காது. இது சம்பந்தமாக, சிறு உற்பத்தியாளர் பயிர்ச் செய்கை நோக்கத்திற்காக அல்லது பிற தேவைகளுக்காக கடனைப் பெறுவதற்கு ஆதரவாக மொத்தக் கடன் வசதிகளுக்காக முறையான வங்கிகளுடன் PUC பேச்சுவார்த்தை நடத்தலாம்.

### 4.10. கணக்கீடு மற்றும் அறிக்கையிடல்

அனைத்து PUCக்களும் கணக்கீட்டு முறையைக் கொண்டிருக்க வேண்டும், இது இலங்கை சட்டத்தின் கீழ் பொருந்தக்கூடிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு வசதியளிக்கும்.

அனைத்து PUC களும் டிஜிட்டல் கணக்கீட்டு தொகுப்புக்களைக் கொண்டுள்ளன. அத்துடன் கம்பனிச் சட்டம் மற்றும் AOA இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப கணக்கீட்டு நடைமுறைகளை செயற்படுத்துவதற்கு வழிகாட்டியாக தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. PUC முகாமையாளர்/கணக்காளர் மற்றும் BOD ஆனது எந்தவொரு அவசரநிலையிலும் தரவு/தகவல்களை காப்புப் பிரதிகளை எடுப்பதற்காக கையேடு வடிவங்களுடன் கணினிமயமாக்கப்பட்ட வடிவங்களில் முறையான பதிவுகளை முகாமை செய்வதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்புக் கூறவேண்டும்.

வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளின் வரைவாக்கங்கள் நியமிக்கப்பட்டுள்ள கம்பனி செயலாளர் மற்றும் கம்பனி செயலாளரின் ஆலோசனையுடன் நிதியாண்டு நிறைவடைந்து அறுபது (60) நாட்களுக்கும் தயாரிக்கப்படல் வேண்டும்.

கணக்காய்வு அறிக்கையுடன் நிதிக் கூற்றுகளும், நிதியாண்டு நிறைவடைந்து ஐந்து (5) மாதங்களுக்குள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த ஒரு பகுதியாக இருக்க வேண்டும். வருடாந்த அறிக்கையானது PUCயின் செயலாற்றுகை மற்றும் நிலையின் ஒரு குறுகிய காட்சியை வழங்க வேண்டும், என்பதுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்துவதனூடாக, உச்சபட்ச வெளிப்படைத்தன்மையை பேண வேண்டும்.

ROC இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து பங்குதாரர்களதும் பங்கேற்புடன், மேற்கூறிய அனைத்து ஆவணங்களும் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ROC இல் பதிவுசெய்யப்பட்ட பங்குதாரர்கள் மட்டுமே வருடாந்த அறிக்கைகள், நிதி விவகாரங்கள், முன்மொழியப்பட்ட அபிவிருத்திக்கான தலையீடுகள் போன்றவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளை உறுதிப்படுத்த அல்லது நிராகரிக்க, கூட்டத்தில் கலந்துகொள்ளவும் வாக்களிக்கவும் உரிமையுடையவர்களாவர்

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் பொது இருப்பு ஒன்றை பேணுவது தொடர்பில் கம்பனி தீர்மானிக்கலாம். இந்த பொது இருப்பானது இலாபத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதமாகும் என்பதுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய திடீர் நிலைமைகள், பங்குதாரர்களுக்கான ஈவுத் தொகை வழங்குதல், தொழிற்பாட்டு மூலதனத்தை மேம்படுத்துதல் போன்றனவற்றிற்காக அதனைப் பயன்படுத்த முடியும். இந்த பொது இருப்புக்கள் ஐந்தொகையின் பொறுப்புக்கள் நிரலில் இருப்பு/ மிகை எனும் தலைப்பின் கீழ் காட்டப்படும்.

### 4.11. கணக்கேடுகளை பராமரித்தல்.

கணக்கேடுகளை வைத்திருப்பதானது கம்பனியின் தலைவர், அனைத்து பணிப்பாளர்கள், அனைத்து பணியாளர்களதும் பொறுப்பாகும். கீழ்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்காக கணக்கேடுகளை சரியாகவும் தரவுகள்/ தகவல்களை இற்றைப்படுத்தியும் பேணுவது மிகவும் முக்கியமாகும்.;

- தொழிற்பாடுகள்/ முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பகத் தன்மை
- முறையான முகாமைத்துவக் கணக்கீட்டின் மூலமாக PUC இன் இலாபத்தை மேலும் அதிகரிக்க முடியும்.
- தெளிவான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் முரண்பாடுகளை தவிர்க்கின்றன.
- கடன் வசதிகளைப் பெறுவதற்கு முறையான வங்கியினால் அங்கீகரிக்கப்படும் நிதி இயலுமையை வலுப்படுத்துதல்

- *PUC இற்கான பல்வகைப்பட்ட வணிகத் தெரிவுகளை மேம்படுத்துவதற்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படலாம்.*

*PUC இன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் கணக்கேடுகள் பராமரிக்கப்படவேண்டிய முக்கியமான துறைகள் பின்வருமாறு*

- *வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் அரை ஆண்டில் அல்லது அவ் அப்போது பொருத்தமான வகையில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் அடிப்படையாக வணிகத் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்*
- *PUC மூலம் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட அனைத்து பணத் தொகைகள் மற்றும் செலவுகளுக்குரிய பற்றுச் சீட்டுகள்*
- PUC. *இன் அனைத்து விற்பனைகள் மற்றும் பொருட் கொள்வனவுகள்*
- *உற்பத்திக் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்*
- *பொருட்களைப் பயன்படுத்துதல் அல்லது பணியாளர்கள் அல்லது வேறு ஏதேனும் விடயங்களுக்குரிய செலவுகள்*
- *மாத இறுதி வங்கிக் கூற்றிற்கமைய அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் கணக்கிணக்கம் செய்தல்.*
- *பணியாளர்களது தனிப்பட்ட கோவைகள்*
- *லீவுப் பதிவேடு*

**PUC *இனால் பராமரிக்கப்படவேண்டிய ஏடுகள்/ பதிவேடுகள்/ ஆவணங்காள்/ கோவைகளின் பட்டியலை இணைப்பு 2 இல் பார்வையிடவும்.***

### 4.12. PUC *இற்கான கணக்காய்வு முறைமை*

***சட்டபூர்வமான கணக்காய்வு –*** *சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளதன் படி நிதியாண்டு நிறைவடைந்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள்* PUC *கள் வருடாந்த கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டும்.* RoC *உடன் வருடாந்த அறிக்கையினை பூரணப்படுத்துவதற்காகவும் கணக்காய்வினை மேற்கொள்வதற்காகவும்* PUC *கள் சான்றளிக்கப்பட்ட கம்பனிச் செயலாளர்/ கணக்காய்வாளர்காளை நியமித்துக் கொள்வது அவசியமாகும்.*

*மேலே கூறப்பட்டதற்கு மேலதிகமானதாக கீழ்வரும் கணக்காய்வு முறைமைகளை* PUC *கள் அவற்றின் சிறந்த நடைமுறைகளாக பின்பற்ற முடியும்.*

***உள்ளக கணக்காய்வு –*** *இது சுயாதீனமான தகுதிவாய்ந்த ஒருவரால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் கணக்காய்வு அறிக்கைகள் வழமையாக சபைக்கு நேரடியாக சமர்ப்பிக்கப்படும்.*

***சமூக கணக்காய்வு-*** *ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அங்கத்தவர்களது வாழ்க்கை நடைமுறைகளில் கம்பனியின் செயாற்பாடுகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கும் அறிக்கை செய்வதற்கும் சபையினூடாக அமைக்கப்பட்ட குழுவால் செய்யப்படும் கணக்காய்வாகும்.*

***நிதி சார் பொருத்தப்பாடு*** *- RoC இன் கீழ் இணைக்கப்பட்ட நிறுவனங்கள் RoC இணையதளத்தில் கிடைக்கும் இலத்திரனியல் படிவங்களுடன் பின்வரும் ஆவணங்களை பராமரித்து சமர்ப்பிக்க வேண்டும்*

> *இருப்புநிலை மற்றும் இலாபம் மற்றும் இழப்பு கணக்கு –*
>
> *PUCகள் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் இந்த ஆவணங்களைத் தயாரித்து, கம்பனியின் AGM இல் பங்குதாரர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இது BOD சார்பாக இரண்டு பணிப்பாளர்களால் கையொப்பமிடப்பட வேண்டும் மற்றும் RoC இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்*

*வருடாந்த வருமானம் –*

*PUC, AGM இல் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள், இருப்புநிலை/ இலாபம் மற்றும் இழப்பு கணக்குகள் மற்றும் நடைமுறைகளுடன் வருடாந்த வருமானத்தை RoC- இற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.*

## 4.13. வருடாந்த சொத்துக்களின் சரிபார்ப்பு

*அனைத்து PUCகளும் ASMP தலையீடுகள் மற்றும் PUC ஆல் கொள்வனவு சொந்த சொத்துக்கள் மூலம் பெறப்பட்ட அனைத்து நிலையான சொத்துக்களையும் பதிவு செய்யும் சொத்து பதிவேட்டை நிறுவ வேண்டும். பொருட்களின் சரியான எண்கள் மற்றும் உண்மையான பெறுமதி மற்றும் பெறுகை தொடர்பான பற்றிய \சான்றுகளுடன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது*

*PUC தனிப்பட்ட உறுப்பினர்களுக்கான சொத்துப் பதிவேட்டை ASMP மூலம் மானியங்களாகக் கிடைக்கும் சொத்துகளின் பட்டியலை நிறுவ வேண்டும். தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கான உபகரணங்கள், உள்ளீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு விநியோகம் தொடர்பான நடைமுறைகள், முறையான ஒப்பந்தம், PUC சொத்துப் பதிவேட்டில் பொருட்களைப் பதிவு செய்தல், தனிப்பட்ட அங்கத்த்வர்களுடையதாக பட்டியலிடப்பட்டவை போன்ற ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளுடன் பின்பற்றப்படுவதை PUC உறுதிப்படுத்த வேண்டும். மேலும், PUC செயற்றிட்டப் பொருட்கள் வழங்கப்பட்ட அனைத்து அங்கத்தவர்களும் அவற்றை சரியாகப் பயன்படுத்தப்படுவதையும், செயற்றிட்டத்தினூடாக பரப்பப்பட்ட தொழில்நுட்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறனைப் பெறுவதையும் உறுதி செய்ய வேண்டும்.*

*நிலையான சொத்துக்கள் மற்றும் கடைகளில் வருடாந்த சொத்து சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.*Regular *வழக்கமான ஆய்வுகள், மேலதிக களஞ்சிய வசதிகளை வழங்கக்கூடிய, தேவையற்றவை/காலாவதியானவை எனக் கருதப்படும் பொருட்களை மாற்றுவதன் மூலம் / அகற்றுவதன் மூலம், செயல்பாட்டு மூலதன நிலை உட்பட, களஞ்சியங்கள் மற்றும் சொத்து நிர்வாகத்தை மேம்படுத்த உதவும்.*

*PUCகளின் BOD, உரிய செயன்முறையை மேற்கொண்டதன் மூலம் இழப்புகளை தள்ளுபடி செய்யலாம். இருப்பினும், சட்ட நடவடிக்கை அவசியமாகக்கூடிய திருட்டு அல்லது அலட்சியத்தால் ஏற்படும் இழப்பை தள்ளுபடி செய்வது தொடர்பாக, மேற்கொள்ளப்பட வேண்டிய எந்தவொரு சட்டப்பூர்வ செயல்முறையையும் இரத்துச் செய்யலாகாது.*

*உடன்படிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை எந்தவொரு உறுப்பினரும் மீறுவதாக சரிபார்ப்பின் மூலமாக நிரூபிக்கப்பட்டால், விநியோகிக்கப்பட்ட செயற்றிட்டத்திற்குரிய பொருட்களை சட்டப்பூர்வமாக கையகப்படுத்தவும், புதிய அங்கத்தவராக இணையும் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அவற்றை மீள ஒதுக்கீடு செய்யவும் BOD க்கு அதிகாரம் உள்ளது.*

## 4.14. கலைத்தல்

*PUC இன் கலைப்பு அல்லது கலைப்பு செயன்முறைகள் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் பொது அங்கத்தவர்களது இணக்கப்பாட்டுடன் மாத்திரமே ஆரம்பிக்கப்பட வேண்டும். கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், 2007 ஆம் ஆண்டின் இலக்கம் 7 கம்பனிச் சட்டத்தின் தொடர்புடைய உறுப்புரைகளின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட வேண்டும்.*

## 5. தரவு அடிப்படை மற்றும் இணையத் தளங்கள்

அனைத்து PUC களும் அதன் பங்குதாரர்களுடன் தெளிவான தொடர்பாடல் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும், இது உள் மற்றும் வெளிப்புறமாக, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்யும் போது PUC கள் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.

அங்கத்துவப் பட்டியலுக்கான அமைப்பினை **இணைப்பு** 12 இல் பார்க்கவும்.- ஒவ்வொரு PUCகளின் அனைத்து பங்குதாரர் அங்கத்தவர்க்ளும் பொது படிவத்தை பூரணப்படுத்த வேண்டும். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனிப்பட்ட தகவல்கள், காணிப் பயன்பாட்டு முறை, பயிரிடப்பட்ட பயிர்கள் போன்ற விவரங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

தொடர்பாடல்/ தகவல் பகிர்வு, தொழில்நுட்பம் தொடர்பான தகவல்களைப் பரப்புதல், சந்தை தொடர்பான செயற்பாடுகள், சந்தை பேச்சுவார்த்தைக்காக PUC இல் உற்பத்திப் பொருட்களை ஒருங்கிணைத்தல் போன்றவற்றின் எளிதான வழியாக அங்கத்தவர்களது வலையமைப்பிற்காக நிறுவப்பட்ட WhatsApp இணைப்பை PUCகள் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவர்கள் நிறைவேற்றுக் குழுவுடன் தொடர்பில் உள்ள ஒவ்வொரு உப குழுவினருடனும் தொடர்பாடலை மேற்கொள்ளும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். இதனூடாக தகவல்கள், சபை முடிவுகள், அங்கத்தவர்களின் கருத்துக்கள், அங்கத்தவர்களின் கோரிக்கைகள், உள்ளீட்டு/ வெளியீட்டு சந்தை வசதியளித்தல்கள் போன்ற விடயங்களை பகிர்ந்துகொள்ள முடியும். வெளிப்படைத்தன்மை மற்றும் BOD மற்றும் PUC செயல்பாடுகளில் நம்பிக்கையை வளர்ப்பதன் மூலம் PUC அதன் மொத்த அங்கத்தவர்களுடனும் சிறந்த உறவைப் பேணுவதற்கு இது உதவும்.

பருவகால மற்றும் வருடாந்த பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தித் திட்டம் டிஜிட்டல் தளத்துடன் நிறுவப்பட வேண்டும், அங்கு கொத்தணி உற்பத்தி மற்றும் அறுவடை முறையை சந்தை பேச்சுவார்த்தைக்கு உறுதிசெய்ய முடியும், கண்காணிக்கப்பட்ட உற்பத்தித் திட்டத்துடன் சந்தை அணுகலுக்கும் அது வசதியளிக்கும்.

PUC அங்கத்தவர்களுடன் ஒருங்கிணைந்து வருடாந்த அல்லது பருவகால உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக, ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தித் திட்டத்தை உருவாக்கி, செயற்படுத்துவதற்காக பொதுக் கூட்டத்தின் மூலம் சரிபார்க்க வேண்டும். இது பல்வேறு சந்தை அணுகல் மற்றும் விலை, அளவுகள் மற்றும் தர நியமங்களை நிர்ணயம் செய்வதற்கும், பருவகால அல்லது வருடாந்த உற்பத்தி மற்றும் விநியோகத் தரவுத் தளத்தை உருவாக்குவதற்கும் PUC க்கு உதவும். மேலும், உற்பத்தியின் தரவுத் தளம் PUC இலிருந்து ஒருங்கிணைந்த உள்ளீட்டு சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புகளை வழங்கும்.

தொழில்நுட்பத்தின் பயன்பாடு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது மற்றும் அனைத்து PUC களுக்கும் PUC பற்றிய விரிவான பார்வையை வழங்கும் அதன் சொந்த இணையத்தளங்கள் காணப்பட வேண்டும். எனவே, இணைய தளங்களில் பயனர் நேயம் மிக்க முறையில் வழங்கப்பட்ட செயல்பாட்டு மற்றும் நிதி அம்சங்கள் பற்றிய தகவல்கள் இருக்க வேண்டும், அது அவ்வப்போது இற்றைப்படுத்தப்படும். PUC கள் பெறுகைத் திட்டம், செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் திட்டம் ஆகியவற்றை இணையதளத்தில் பதிவேற்றுவதும் கட்டாயமாகும்.

கொத்தணி பகுதியில் சிதறிக் கிடக்கும் சிறு விவசாயிகளை ஒருங்கிணைத்து இணைக்கும் வகையில், PUC அங்கத்தவர்கள், சந்தைகள், வழங்குநர்கள், வணிகப் பேச்சுவார்த்தைகள் மற்றும் வணிகங்களுக்கு வசதியளிப்பதற்காக தொடர்புகொள்ள டிஜிட்டல் தளத்தை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தளத்தை நீடித்த உதவிகள் மற்றும் PUC வணிகத் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம். டிஜிட்டல் வானிலை முன்னறிவிப்பு அமைப்பு சிறு விவசாயிகள் காணிகளை உள்ளடக்கிய குழுவில் உள்ள அத்தகைய ஒரு பயன்பாடாகும். தானியங்கு வானிலை கண்காணிப்பு மற்றும் அறிவுறுத்தல் அமைப்பு விவசாய நடவடிக்கைகளின் மேம்பட்ட செயல்திறன் மற்றும் உள்ளீடு மற்றும் உழைப்பு பயன்பாட்டில் சேமிப்பினை ஏற்படுத்துவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகையால், விவசாயி அங்கத்தவர்களின் மேம்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்திற்காக, PUCகள் இத்தகைய டிஜிட்டல் பயன்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

## 6. நிர்வாக முறைமைகள்

2007 ஆம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் PUC கள் நிறுவப்பட்டு அதிகாரம் பெற்றுள்ளன, இது இலங்கையில் உள்ள கம்பனிப் பதிவாளரின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து பொது கம்பனிகளுக்கும் பொருந்தக்கூடிய GOSL ஒழுங்குமுறை சட்டகத்தை பின்பற்றுவதற்கு அவசியமானதாகும். பொறுப்புக்கூறல் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றின் மூலமாக வழிப்படுத்தப்பட்ட நல்லாட்சியினூடாக PUC களில் பங்குதாரர்களின் முதலீடுகள் பாதுகாக்கப்படுவது உறுதியளிக்கப்படுகின்றது.

### 6.1. விளைதிறன் மிக்க நிர்வாகத்திற்காக தொடர் கூட்டங்கள்

PUC கள் மாதாந்த இடைவெளிகளில் சபை கூட்டங்களைக் கூட்ட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் தொடக்கத்தில் அனைத்துக் குழு அங்கத்தவர்கள், ஆலோசனை அங்கத்தவர்கள் மற்றும் தொடர்புடைய நபர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பைத் தெரிவிக்க கூட்ட திட்ட அட்டவணையொன்றை தீர்மானிக்கலாம்.

AoA இன் படி, செல்லுபடியாகும் சபைக் கூட்டம் ஒன்றை நடாத்துவதற்கான நியம நடைமுறையாக 50% சதவீதமான அங்கத்தவர்களின் வரவு அவசியமாகும்.

சபையானது அதன் மாதாந்த சபைக் கூட்டத்தில் பின்வருவன தொடர்பில் ஆராய வேண்டும்.

- பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்
- ஒருங்கிணைக்கப்பட்ட கொத்தணி உற்பத்தி திட்டம் மற்றும் சந்தை அனுகல்
- சந்தாதாரர்களின் நிலை மற்றும் பங்குப் பெறுமதி.
- செயற்பாட்டு மூலதனம், பணப் போக்கு, கலைப்பு நிலை
- கடன் நிலைமை

மேற்கூறிய மாதாந்த அறிக்கைகளைத் தவிர, BOD ஒரு பயனுள்ள செயல்திறன் மீளாய்வை உறுதிப்படுத்தும் என்பதாக உணரக்கூடிய ஏதேனும் ஆவணங்களை வழங்குமாறு BOD நிர்வாகத்திடம் கோர வேண்டும்.

BODகள் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளை நிரல் அமைச்சு (MoA) மற்றும் கம்பனிச் செயலாளருக்கு அவசியமான வடிவங்களில் அனுப்ப வேண்டும். MoA ஆனது BOD களின் செயல்திறன் தரவை BOD-களின் செயல்திறனை நேரடிக் கண்காணிப்பு மூலம் உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்ட இணைய அடிப்படையிலான தகவல் தளம் மூலம் பெற்றுக் கொள்ளும்.

PMU/ASMP இன் கீழ் தயார்நிலை அளவுகோல்களை கண்காணிப்பது, PUCகளின் செயல்திறன் மற்றும் திறனைக் கண்காணிப்பதற்கான அத்தகைய தளமாகும். PUCகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான வழியைக் கண்டறிய இது அடிப்படை அறிக்கையைக் கருத்தில் கொள்ளலாம். அவசியமேற்படின் எந்த மாற்றங்களுக்கும் நெகிழ்வுத்தன்மையுடன் அனைத்து PUC களுக்கும் வழிகாட்டுவதற்கான வரைவு கண்காணிப்புத் திட்டம் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

நிரல் அமைச்சு மற்றும் கம்பனி செயலாளருக்கு அவசியமாகும் தரவு மற்றும் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக அனைத்து BOD களும் EC அங்கத்தவர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

### 6.2. நல்லாட்சிக்காக செயற்பாட்டுக் குழுக்கள்

PUC ஆனது அதன் சபையினூடாக பல பணிக்குழுக்களை அமைக்கலாம், நிர்வாகக் குழு, பங்குதாரர்கள் மற்றும் பணிப்பாளர் சபையிலிருந்து பெறப்பட்ட பிரதிநிதிகள், PUC வணிகத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட செயல்பாட்டு, நிதி, சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கான பொறுப்புகளை வழங்குகின்றது.

இந்தக் குழுவில் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட செயற்பாட்டுப் பிரதானி/ அலகுப் பிரதானி இருத்தல் வேண்டும்.

செயற்பாட்டுக் குழுக்களின் சில உதாரணங்கள் கீழ்வருமாறு;

- பங்கு மூலதனத்தை திரட்டுவதற்கான குழு
- விவசாய – வணிகக் குழு (தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி)
- மனித வளம் மற்றும் பெறுகைக் குழு

- நிதி மற்றும் கணக்காய்வுக் குழு
- சந்தைப்படுத்தல் குழு (உள்ளீடு மற்றும் வெளியீடு)
- பகிரப்பட்ட சேவைகளுக்கு வசதியளித்தல் மற்றும் பராமரிப்பு குழு
- தொடர்பாடல் மற்றும் வலையமைப்புக் குழு
- கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு
- பிரச்சனைகள்/ முரண்பாடுகளை தீர்த்தல் மற்றும் முகாமை செய்வதற்கான குழு

### 6.2.1. பிரச்சனைகள் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல்

கொத்தணிக் கம்பனிகளில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் மோதல்கள் ஒரு பொதுவான நிகழ்வாகக் காணப்படுகின்றன, மேலும் சிக்கலைத் தீர்ப்பதாற்கு PUC நிர்வாகத்தின் விரைவான ஈடுபாடு தேவைப்படுகிறது, கற்றுக்கொண்ட பாடங்களாகவும் கம்பனிகளின் வணிகம் அல்லது அதன் நற்பெயருக்கு எந்த வகையான களங்கத்தையும் ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்குமான விடயமாக கருதப்படுகின்றது. மோதல்களைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்படுவதால், அங்கத்தவர்கள் உள்ளக குழுக்களை உருவாக்கி PUCகளின் சரிவுக்கு வழிவகுக்கும்.

கம்பனியின் செயற்பாடுகளில் நம்பகத்தன்மை இல்லாமை, நிதி விவகாரங்களைக் கையாள்வதில் போதிய வெளிப்படைத்தன்மை, பெறுகை நடவடிக்கைகள், வளங்களைப் பகிர்தல், அங்கத்தவர்களுக்கு அநீதி, அரசியல் செல்வாக்கு, கலாச்சார சார்பு போன்ற காரணங்களால் கம்பனியில் பதிவு செய்யப்பட்ட பங்குதாரர்களின் பொது உறுப்பினர்களுடன் போதுமான தொடர்பு இல்லாததால் மோதல்கள் உருவாகலாம்.

சிக்கல்கள் மற்றும் மோதல்கள் கவனமாகக் கையாளப்பட வேண்டும் மற்றும் கம்பனியின் குறிக்கோள்களின் அடிப்படையில் வணிகச் செயல்பாட்டை சுமூகமாக நடத்துவதற்கான வழிகளை PUC எப்போதும் கண்டுபிடிக்க வேண்டும்.

ROC இன் கீழ் சட்டப்பூர்வமாக பதிவுசெய்யப்பட்ட கம்பனியாக மற்றும் அரசாங்கத்தின் கீழ் கம்பனிச் சட்டம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கீழ்ப்படிகிறது. இலங்கையின், மற்றும் PUC இன் அது தொடர்பான உறுப்புரைகளின் வழிகாட்டலின் படி, பிரச்சினைகள் அல்லது மோதலுக்கு தீர்வு காண நிகழ்ச்சி நிரலுடன் அழைக்கப்படும் எந்தவொரு கூட்டமும், கலந்துகொள்ளும் பங்குதாரர்கள் ROC இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும், PUC க்கு முடிவைச் சரிபார்க்க முடியும்.

உள்ளக குழு, BOD, நிர்வாகக் குழு அல்லது பொதுக் கூட்டத்தை அழைப்பதன் மூலம் பேச்சுவார்த்தைகள் மூலம் மோதல்களை எப்போதும் சாத்தியமான முறையில் தீர்த்துக்கொள்ள முடியும். மோதல்களைத் தீர்க்கும் செயல்முறையின் உதாரணம் கீழே தரப்பட்டுள்ளதுடன் PUCகள் மற்றும் அனைத்து PUCகளும் மாற்றியமைத்து பொருத்தமானதாகப் பயன்படுத்துவதற்கு இது நெகிழ்வானது.

| செயற்பாடு/ செயன்முறை | முறை |
| --- | --- |
| முரண்பாட்டினை/ பிரச்சனையை அடையாளம் காணல் | பிரச்சனை/பாதிப்புகளைப் புரிந்துகொண்டு, சம்பந்தப்பட்ட அனைத்தையும் கேட்டு, வெளிப்படையாகத் தீர்த்தல் |
| முரண்பாட்டின் நிலை | மோதலை உருவாக்க பங்களித்த கூறுகளை பட்டியலிடல் |
| சாத்தியமான தீர்வினை அடைதல் | சாத்தியமான அனைத்து தீர்வுகளையும் பட்டியலிடுங்கள்/ கலந்துரையாடல்/ஒப்பந்தம்/தீர்வு |
| பின் தொடரல் செயற்பாடுகள் | வெற்றியின் நிலையை தொடர்ந்து மதிப்பிடல். தொடர்ந்தால் வெளி மூலத்தின் உதவியை நாடுங்கள் |

### 6.3. அங்கத்தவர் சேவைகள்

PUC கள் ஆரம்பத்தில் ஆரம்ப மூலதனத்துடன் கம்பனியை உருவாக்க பங்களித்த சந்தா அங்கத்தவர்களுக்கு சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளன. தனிநபர்/தனிப்பட்ட தேவைகளுக்கு இடமளிக்கக் கூடாத ஒரு தொகுப்பாக, அங்கத்தவர்களின் கூட்டுத் தேவைகளை மேம்படுத்துவதற்கும் பூர்த்தி செய்வதற்கும் PUCகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

PUC ஊடான சேவைகளை விரிவான இரண்டு வகைகளாக பிரிக்கலாம்

a. நிதிசார் தேவைகள்
b. நிதியல்லாத பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள்

PUC களின் **நிதிசார் சேவைகள்** என்பது அங்கத்தவர்களது கூட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக PUC களால் செய்யப்படும் நேரடி முதலீடுகள் ஆகும். அவை பின்வருமாறு

- உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சந்தைப்படுத்தல்
- அவசியமான உட்கட்டமைப்பு, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.
- அறுவடையின் பின்னரான செயன்முறை மற்றும் பெறுமதி சேர்ப்பு
- PUC இன் தொழிற்பாடு மற்றும் முகாமை

PUC தனது அங்கத்தவர்களுக்கு மேலே உள்ள சேவைகளுடன் சிறப்பாகச் சேவை செய்ய, கம்பனி தனது கணக்குகளைப் பராமரிக்கும் முறையான வங்கிகள் மூலம் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தலாம்.

- விவசாய உள்ளீட்டு வழங்கல்/ சந்தைப்படுத்தலுக்கான கடன் வசதிகள்
- அடிப்படை பெறுமதி/விலை வழங்கல்/பொருட்களை முன்கூட்டியே செலுத்துவதற்கான கடன் வசதி.
- செயற்பாட்டு செலவை, முக்கியமாக போக்குவரத்து, சேமிப்பு, செயன்முறையாக்கம், பொதியாக்கம், வெளிக்களப்படுத்தல் போன்றனவற்றிற்கான கடன் வசதி

**நிதி அல்லாத சேவைகள்** PUC மூலம் செய்யப்படும் பண முதலீடுகள் ஆகும்; உ+ம்: உள்ளீட்டு வழங்கல் அல்லது மொத்தக் கடன்களைப் பெறுவதற்கான வங்கி உத்தரவாதம்.

- சந்தை நுண்ணறிவு மற்றும் விலை கண்டறிதல்
- பொருள் வர்த்தகம்/ஏற்றுமதி உதவிகள்
- வாடகை சேவைகள் – போக்குவரத்து/ களஞ்சியப்படுத்தல்/ பொறிமுறையாக்கம்
- வணிகம்/ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிலிருந்து அங்கத்தவர்களுக்கு தொழில்நுட்ப பரிமாற்றம்.
- GAP மற்றும் GMP இற்கான பெறுமதி சேர்த்தல்/ செயன்முறையாக்கம்/ பொதிப்படுத்தல்/ குறியிடல்/ சான்றுப்படுத்தல்
- விவசாய தீர்வுகள் – நீர்ப்பாசனம், அறுவடை, பயிர் முகாமைத்துவம், வானிலை ஆய்வு/ எதிர்வுகூறல்
- பண்ணை உபகரணங்கள், இயந்திரங்கள், கருவிகள் பழுது மற்றும் பராமரிப்புக்கான தொழில்நுட்ப சேவைகள்
- காப்புறுதி சேவைகள் –விவசாய காப்புறுதிச் சபையுடன் (AIB) முகவர் உடனப்டிக்கை
- பெறுமதிச் சங்கிலியின் டிஜிட்டல் மயம் - PUC மூலம் உறுதியான விநியோகத்துடன் சந்தை இருப்பை அதிகரித்தல்.

## 7. ஆக்கபூர்வமான வணிகத் தெரிவுகள் – பெறுமதி சங்கிலி அனுகுமுறையினை உருவாக்குதல்.

தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல், கொத்தணிகளை உருவாக்குதல், அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன் மூலம் நிலையான சந்தை அணுகலை அடைவதற்கு அடையாளம் காணப்பட்ட பயிர் பெறுமதிச் சங்கிலி தலையீடுகளை மையமாகக் கொண்டு PUC கள் நிறுவப்பட்டுள்ளன. PUC இன்வணிகத் திட்டத்தை உருவாக்குவதற்கான அடிப்படையாக பெறுமதிச் சங்கிலி செயல்முறை கருதப்படுகிறது. பெறுமதிச் சங்கிலியை மதிப்பிடுவது, வணிகத் திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய வணிக வாய்ப்புகளின் எண்ணிக்கையை வழங்கும். ஆகையால், மதிப்புச் சங்கிலித் தலையீடுகள் பௌதீக செயற்பாடுகளைத் தொடர தளம் அமைத்துக் கொடுக்கின்றன, அதே நேரத்தில் வணிகத் திட்டம் நிதி மற்றும் செயற்பாட்டில் பலன்களை அடைவதை உறுதி செய்கிறது. பெறுமதிச் சங்கிலி மற்றும் வணிகத் திட்டத்தை ஒன்றுக்கொன்று தனித்தனியாகப் பார்க்க முடியாது

PUC நிர்வாகக் குழு, பெரும்பான்மையான அங்கத்தவர்களால் பயிரிடப்படும் முக்கிய பயிரைக் கண்டறிந்து, அதற்கேற்ப தேவையான உள்ளீடுகள்/சேவைகள் மற்றும் விளைச்சலைப் பிரிப்பதன் அடிப்படையில் விலை விருப்பங்களுடன் சந்தை அணுகலைத் திரட்டுவதற்கான திட்டத்தையும் அறுவடையின் வகைக்கேற்ப விலைத் தெரிவுகளுடன் கூடிய உத்தேச சந்தை அனுகலையும் உருவாக்க வேண்டும்.(அதாவது, தரங்கள், பொதிப்படுத்தல், களஞ்சியப்படுத்தல்)

ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதாற்காக மாற்று பயிர் பெறுமதிச் சங்கிலிகள் அல்லது வணிக விருப்பங்களை திட்டமிடுவதும் முக்கியம்.

பெறுமதி சங்கிலித் தலையீடுகள் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தேவைகளுக்கு இணங்க வழிவகுக்கும், அங்கு PUC பண்ணைகளுக்கான GAP சான்றிதழ் மற்றும் செயலாக்க மற்றும் சந்தைப்படுத்தல் மையங்களுக்கு GMP சான்றிதழை ஊக்குவிக்க வேண்டும் அது பல்வகைமையுடன் கூடிய சந்தைத் துறையில் கொள்வனவாளர்களதும் வாடிக்கைகாளர்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான முதல் படியாகும்.

*PUC DOA இன் GAP உத்தியோகத்தருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் அங்கத்தவர்களான விவசாயிகளுக்கு SL-GAP அமைப்பின் விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் சான்றிதழை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.*

### Diagrammatic View of Crop Value Chain

இயக்கு CVC - Concept/model




*PUC செயல்பாடுகளை சாத்தியமானதாகவும் நிலையானதாகவும் மாற்ற, முழு பெறுமதிச் சங்கிலி செயல்பாடுகளையும் வரைபடமாக்குவது மற்றும் குறிப்பிட்ட பயிர்/பண்டத்தின் கீழ் ஒவ்வொரு செயலையும் ஆதரிக்கும் சேவைகளை அடையாளம் காண்பது அவசியம். மேம்படுத்தப்பட்ட பெறுமதிச் சங்கிலி உற்பத்தித்திறனுக்கு முக்கியமானதாகக் கருதப்படும் இரண்டு வகையான சேவைகள் உள்ளன; செயல்பாட்டு சேவைகள் மற்றும் ஆதரவு சேவைகள்*

- *செயல்பாட்டு சேவைகளில் உள்ளடங்குபவை– உள்ளீட்டு வழங்கல், இயந்திரங்கள்/ உபகரணங்களின் வெளிக்களப்படுத்தல், திருத்தச் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புக்காக குறித்த சேவை வழங்குநர்கள் குறிப்பிட்ட சில வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.*
- *உதவிச் சேவைகள் கடன் சேவைகள், பயிற்சி/ கல்வி, கொத்தணி/ உற்பத்தியாளர் குழுவினருக்கு சேவை வழங்கக்கூடிய சந்தை மேம்பாடு போன்றனவற்றை உள்ளக்கியதாகும்.*

### 7.1. *பெறுமதி சங்கிலி முகாமைத்துவம்*

PUC *ஊடாக தீர்க்கப்பட வேண்டிய/ வசதியளிக்கப்படவேண்டிய பொதுவான அம்சங்கள் பின்வருமாறு; அதன் அங்கத்தவர்களிடமிருந்து உற்பத்திக்கான சந்தை தேவையை ஆராய்தல், உற்பத்திக்கான உள்ளீடுகள், ஏற்பாட்டியல் முகாமைத்துவம், கடன் முகாமைத்துவம், முதன்மை செயலாக்கம், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் சந்தையில் போட்டியிடுவதற்கான தளத்தை உருவாக்குதல்.* PUC *ஆனது உள்ளீட்டு/ வெளியீட்டு சந்தைப்படுத்தலுக்கான ஒரே தளமாகும்.*

***சந்தை உதவி ஒருங்கிணைப்பு***

*பழமையான வணிக கலாச்சாரத்தை மாற்றுவதன் மூலம் சிறு விவசாயி சமூகத்தை மேம்படுத்த* PUC *கருத்து வழிவகுக்கும்; "**சில்லறையாக வாங்குதல் மற்றும் மொத்தமாக விற்பனை செய்தல்**" என்பதிலிருந்து ""**மொத்த விற்பனையில் வாங்குதல் மற்றும் மொத்தமாக விற்பனை செய்தல்**""*

***ஒருங்கிணைத்தல், வெளிக்கள்ப்படுத்தல் மற்றும் நிறுவனம்சார்** ஆகிய மூன்று தூண்களை இணைப்பதன் மூலம் சந்தை தேவையை கைப்பற்றுவதற்கான கம்பனியின் முன்னோக்கிய வழியை பின்வரும் படம் விவரிக்கும்.*

***மொத்த கொள்வனவு மற்றும் மொத்த விற்பனைக்கான*** *– வணிக கலாசாரத்தை உருவாக்குதல்.*




**படம் – தொழிற்பாட்டு நிலையில் PUC - பெறுமதி சங்கிலி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்**

*PUCகள், ASMP நிகழ்ச்சித்திட்டத்தால் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு போன்ற வளங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் பயனுள்ள சந்தைப்படுத்தல்/பேச்சுவார்த்தைகளுக்கான பொதுவான தளத்தை நிறுவுவதில் கவனம் செலுத்த வேண்டும். இதில் உற்பத்தி, சேமிப்பு, செயலாக்கம், இயந்திரங்கள்/பகிரப்பட்ட சேவைகளுக்கான உபகரணங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் நவீன தொடர்பாடல் முறைமைகள் போன்றன மூலம் PUC வணிக நடவடிக்கைகளைத் தக்கவைப்பதற்கான அமைப்புகள் என்பன உள்ளடங்குகின்றன.*

***அதிகார பரவலாக்கம்/ பகிர்ந்தளிப்பு***

*திறமையான மற்றும் முறையான அணுகுமுறைகள் மூலம் அதன் வணிக இலக்குகளை அடைய PUC களுக்கு உத்தியோகத்தர்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பிரதிநிதித்துவம் செய்வது ஒரு இன்றியமையாத செயலாகும். PUC கள், அவ்வப்போது மேற்கொள்ளப்படும் வலுவான செயல்திறன் மதிப்பீட்டு பொறிமுறையுடன் தேவையான நேரத்தில் தேவையான முடிவுகளை எடுக்க போதுமான அதிகாரத்துடன் தெளிவான பொறுப்புகளை நிறுவுவது*

*அடிப்படையாகும். EC/BOD அங்கத்தவர்களுக்கு வெவ்வேறு செயற்பாடுகளை வழங்குவதன் மூலம் பணிகள் வழங்கப்பட வேண்டும். உ+ம்; நிதி, சந்தைப்படுத்தல், மனித வளம், நிர்வாகம் போன்றவை.*

***நிறுவன வலையமைப்பு***

*உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை குறிப்பாக பங்குதாரர்களுக்கு மற்றும் PUC இன் நிலைத்தன்மையை அதிகரிக்க, இயந்திரங்கள், நிகழ்நிலை முறைமைகள், டிஜிட்டல் முகாமைத்துவம், தொடர்புடைய நிறுவன அமைப்புகளுடன் வலைமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி/செயலாக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் விநியோகத்தை இயந்திரமயமாக்குவதற்கு PUC ஊக்குவிக்கப்படுகிறது. நிறுவனங்களின் பெயர் பட்டியல், அவற்றின் பணிகாள், தொடர்பு விபரங்கள் என்பன* ***இணைப்பு 23*** *இல் தரப்பட்டுள்ளது.*

***தேவைகள் மதிப்பீடு***

*உள்ளீடுகள்/வெளியீடு (உற்பத்தி) தேவைகளை அடையாளம் காணும் தேவையை (கடந்த கால தேவை முறைகளை ஆய்வு செய்ய/ஒப்பிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது) PUC மேற்கொள்ள வேண்டும். இது PUC க்கு தேவையான அளவு, தரம் மற்றும் பொருட்கள் (பொருட்கள்/சேவைகள்) அந்தந்த சந்தையில் வழங்கப்படுவதற்கான நேரம் ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது.*

***பெறுகைச் செயன்முறை***

*PUC பல்வேறு பெறுகைச் செயல்முறைகளைப் ஆராய்தல் மற்றும் உள்ளீடுகள்/சேவைகள் செலவு குறைந்த மற்றும் அடிப்படையில் உயர் மட்ட வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கான PUC உடன் இணைக்கப்பட்ட கணக்கீட்டு/ கணக்காய்வு சேவைகளுடன் கலந்தாலோசித்து திறமையான நடைமுறைகளைத் தீர்மானிக்கிறது..*

### பொருட்கள் பதிவு முகாமைத்துவம்

*PUCகள் எந்த நகல் அல்லது துணை அமைப்புகளும் இல்லாமல் உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளை நிர்வகிப்பதற்கு/பதிவு செய்வதற்கு ஒரு செயல்பாட்டு அமைப்பை உறுதி செய்ய வேண்டும். தொடர்புடைய வகையான புத்தகங்கள் மற்றும் பதிவுகள் இணைப்பு 02 இல் பட்டியலிடப்பட்டுள்ளன, மேலும் ஒவ்வொன்றிற்கும் தொடர்புடைய படிவங்கள் மற்றும் அமைப்புக்கள் கம்பனியுடன் இணைக்கப்பட்ட கம்பனியின் செயலாளர்/ கணக்காய்வு சேவைகள் மூலம் பெறப்பட வேண்டும். இந்த கையேட்டின் முடிவில் மாதிரி வடிவங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைக் கருத்தில் கொள்ளவும்.*

## 8. வணிக திட்டமிடல்

*வணிகத் திட்டங்கள் PUC இன் பெறுமதிச் சங்கிலி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு ஆகும். PUC இன் கீழ் உள்ள பகுதிக்குள் வணிக நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வணிகத் திட்டத்தை உருவாக்குவதற்கு பொருத்தமான வணிக வாய்ப்புகளை அடையாளம் காணலாம். இருப்பினும், அடையாளம் காணப்பட்ட வணிக வாய்ப்பை இடர் பகுப்பாய்வு லென்ஸ் மூலம் அனுப்பாத வரை பொருத்தமான வணிகமாக மொழிபெயர்க்க முடியாது.*

*PUC களின் வணிகத் திட்டம் கம்பனி எவ்வாறு பெறுமதிகளை உருவாக்குகிறது, வழங்குகிறது மற்றும் கைப்பற்றுகிறது என்பதை விவரிக்கிறது. PUC களுக்கு வணிகத் திட்டம் என்பது நிறுவனத்தின் நோக்கங்களை உணர்ந்து, நிலையான வணிக அபிவிருத்தியை வெளிக்காட்டும் மிக முக்கியமான அங்கமாகும். தெரிவு செய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலியுடன் தொடர்புடைய பல்வேறு வகிபாகத்தினர், சந்தை அணுகல் மற்றும் நிறுவன பங்குதாரர்களின் ஒருங்கிணைந்த பங்கேற்பை வலுப்படுத்தும் அதே வேளையில், அடுத்த ஐந்தாண்டுகளுக்கான செயல் திட்டத்துடன் முன்னோக்கிச் செல்வதன் மூலம் PUCக்கான முக்கிய ஆவணமாக இது உள்ளது.*

### 8.1. வணிகத் திட்டத்தை தயாரித்தல்/ இற்றைப்படுத்தல்

#### 8.1.1. பெறுமதிச் சங்கிலியை பகுப்பாய்வு செய்தல்.

*விவசாயி அங்கத்தவர்கள், கிராமத்தில் உள்ள முற்போக்கு விவசாயிகள், கிராம விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் மற்றும் பிற முன்னணி கருத்துத் தெரிவுப்பாளர்களுடன் சிந்தனைக் கிளரல் செய்தல், குறிப்பாக உற்பத்திக்கு முன்னரான, உற்பத்தி மற்றும் உற்பத்திக்குப் பின்னரான நிலைகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலியில் வருமானம் ஈட்டுவதற்கான துணை வாய்ப்புகளைக் கண்டறிய உதவும்.*

#### 8.1.2. முக்கியமான வாய்ப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்துதல்.

*சந்தை ஈர்ப்புடன் வருமானம் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளுக்கு அதிக வாய்ப்புள்ள முக்கியமான பகுதிகளுக்கு கவனம் செலுத்தப்படுகின்றது. PUC ஆல் முன்னுரிமை மற்றும் பரிசீலனை செய்வதாற்காக பரிந்துரைக்கப்பட்ட வணிக வாய்ப்புகளுக்கு இணைப்பு 06 ஐப் பார்க்கவும்*

*அடையாளம் காணப்பட்ட வாய்ப்புகளின் பட்டியலுக்கு, PUCக்கான உற்பத்தித்திறன்/வருமானம் மற்றும் அதன் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான நோக்கத்தைக் கண்டறிய பின்வரும் பகுதிகளுக்கு ஏற்ப முக்கியமான பகுப்பாய்வு தேவைப்படுகிறது.*

***சந்தையின் அளவு –***

*தேவை, அடையக்கூடிய நுகர்வோரின் எண்ணிக்கை, தேவையின் காலம் (நீண்ட கால/குறுகிய கால/நடுத்தர கால).*

**போட்டி –**

*இப்பகுதியில் செயல்படும் தற்போதைய சேகரிப்பாளர்/வர்த்தகர் வலையமைப்பு, அருகிலுள்ள நகரங்கள், நகர்ப்புறங்கள், மாகாணங்கள், ஏற்றுமதி மற்றும் நிகழ்நிலை தொழிற்பாட்டாளர்களில் அடையாளம் காணப்பட்ட பிற சந்தை அணுகல் ஆகியவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் போட்டியாகும். இந்த முக்கியமான வலையமைப்புக்களை PUC உடன் இணைப்பது சாத்தியமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட தயாரிப்பு சந்தைப்படுத்தல் மையத்திற்கு போட்டியாளர்களை ஈர்ப்பதற்காக அனுகூலங்கள் காணப்படும்.*

*தற்போதுள்ள தேவை, மாற்றீட்டு/மாற்று தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மை, தற்போதுள்ள வழங்குனர்கள் மற்றும் அவர்களின் திறன்கள், PUC வழங்கும் தயாரிப்புகளின் போட்டித்தன்மை/தனித்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தைப் போட்டி மதிப்பிடப்படுகிறது.*

***விலை மற்றும் தரம் –***

*சந்தை அமைப்புகள் தரம், அளவு மற்றும் விலை ஆகியவற்றின் அடிப்படையில் விரைவான பல்வகைப்படுத்தலைக் கண்டுள்ளது. பல்வேறு தரம்/தரமான தயாரிப்புகளை அடையாளம் காணும் சந்தையில் உள்ள நுகர்வோர் பிரிவுகளுக்கு ஏற்ப விலைகள் மாறுபடலாம் என்பதை இது குறிக்கிறது. இது தொடர்பில் PUC உள்ளூர்/ஏற்றுமதி சந்தைப் பிரிவுகளுக்கான வெவ்வேறு தர விளைபொருட்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையுடன் தயாராக இருக்க வேண்டும்.*

*தனிப்பட்ட விவசாயிகள் எப்பொழுதும் தினசரி சந்தை விலையை சார்ந்து இருப்பார்கள் மற்றும் பண்ணை வாயிலில் உற்பத்தி செலவு மற்றும் விலை இடைவெளி ஆகியவற்றைக் கணக்கிடுவதில்லை. இந்த நடைமுறை எப்போதும் விளைபொருட்களை நஷ்டத்தில் விற்பனை செய்வதில் முடிவடைகின்றது. எனவே, உற்பத்தியின் ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் என PUC ஆனது உற்பத்திச் செலவு மற்றும் விலை இடைவெளி மற்றும் போட்டியாளர் விலைப் பகுப்பாய்வைக் கருத்தில் கொண்டு, விலையைக் குறைக்கும் வழிகளைக் கண்டறிந்து, போட்டியாளர் விலைக்கு இணையாக விலைகளைக் கொண்டு வர முடியும்.*

*சர்வதேச வழங்குனர்கள் இருக்கின்ற காரணத்தினால் ஏற்றுமதி சந்தைப்படுத்தலானது அதிக போட்டித் தன்மையுடன் கூடியது என்பதாக கருதப்படுகின்றது. ஏற்றுமதி வணிகத்துடன் இணைந்திருக்க, குறிப்பிட்ட விளைபொருட்களின் உள்ளூர் சந்தை விலைக்குக் கீழே அல்லது அதற்கு மேல் விலை வழங்கக்கூடிய சிறப்பு விலைக் கட்டமைப்பை PUC நிர்ணயிக்க வேண்டும்..*

*அதன்படி, சந்தைகள் மற்றும் உற்பத்தியாளர் இரு சாராரையும் திருப்திப்படுத்துவதற்காக, ஏற்றுமதி மற்றும் உள்ளூர் சந்தைகளுக்கு சதவீத அடிப்படையில் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இது 20-80 அல்லது 40-60 சதவீதமாக (ஏற்றுமதி: உள்ளூர்) தீர்மானிக்கப்படலாம், இதன் போது அதிக உள்ளூர் சந்தை காலங்களில் உற்பத்தியாளர் மொத்த உற்பத்தியின் 20% அல்லது 40% ஏற்றுமதியாளர்களின் விலைக்கு விற்பனை செய்ய இணக்கம் தெரிவிக்க முடியும், அதே சமயம் மீதியாக உள்ள இருப்பினை புதிய விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களுடன் இணைந்து வழக்கமான விநியோகம் மற்றும் வலுவான உறவைப் பராமரிப்பதற்காக PUC மூலம் சந்தைப்படுத்த முடியும்.*

***உள்ளீடுகள் மற்றும் வளங்களின் இருப்பு –***

*சில்லறையாக வாங்குவதும், மொத்தமாக விற்பனை செய்வதுமான பாரம்பரிய நடைமுறையானது விவசாயத்தை குறைந்த வருமானமும் எதிர்கால முதலீடுகளுக்கான சேமிக்கள் எவையுமற்ற ஏழைகளின் தொழிலாக மாற்றியுள்ளது, PUC உடன் கிடைக்கும் பகிரப்பட்ட வசதிகள் / உட்கட்டமைப்பு மற்றும் மொத்த விற்பனை விலையில் விவசாயத்திற்கான மொத்த உள்ளீடுகள் ஆகியவை இலாபகரமான விவசாயத்தை ஊக்குவிக்கும் என்பதுடன் அது PUC இனது நிலைபேறுக்கு உதவுவதுடன் PUC உடன் விவசாயிகள் நீண்ட காலம் தங்கியிருப்பதற்கும் உதவுகின்றது.*

***நிகழ்தகவின் மட்டம்-***

*PUC இன் வருமானம் என்பது பண்ணை வாயில் அல்லது பொதுவான சந்தைப்படுத்தல் மையம் அல்லது பகிரப்பட்ட சேவைகள் மூலம் விற்பனை மற்றும் விற்பனை விலையின் அளவைப் பொறுத்ததாகும். மொத்த விற்பனை, ஏற்றுமதியாளர்கள், நவீன சில்லறை விற்பனை சங்கிலிகள், நேரடி நுகர்வோர் துறைகள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள், நிகழ்நிலை விநியோகம், பருவகால தேவை, வாய்ப்புகளுக்கான வழிகள் போன்ற சந்தை அணுகல் வகைக்கு ஏற்ப மாறுபடும் வகையில் விற்பனை விலையை PUC நிர்ணயிக்க முடியும்.*

***சந்தைப் பிரவேசத்திற்கான தடைகள் –*** *சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு, உணவு ஒழுங்குமுறை, தரம்/நியமச் சான்றிதழ், பொதியிடல் மற்றும் குறியிடலுக்கான தேவை, உள்ளூர் கொள்கைகள்/ வர்த்தகத்தின் மீதான வரிவிதிப்பு போன்றவற்றின் இணக்கத் தேவைகள்*

### 8.1.3. இடர் பகுப்பாய்வு

மேற்கூறிய உண்மைகளின் அடிப்படையில், இடர் மற்றும் தணிப்பு முறைகளை மதிப்பிட்டு வணிகத் திட்டத்தை உருவாக்குவதற்கு அடையாளம் காணப்பட்ட பொருத்தமான வணிக வாய்ப்புகள் பரிசீலிக்கப்படலாம். இடர் பகுப்பாய்வில் பின்வரும் காரணிகள் கருதப்படுகின்றன

வருமானத்தில் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளைக் கண்டறிதல் –

உள்ளீட்டு வழங்கல், தொழில்நுட்பம் (பாரம்பரிய மற்றும் நவீன) பருவ கால பயிர்ச் செய்கை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல், வானிலை மற்றும் பயிர்களில் சேதம்

உட்கட்டமைப்பு சார் இடர்களை இனங்காணல் -

*PUC*யின் வருமானத்தை பாதிக்கக்கூடிய களஞ்சிய வசதிகள், ஆலை மற்றும் உபகரணங்கள்.

சந்தை அனுகல்-

ஒற்றை சந்தை அணுகலில் ஆபத்து அதிகம். கிராம சேகரிப்பாளர்/வர்த்தகர் வலையமைப்புக்களுடன் தொடர்புடைய ஆபத்துக்கள்

கொள்கைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அடையாளம் காணல்-

உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், உணவுப் பாதுகாப்பு, பொதியாக்கம், குறியிடல் ஒழுங்குவிதிகள் போன்றன

### 8.1.4. *சந்தைத் தொடர்புகள்*

அடையாளம் காணப்பட்ட உற்பத்திப் பொருட்களின் ஒருங்கிணைந்த உற்பத்தியாளர் மற்றும் வழங்குனர் என *PUC* ஆனது சந்தைப்படுத்துதலுக்கான விளைபொருட்களை தொடர்ந்து வழங்க வேண்டும். இது சம்பந்தமாக தனிப்பட்ட அங்கத்தவர், *PUC* மற்றும் சந்தை அணுகல் ஆகியவை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலையில் விளைபொருட்களை வழங்குவதை உறுதிப்படுத்தும் முத்தரப்பு உடன்படிக்கையில் நுழைய வேண்டும்.




ஒருங்கிணைப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கான பொருத்தமான பொறிமுறை

*PUC* தனிப்பட்ட அங்கத்தவர்கள்/பங்குதாரர்களுடன் ஒப்பந்தம் செய்து, நிர்ணயிக்கப்பட்டபடி சீரான இடைவெளியில் விளைபொருட்களை வழங்குவதை உறுதி செய்கிறது. கம்பனியின் தனிப்பட்ட அங்கத்தவர்களுடன் ஒப்பந்தம் செய்யப்படுகின்றது

சந்தை அனுகலுடன் PUC பேச்சுவார்த்தை செய்கின்றது

அடையாளம் காணப்பட்ட அளவு, விலை, தரம் மற்றும் விநியோக இடைவெளியுடனான சந்தை அனுகளுக்காக PUC ஒப்பந்தம் செய்கின்றது

உற்பத்திப் பொருட்களை மீளக் கொள்வனவு செய்தல். PUC அங்கத்தவர்களிடமிருந்து பொருட்களை பெறுகை செய்து வாங்குகின்றது, அவை முக்கிய சேகரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் மையத்திற்கு விநியோகிக்கப்படுகின்றன.

PUC பொருட்களின் விற்பனையை ஆரம்பிக்கின்றது

வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பணம் செலுத்தப்படுகின்றது. கொள்வனவாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதுடன் உற்பத்தியாளர்களுக்கு செலுத்துதல்.

### 8.1.5. வணிக வாய்ப்புக்களுக்கான நிதியியல் பகுப்பாய்வு

PUC மற்றும் அதன் வணிகத் திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வணிக மாதிரிகளின் சாத்தியம் அல்லது நிதி நிலையை நிதி பகுப்பாய்வு பரிந்துரைக்கிறது. நிதி சாத்தியக்கூறுகளின் முக்கிய நிர்ணயம் வருவாய் மற்றும் செலவுகள் ஆகும்

### 8.1.5.1. பாதீடு

அடையாளம் காணப்பட்ட வணிக நடவடிக்கைகளுக்கான நிதி ஆதாரங்களை PUC எவ்வாறு திரட்டுகிறது என்பதைக் காட்ட இது ஒரு குறிகாட்டியாகும். பாதீடானது பின்வரும் அம்சங்களை அடையாளம் காட்டுகிறது.

- விற்பனை மற்றும் சேவைகள் மூலம் வருவாய்/வருமானம்

  மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை இலக்குகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அலகு விலை ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

- விற்பனை மற்றும் சேவைகளுக்கான செலவு

  நிதி நியதிகளின் படி நேரடி செலவுகள் மற்றும் மறைமுக செலவுகள் என இரண்டு வகையான செலவுகள் உள்ளன

நேரடிச் செலவு-

பொருட்களை உற்பத்தி செய்யும் அல்லது சேவைகளை வழங்கும் செயல்பாட்டில், குறிப்பிட்ட செலவினங்களை தயாரிப்பு அல்லது சேவையில் எளிதாகக் கண்டறிய முடியும். உற்பத்தித் திட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்/உள்ளீடுகளின் அளவு மற்றும் சந்தைப்படுத்தல் செலவு ஆகியவற்றுடன் மாறக்கூடிய செலவுகள் மாறுகின்றன. உதாரணம்- மூலப்பொருட்கள், உற்பத்தி பொருட்கள், இயந்திரங்கள், உழைப்பு

மறைமுகமான செலவு-

பொருட்களை உற்பத்தி செய்யும் அல்லது சேவைகளை வழங்கும் செயல்முறைக்கு அப்பால் வணிக நடவடிக்கைகளுடன் பிணைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட தயாரிப்பு அல்லது சேவைக்கு குறிப்பிட்ட செலவை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. மறைமுக செலவு நிலையானதாகவோ அல்லது மாறக்கூடியதாகவோ இருக்கலாம், ஆனால் உற்பத்தி செயல்முறையிலிருந்து சுயாதீனமாக இருக்கும் மற்றும் PUC உற்பத்தி மற்றும் விற்கும் அலகுகளின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் நிலையானதாக இருக்கும். உதாரணம் - காணி, வாடகை, காப்புறுதி, மின்சாரம்,

நேரடி செலவு மற்றும் மறைமுக செலவுகளின் கூட்டுத்தொகை மொத்த உற்பத்தி செலவுக்கான குறிகாட்டியாகும், இதன் மூலம் உற்பத்திக்கான அலகுச் செலவை தீர்மானிக்க முடியும். மொத்த உற்பத்தியின் அதிகரிப்புடன் அலகு விலை குறைகிறது

*நிகர மிகைத் தொகை –*

*அங்கத்தவர் ஈவுத்தொகை, வட்டி மற்றும் வரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன் கணக்கிடப்பட்ட செலவினங்களை விட அதிகமான வருமானத்தின் அளவைக் கண்டறியவும்*

*பிரிக்கப்பட்ட பகுப்பாய்வு –*

*இது மொத்த செலவு மற்றும் மொத்த வருமானம் சமமாக இருக்கும் புள்ளியை அடையாளம் (சமபாட்டுப் புள்ளி) காட்டுகிறது. சமபாட்டுப் புள்ளியை விட*

*அதிகமாக விற்பனை செய்தால்* PUC *இற்கு இலாபம் கிடைக்கும். இந்த முயற்சியில் நிறுவனம் இலாபம் பெறவில்லை அல்லது இழக்கவில்லை. இது ஒரு நிறுவனத்தின் சமபாட்டுப் புள்ளியை (BEP) தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் நிதிக் கணக்கீடு ஆகும்.*

*மூலதனத் தேவைகள் – செயற்பாட்டு மூலதனம் மற்றும் நிலையான மூலதனம்*

*செயற்பாட்டு மூலதனம் –*

*பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்களை வாங்குதல், அவர்களுக்கு முற்பணம் செலுத்துதல், விளைபொருட்களை ஒரு குறிப்பிட்ட வணிக சுழற்சிச் சட்டாக்த்தினுள் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான செலவு, செயலாக்கம், பொதியாக்கம், களஞ்சியப்படுத்தல், காப்புறுதி, தொடர்பாடல் போன்றவை, ஒரு சுழற்சிச் செயல்பாட்டிற்குத் தேவைப்படும் முதலீட்டைக் குறிக்கிறது.*

*வணிகச் சுழற்சி என்பது மூலப்பொருட்களை வாங்குவதற்கும், பதப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும், பொருட்களின் பரிமாற்றத்தில் வருமானத்தைப் பெறுவதற்கும் தேவைப்படும் சராசரி காலம் ஆகும்.*

*சம்பள பட்டியல் மற்றும் கட்டணக் கொடுப்பனவுகள் போன்ற அன்றாட நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க ஒரு நிறுவனம் பயன்படுத்தும் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளாகவும் இது அடையாளம் காணப்பட்டுள்ளது.*

*நடைமுறைச் சொத்துக்கள் (கையிருப்பில் உள்ள பணம், வங்கியில் உள்ள பணம், வைப்பிலிட்டுள்ளவர்கள், கையிருப்பில் உள்ள இருப்புப் பொருட்கள்) மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் (கடன் வழங்கியவர்கள், வட்டி மற்றும் நிலுவையில் உள்ள தவணைக் கொடுப்பனவுகள், ஏனைய குறுகிய கால பொறுப்புக்கள்).*

*நிகர தொழிற்பாட்டு மூலதனம் (நடைமுறைச் சொத்துக்கள்- நடைமுறைப் பொறுப்புக்கள்) மற்றும் இதில் நடைமுறைப் பொறுப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களை விட அதிகம் எனின் தொழிற்பாட்டு முதலீட்டின் இடைவெளியை நிரப்புவது அவசியம் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.*

*நிலையான மூலதனம் –*

*உட்கட்டமைப்பு, பண்ணைக்கு வெளியே மேம்பாடு, அலுவலக உபகரணங்கள், பண்ணை இயந்திரங்கள், செயன்முறையாக்க உபகரணங்கள் போன்ற வணிகத்தை நிறுவ மற்றும் செயல்படுத்த தேவையான சொத்துக்கள் அல்லது முதலீடுகள்*

### 8.1.5.2. *நிதி அறிக்கைகள்/ கூற்றுக்கள்*

PUC வணிகத்தின் நிதி நடவடிக்கைகள் மற்றும் நிலை பற்றிய முறையான பதிவாகும். தொடர்புடைய நிதிசார் தகவல்கள் கட்டமைக்கப்பட்ட முறையிலும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வடிவத்திலும் வழங்கப்படுகின்றன

இதில் அடிப்படையில் நான்கு நிதிசார் கூற்றுக்கள் உள்ளடங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தின் நிறைவில் வணிக நிறுவனத்தின் நிதி செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு மூன்று நிதி அறிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு

i. வருமான மற்றும் இழப்புக் கூற்று –

ஒரு வருமானக் கூற்றானது PUCகளின் வருமானம், செலவுகள் மற்றும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் இலாபம் தொடர்பான விபரங்களை அறிக்கையிடுகின்றது. அது கம்பனியின் தொழிற்பாடு தொடர்பான தகவலை வழங்குகின்றது.

***வருமானம் மற்றும் இழப்புக்கான கூற்றின் மாதிரி அமைப்பு***

| **வருமானம்** | **நேரடி செலவுகள்** | **மறைமுக செலவுகள்** |
|---|---|---|
| 1 மொத்த விற்பனை | 4 பொருட்களுக்கான செலவு | 8 சம்பளங்கள் |
| 2 ஏனைய வருமானங்கள் (பகிரப்பட்ட சேவைகள்) | 5 மேல் நிலை செலவு | 9 போக்குவரத்து |
| **3 மொத்த வருமானம் = 1+2** | 6 ஆரம்ப இருப்பு + கொள்வனவுகள் | 10 வாடகை |
| | **7 மொத்த நேரடி செலவுகள் = 4+5+6** | 11 வட்டி |
| | | 12 நானாவித |
| | | **13 மொத்த மறைமுக செலவுகள் = 8+9+10+11+12** |
| **14 நிகர இலாபம் = 3 – (7+13)** | | |
| **இலாபம் பெறும் சாத்தியக் கூறு = 14/3 x 100** | | |

ii. ஐந்தொகை –

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு கம்பனியின் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமையாளர்களின் பங்கு தொடர்பான நிதி நிலை அறிக்கைகளின் கூற்றாகும். சொத்துக்கள் என்பது PUCக்கான வருமானத்தை ஈட்டுவதற்கு பயன்படுத்தப்படும் அசையா அல்லது அசையும் சொத்துக்களாகும்.

கணக்குக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக சொத்துக்கள் நிலையான சொத்து நடைமுறைச் சொத்து என்பதாக வகைப்படுத்தப்படுகின்றன.

நடைமுறைச் சொத்துக்களில் வணிகத்திற்கு சொந்தமான வளங்களும், பண மீதி, வங்கி மீதி, மூலப் பொருட்களின் இருப்பு மற்றும் நிறைவு செய்யப்பட்ட பொருட்கள், கடனாளிகள் தரவேண்டிய பணம் என்பனவும் உள்ளடங்குகின்றன.

காணி, கட்டடங்கள், இயந்திரங்கள் யாவும் நிலையான சொத்துக்களாகும்.

பொறுப்புக்காள் எனப்படுவது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியினுள் செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளவையாகவும் என கணக்குக் கூற்றில் கருதப்படுகின்றது;

வணிகத்தைத் ஆரம்பிப்பதற்காக பங்களிப்புச் செய்த அங்கத்தவர்களது பங்கு

நீண்ட கால பொறுப்புக்கள் – கடன்கள் மற்றும் வைப்புக்களாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம், இவை ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியினுள் செலுத்தப்படல் வேண்டும்.

குறுகிய கால பொறுப்புக்கள் எனப்படுவது நடைமுறை ஆண்டினுள் செலுத்தி முடிக்க வேண்டியதாக பெறப்பட்டுள்ள கடன்கள்/ வைப்புக்கள்

**கணக்குக் கூற்றின் மாதிரி அமைப்பு**

| **சொத்துக்கள்** | **பொறுப்புக்கள்** |
|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | நடைமுறைப் பொறுப்புக்கள் |
| 1 பணம் | 14 செலுத்தவேண்டிய கடன்கள் |
| 2 மூலப் பொருட்கள் | 15 வைப்புக்கள் |
| 3 செயற்பாட்டில் உள்ள வேலைகள் | **16 மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் = 13+14** |
| 4 நிறைவு செய்யப்பட்ட பொருட்கள் | |
| 5 கிடைக்க வேண்டிய கணக்குகள் | நிலையான பொறுப்புக்கள் |
| **6 மொத்த நடைமுறைச் சொத்துக்கள் = 1+2+3+4+5** | 17 செலுத்தவேண்டிய கடன்கள் |
| | 18 நீண்ட கால வைப்புக்கள் |
| நிலையான சொத்துக்கள் | 19 ஆரம்ப மூலதனம்/ உரிமையாளரின் பங்கு |
| 7 காணி | **20 மொத்த நிலையான பொறுப்புக்கள் = 16+17+18** |
| 8 கட்டடம் | |
| 9 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | **21 மொத்த பொறுப்புக்கள் = 16 + 20** |
| 10 அலுவலக உபகரணங்கள் | |
| 11 கூட்டிணைக்கப்பட்ட தேய்மானங்கள் (கழித்தல்) | |
| **12 நிகர நிலையான சொத்துக்கள் = 7+8+9+1-11** | |
| | |
| **13 மொத்த சொத்துக்கள் = 6+12** | |
| **நிகர பெறுமதி = 13-21** | |

iii. பணப் போக்குக் கூற்று –

வணிகத்தில் பண உள் வரவு மற்றும் பணம் வெளிச் செல்லல் தொடர்பானதாகும். கம்பனியின் நம்பகத்தன்மையை தீர்மானிக்க இது ஒரு பயனுள்ள கருவியாகும். இது கம்பனியின் செயற்பாடுகள், முதலீடு மற்றும் நிதியிடல் செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்கிறது.

**பணப் போக்குக் கூற்றுக்கான மாதிரி**

| **பண உள்வரவு நிதியிடல்** | **பண உள்வரவு நிதியிடல்** | **பண உள்வரவு நிதியிடல்** |
|---|---|---|
| உற்பத்திப் பொருட்களின் விற்பனை | கடன்கள்/ வைப்புக்கள் | முதலீடுகளுக்காக கிடைக்கப்பெறும் வட்டி |
| சேவைகளின் விற்பனை | | நிலையான சொத்துக்களின் விற்பனை |
| | | |

| **பணம் வெளிச் செல்லல்** | **பணம் வெளிச் செல்லல்** | **பணம் வெளிச் செல்லல்** |
|---|---|---|
| பொருட்களை கொள்வனவு செய்தல் | கடன் தவணைக் கட்டணங்கள் | நிலையான சொத்துக்களின் கொள்வனவு |
| தொழிலாளர் செலவு | வட்டி | நிலையான வைப்புக்கள் |
| போக்குவரத்து | | ஊக்குவிப்பு/ விளம்பரப்படுத்தல் |
| இயந்திரங்களின் பராமரிப்பு | | |
| வாடகை | | |

iv. பங்கில் மாற்றங்கள்

ஒரு கம்பனியின் பங்கு மூலதனம், திரட்டப்பட்ட இருப்புக்கள் மற்றும் அறிக்கையிடல் காலத்தில் தக்கவைக்கப்பட்ட வருமானம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை அறிக்கை விளக்குகிறது.

வருடாந்த அறிக்கையானது கம்பனியின் செயல்திறனின் கடைசி இறுதி விரிவான அறிக்கையாகக் கருதப்படுகிறது, இது பல்வேறு வணிகப் பிரிவுகளின் விரிவான விவரிப்புக்கள், தரநிலைகள் மற்றும் PUC இன் ஒட்டுமொத்த விருத்திக்கு ஆதரவளிக்கும் மேலே உள்ள அனைத்து அறிக்கைகளையும் உள்ளடக்கிய தரமான தகவலை வழங்குகிறது.

PUC கம்பனிச் செயலாளருடன் ஒருங்கிணைத்து, நிறுவனக் கணக்காய்வு மற்றும் AOA ஆல் வழிகாட்டல்களின் படி கம்ப்ணியின் கணக்காய்வு மற்றும் ஆண்டு அறிக்கை தயாரித்தல் மற்றும் ROC க்கு சமர்ப்பிப்பதற்காக ROC இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட பொருத்தமான கணக்காய்வு கம்பனியொன்றைக் கண்டறிந்து நியமிக்க வேண்டும்.

## 9. PUC இன் மதிப்பீடு/கண்காணிப்புக்கான செயல்திறன் குறிகாட்டிகள்

செயல்திறன் மதிப்பீடுகள் அனைத்து PUC களுக்கும் கட்டாயமானது என்பதுடன் BOD இன் முதன்மைப் பொறுப்பொன்றாகும். BOD முன்னோடியாக இருந்து வழிநடத்தி, எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதோடு இணைக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீட்டு முறை/கண்காணிப்புத் திட்டத்தை நிறுவுவதற்கு உதவும் எளிய மற்றும் தெளிவான வழிமுறைகளை நிறுவ வேண்டும்.

செயல்திறன் மதிப்பீடுகள் செயலுபாயத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது அங்கீகரிக்கப்பட்ட குறிகாட்டிகளை அடையாளம் கண்டிருக்க வேண்டும். வணிகத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி PUC தனது இலக்குகளை அடைய முடியுமா என்பதை உறுதிசெய்ய, பரிகார செயற்பாடுகளை மேற்கொள்வதன் பெறுபேறுகளின் செயல்திறனை BOD அவ்வப்போது மீளாய்வு செய்ய வேண்டும்.

செயல்திறன் கண்காணிப்புக்கான குறிகாட்டியில் நிறுவனம் சார், தொழில்நுட்ப, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி போன்றன உள்ளடங்குவதுடன் அவை கீழே தரப்பட்டுள்ளன.

| நிறுவனம் சார் | தொழில்நுட்பம் சார் | பொருளாதார | சுற்றாடல் மற்றும் சமூக |
|---|---|---|---|
| பங்குதாரர்களின் எண்ணிக்கை | நுண் நீர்பாசனத்தை பின்பற்றும் அங்கத்தவர்களது சதவீதம். | வாழ்க்கை நடைமுறை மேம்படுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | SL-GAP சான்றுப்படுத்தலுக்காக இணைந்துள்ள அங்கத்தவர்களது எண்ணிக்கை |
| மொத்த பங்கு மூலதனம் | நவீன காணி மற்றும் மண் முகாமைத்துவ நுட்பமுறைகளைப் பின்பற்றும் அங்கத்தவர்களின் சதவீதம் | இரு அங்கத்தவர்/ ஒரு அலகுப் பகுதிக்கு அதிகரித்துள்ள வருமானத்தின் சதவீதம் | GMP சான்றிதழைப் பெறுவதற்கான செயன்முறை வசதிகள் |
| பங்கு மூலதனத்தின் ஈவுத்தொகை/ இலாபப் பகிர்வுக்கான பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது. | நடாத்தப்பட்ட தொழில்நுட்ப பரிமாற்ற பயிற்சிகளின் எண்ணிக்கை | மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் காரணமாக உற்பத்திக்கான செலவு குறைவடைந்துள்ள மட்டம் | பிளாஸ்டிக்/ கழிவுகளை சேகரிப்பதற்கான நிலையங்களின் எண்ணிக்கை |
| வைப்புக்கள் | பயிற்சி அமர்வுகளில் பங்கேற்ற சந்தாதாரர்களின் சதவீதம் | மொத்த சந்தைப்படுத்தலின் அளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு | பிளாஸ்டிக்/ கண்ணாடிகள் சேகரிக்கப்பட்டு வருமானம் உருவாக்கப்பட்டுள்ளது, |
| நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை (BoD/GM/AGM) | அறிமுகம் செய்யப்பட்டுள்ள இயந்திரமய பயிர்ச் செய்கை முறைமைகளைப் பின்பாற்றும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | உற்பத்திப் பொருட்களின் தரப்படுத்தல் காரணமாக அதிகரித்துள்ள வருமானம் | சிறந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் பண்ணைகளின் எண்ணிக்கை |
| கூட்டம்/ பயிற்சியில் பங்கேற்பு | உள்ளீடுகளைப் பிரயோகிப்பதற்கான மேம்படுத்தப்பட்ட முறைகளைப் பின்பற்றும் உற்பத்தியாளர்களின் சதவீதம் | PUC மற்றும் தனிப்பட்ட இலாபத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு | ஒவ்வொரு தனி நபருக்கும், குடும்பங்களுக்கும் கோவைகள் பேணப்படுகின்றன. |
| நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வணிக நடவடிக்கைகளின் எண்ணிக்கை | நவீன அறுவடை/ அறுவடைக்குப் பின்னரான முறைகளைப் பின்பற்றும் உற்பத்தியாளர்களின் சதவீதம் | உற்பத்திப் பொருளின் அலகு விலை ஏற்பட்டுள்ள அதிகரிப்பு | |

| | | | |
|---|---|---|---|
| பகிரப்பட்ட சேவை வசதிகளைப் பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள்/ முயற்சியாண்மையாளர்களின் எண்ணிக்கை | உலர்த்தும்/குளிரூட்டி அறை/செயலாக்க வசதிகளின் பயன்பாட்டின் மட்டம் | பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு நிறுவப்பட்ட சந்தை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை. | |
| நிறுவப்பட்டுள்ள வணிக பங்குடைமைகளின் எண்ணிக்கை | | தேசிய உற்பத்தி/ வருமானத்திற்கான அதிகரிக்கப்பட்ட பங்களிப்பு | |
| ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சந்தைப்படுத்தலில் பங்கேற்ற உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை | | கடன் அனுகளுக்காக வங்கிகளுடன் தொடர்புபட்டுள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை | |
| நிறுவப்பட்டுள்ள நிறுவன வலையமைப்புக்களின் எண்ணிக்கை | | | |
| உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் நிறுவப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது | | | |
| வருமான உருவாக்கத்திற்காக அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்பட்ட உப | | | |
| பொருட்கள்/ சேவைகளின் எண்ணிக்கை | | | |
| இயந்திரங்கள் & உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்புக்கள் கைவசம் உள்ளன / வாடகைக்கு பெற்றுக்கொள்வதன் மூலம் பயன்படுத்தப்படகின்றது. | | | |
| பணியாளர்கள்/ ஊழியர்களின் எண்ணிக்கை | | | |
| மொத்த சம்பளங்கள் | | | |

***விவரிக்கப்பட்ட கண்காணிப்புத் திட்டத்திற்கான வரைவாக்க சட்டகம் இணைப்பு 20 இல் தரப்பட்டுள்ளது.***

| **அபிவிருத்தித் துறை** | **செயற்பாடு** | **இலக்கு** | **செயலாற்றுகை குறிகாட்டி** | **நிறைவுத் திகதி** | **பொறுப்பு** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| | பங்குதாரர்கள் ஒருங்கிணைந்த சேவைகளில் இணைகின்றனர் | மொத்த பங்குதாரர்கள் | வருடாந்த/ பருவகால பயிர்ச் செய்கை திட்டம் நிறுவப்பட்டுள்ளது<br><br>பொது அங்கத்துவம் சரிபார்க்கப்பட்டுள்ளது<br><br>ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்தி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது<br><br>இணைந்த பங்குதாரர்களின் எண்ணிக்கை | வருடாந்த/ பருவகால | தலைவர்/ பணிப்பாளர் சபை (BOD) /EC மற்றும் முகாமையாளர் | முன்மொழியப்பட்ட சந்தை இணைப்புகளுடன் வருடாந்த/ பருவகால பயிர்களுக்கான உற்பத்தித் திட்டத்தை PUC நிறுவ வேண்டும். |
| | நிறுவன வலையமைப்பு | பிராந்தியத்தில் / பிராந்தியத்திற்கு வெளியில் உள்ள தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்பு இணைப்பை ஏற்படுத்தவும் | உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை<br><br>பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை<br><br>வழமையான சபைக் கூட்டங்களுக்கு பிரேரிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை<br><br>பிரேரிக்கப்பட்ட பிரதிநிதிகள் | வருடாந்த | தலைவர்/ பணிப்பாளர் சபை (BOD) /EC மற்றும் முகாமையாளர் | DPD/DC/CC/PUC, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை (BOD) ஆகியோரால் ஆரம்ப தொடர்புகள் ஊக்குவிக்கப் படவேண்டும்.<br><br>முக்கியமான நிறுவனங்கள் – DOA, NEDA, EDB, SEDD, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், IDB, |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை | | | |
| | PUC இற்கான அபிவிருத்தி நிர்வாகம், நிதி மற்றும் நிர்வாக முறைமை | செயற்பாடுகள்/ நடைமுறைகள்/ தொழிற்பாட்டு முறைமைகளை அமைத்தல் | நிர்வாகம், நிதி, நல்லாட்சி ஆகியவற்றிற்கான கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 2024 ஜூலை இறுதியில் | PUC, PMU, PPMU, IDS ஆலோசகர், BDC. | EC க்கான பயிற்சி BDC மற்றும் கம்பனி செயலகத்தில் நடைபெற்றதுடன் தொடர்ந்தும் இடம்பெறும். |
| | ஊழியர்கள் | முகாமையாளர் கணக்காளர் நிர்வாக உத்தியோகத்தர் சாரதி/ அலுவலக உதவியாளர் | பணியாளர்/ ஊழியர்களின் எண்ணிக்கை | 2024- 2025 | தலைவர்/ BOD/ EC, BDC | செயற்பாடுகளை பணிப்பாளர் சபை (BOD) நடைமுறைப் படுத்தும் |

| அபிவிருத்தித் துறை | செயற்பாடு | இலக்கு | செயலாற்றுகை குறிகாட்டி | நிறைவுத் திகதி | பொறுப்பு | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| தொழில்நுட்ப | கொத்தணிக்கு இணங்கிய பயிர் உற்பத்தி திட்டத்தினை நடைமுறைப் படுத்துதல் | அனைத்து அங்கத்துவ விவசாயிகள் | பின்பற்றும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பருவகால/ வருடாந்த | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | பருவகால/வருடாந்த பயிர் உற்பத்தி திட்டமிடல் பொது அங்கத்தவர்களுடன் வடிவமைக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது |
| | காணி மற்றும் மண் முகாமைத்துவத்திற்கான சிறந்த நடைமுறைகள் | தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு நிலத்தின் அளவு அடையாளம் காணப்பட்டது | நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள அளவு | பயிரிட முன்னர் அதற்கான திகதி PUC இன் பருவ கால/ வருடாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA இலிருந்து ஆலோசனை உதவிகள் |
| | பயிர் முகாமைத்துவம் | அனைத்து அங்கத்தவர்கள் | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர்களின் எண்ணிக்கை<br><br>IPM நடைமுறைகள் பின்பற்றப்படும் ஏக்கர்களின் எண்ணிக்கை<br><br>ஒருங்கிணைக்கப்பட்ட போஷாக்கு முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றப்படும் ஏக்கர்களின் எண்ணிக்கை (INMP) | பயிர்ச் செய்கைத் திட்டத்தின் படி | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் , தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் | விலைமனுக் கோரல் நடைமுறையைப் பின்பற்றி வழங்குநர் அல்லது சேவை வழங்குநர் தெரிவு செய்யப்படுகின்றார் |
| | தொழில்நுட்ப பயிற்சி | அனைத்து அங்கத்தவர்கள் | நிலத்தை தயார்படுத்தல் முதல் அறுவடை வரை அனைத்து செயற்பாடுகளும் உள்ளடங்கிய பயிற்சி அமர்வுகள்<br><br>பயிற்சி அமர்வுகளின் பங்கேற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பயிர் உற்பத்தி திட்டம் மூலம் தீர்மானிக்கப்படுகிறது | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், DOA, NEDA, | தொழில்நுட்ப நிபுணர்களை அணுகுவதற்கு BOD/முகாமையாளரால் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தொடர்புடைய நிறுவனங்கள். |
| | இயந்திரமயப் படுத்தப்பட்ட விவசாய நடைமுறைகள் | அனைத்து அங்கத்தவர்கள் | நிலத்தை தயார்படுத்துவதற்கும் களை அகற்றுவதற்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் ஏக்கர்களின் எண்ணிக்கை<br><br>நுண் நீர்பாசன முறை பயன்படுத்தப்படும் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர்களின் எண்ணிக்கை<br><br>சூரிய வலுப் பம்பிகள் பயன்படுத்தப்படும் ஏக்கர்களின் எண்ணிக்கை | | | |
| | உரிய நேரத்தில் அறுவடை | அனைத்து அங்கத்தவர்கள் | PUC இல் அறுவடைத் திட்டம் காணப்படல்<br><br>இடைவேளைகளின் எண்ணிக்கை மற்றும் அறுவடையின் அளவு<br><br>ஒருங்கிணைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் செயலாக்கம் மற்றும் சந்தைப்படுத்துதல் வழங்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | | | |
| | ஒருங்கிணைக்கப்பட்ட அறுவடைக்குப் பின்னரான வசதிகளின் பயன்பாடு | அறுவடைக்குப் பின்னரான தொழிற்பாடு மற்றும் சந்தைப்படுத்தல். | PUC இற்கு வழங்கப்பட்ட உற்பத்தியின் அளவு தரங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தரத்தின் தொகுதிகள் செயலாக்கத்திற்கான அளவு, பொதியாக்க வகைகள் | | | |
| | | | | | | |

| **அபிவிருத்தித் துறை** | **செயற்பாடு** | **இலக்கு** | **செயலாற்றுகை குறிகாட்டி** | **நிறைவுத் திகதி** | **பொறுப்பு** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| பொருளாதார | உற்பத்திக்கான செலவு | உற்பத்திக்கான செலவைக் குறைத்தல். | ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளீட்டு வழங்களுடன் இணைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை<br><br>பகிரப்பட்ட சேவைகள்- இயந்திரங்களைப் பெறும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை செலவு குறைப்பு %/அலகு | பயிர் பருவ கால இறுதியில் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியம் |
| | அங்கத்தவர் வருமானம் | பண்ணை வருமானத்தை அதிகரித்தல். | அறுவடை - கிலோ/ஏசி. பல்வேறு வகையான உற்பத்திகள் மற்றும் விலைகள் வருமானம் ரூ/ஏக்கர்<br>அதிகரித்த வருமானம் லாபப் பகிர்வு மற்றும் ஈவுத்தொகை % | பயிர் பருவ கால இறுதியில் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA/ EDB மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியம் |
| | அதிகரிக்கப்பட்ட உற்பத்தியின் அளவு. | ஒருங்கிணைக்கப் பட்ட சந்தைப்படுத்தல்.<br><br>சந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.<br><br>போட்டித் தன்மையுடன் கூடிய பண்ணை வாயில் விலை | பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட வாங்குநர்களின் எண்ணிக்கை<br><br>பெறுமதி சேர்த்தலுக்கான வாய்ப்புக்கள்<br><br>பணிப்பாளர் சபைக்கு (BOD) சமர்ப்பிக்கப்பட்ட சந்தை நிலைமை அறிக்கை | அறுவடைக்கு முன்னர் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA/ IDB/ITI மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முறையான கடனுக்கான அனுகல் | முறையான கடன் வசதிகளுக்கான அனுகலுடன் தொடர்புபட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை | PUC முறையான வங்கி அமைப்பு மூலம் மொத்த கடன் வசதியை செயற்படுத்துகின்றது | அறுவடைக்கு முன்னர் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியம் |
| | வாழ்க்கை நடைமுறையில் நேர்மறையான மாற்றம் | வீடுகளின் எண்ணிக்கை | பண்ணைப் பயன்பாட்டிற்காக இயந்திரங்களை கொள்வனவு செய்தல். தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வாகனம் கொள்வனவு செய்தல் வீட்டுப் பாவணைப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் இணையம்/ ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளுக்கான அனுகல் | நிதியாண்டு நிறைவில் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | முகாமையாளர் /PUC இனால் அறிக்கை தயாரிக்கப்படும். |

| **அபிவிருத்தித் துறை** | **செயற்பாடு** | **இலக்கு** | **செயலாற்றுகை குறிகாட்டி** | **நிறைவுத் திகதி** | **பொறுப்பு** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| சுற்றாடல் மற்றும் சமூக | தர உறுதிப்பாடு | அங்கத்துவ விவசாயிகள்<br><br>செயன்முறையாக்க நிலையம் | பெறப்பட்டுள்ள GAP சான்றுப்படுத்தல்களின் எண்ணிக்கை<br><br>GMP பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது | பயிர்ச் செய்கைக் கால நிறைவில்<br><br>வருடாந்த | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியமாகின்றன |
| | கழிவகற்றல் | அங்கத்துவ விவசாயிகள்<br><br>வீடுகள் | பண்ணைக் கழிவகற்றல் முறைமை நிறுவப்பட்டுள்ளது<br><br>வீட்டுக் கழிவகற்றல் முறைமை நிறுவப்பட்டுள்ளது<br><br>சேதனப் பசளையாக்க அலகு தாபிக்கப்பட்டுள்ளது | 1வது பயிரிடல் பருவ கால நிறைவில்<br><br>முதலாம் வருட நிறைவில்<br><br>முதலாம் வருட நிறைவில் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA/ EDB/மாகாண நிறுவனங்கள். மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியமாகின்றன |
| | சமூக நலன்புரி | பங்குதாரர் குடும்பங்கள் | வீட்டுக் கைத்தொழில்களின் / சுய தொழில்களின் எண்ணிக்கை<br><br>கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை<br><br>சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | அறுவடைக்கு முன்னர் | பணிப்பாளர் சபை (BOD), முகாமையாளர், பொது அங்கத்தவர்கள் | DOA/NEDA/ IDB/ITI மூலமாக ஆலோசனை உதவிகள் அவசியமாகின்றன |
| | | | | | | |

## இணைப்பு 1 கொத்தணித் தகவல்கள்

| கொத்தணி அடிப்படையில் PUC களின் பயிர் கொத்தணிகள் | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | பயிர் | PUC இன் பதிவு செய்யப்பட்டுள்ள பெயர் | நிலை / BR. இலக்கம். | அலுவலக தளபாடங்கள் வழங்கப் பட்டுள்ளன |
| பதுளை | 1-மிளாகாய் | Rideegira Agro Products Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00291196 | Y |
| | 2- கிழங்கு விதை | Reap Agro Solutions Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00292690 | Y |
| | 3-மரக்கறிகள் | Golden Valley Agro Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00300201 | Y |
| | 4- இருமுக சோளக விதை | --withdrawn | -- | N |
| | 5-Hass ஆனைக் கொய்யா | Ceylon Super Farmers Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00291735 | Y |
| அம்பாறை | 6-மிளகாய்-Ekgaloya | Ekgaloya Pioneer Agro Products Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00293162 | Y |
| | 7- கோமாரி மிளகாய் | Sangaman Agro Products Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00294945 | Y |
| | 8- இருமுக சோளக விதை | Digawewa Agro Ltd | BR PB 00307835 | Y |
| | 9-Soursop (முள்ளு சீதா) (Pilot) P/தலாவ | Digamdulla Agribusiness Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00273299 | Y |
| | 10-Soursop (Scaleup) உஹன | Lake front Agro products Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00292792 | Y |
| | 11- பெரிய நிலக்கடலை (Pilot + Scaleup) | Pasumthalir Agro Products Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00273279 | |
| கண்டி | 12-மிளகாய் (Pilot +Scaleup) | Gangasiri Agro Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00272483 | Y |
| | 13-Hass ஆனைக் கொய்யா | Great City Agro Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00294534 | Y |
| | 14- மரக்கறி விதைகள் | Greeny Growers Kandy Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00289165 | Y |
| | 15- புளி வாழைப்பழம் | King Mahasen Agro Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00298021 | Y |
| கிளிநொச்சி | 16- பெரிய நிலக்கடலை | 2KAgro Products Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00288668 | Y |
| | 17-மிளகாய் | Thayakam Agro Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00289382 | Y |
| | 18- மாதுளை | Red Angle Agro Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00296720 | Y |
| | 19- கொடித் தோடை | Mak Agro Products Ltd | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00290158 | Y |
| வவுனியா | 20-மிளகாய் | Living Agro Producers Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00290255 | Y |
| | 21- இருமுக சோளக விதைகள் | Ensured Seed Economic Devt. Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00287314 | Y |
| | 22- TEJC மாம்பழம் | Shakthi Agro producers Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது P B 00289201 | Y |
| | 23- Tainung பப்பாளி (Pilot + Scaleup) | Pasumai Agro Products Ltd. | BR நிறைவு செய்யப்பட்டுள்ளது PB 00270581 | Y |
| | | | | |

**இணைப்பு 2** **PUC இனால் பராமரிக்கப்படவேண்டிய புத்தகங்கள்/ பதிவுகளின் பட்டியல்**

| | |
|---|---|
| 01 | **PUC கூட்டிணைப்புக் கோவை –**அனைத்து ஆவணங்களதும் கையொப்பமிடப்பட்ட பிரதிகள் கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் மற்றும் வியாபாரப் பதிவு (BR) |
| 02 | **கம்பனி தோற்ற வடிவம் மற்றும் PUC** கடிதத் தலைப்பு மற்றும் கம்பனி முத்திரை (அமைப்பு இணைப்பு 17 இல்) |
| 03 | **விருந்தினர் பதிவேடு** |
| 04 | **சகல பயனாளிகளதும் விவரிக்கப்பட்ட பட்டியல் –**தனிப்பட்ட தகவல்களுடன், குடும்பம், பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு, வீட்டுத் தோட்டம், உரித்துரிமை (அமைப்பு இணைப்பு 12 இல் தரப்பட்டுள்ளது) |
| 05 | **பங்கு மூதலதன பதிவேடு** - பங்களிப்புச் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை, பங்கின் அலகு விலை மற்றும் ஒவ்வொரு பயனாளிகளுக்குமான பெறுமதி. |
| 06 | **பங்குச் சான்றிதழ்- ஒவ்வொரு பங்குதாரருக்கும் தனிப்பட்ட கோவைகள் –** பங்கு விண்ணப்பப் படிவத்தின் பிரதிகள், பங்குச் சான்றிதழ், பங்குச் சான்றிதழ், ASMP/PUC/ஏனையவர்கள் வழங்கிய உள்ளீடுகளுடன் அங்கத்தவர் உடன்படிக்கை ( முறையான விண்ணப்பப் படிவம் இணைப்பு 10 இல்) |
| 07 | **சொத்துக்கள் பதிவேடு- பொருளின் பெயர், விவரம்,** PUC இன் கீழுள்ள அனைத்து சொத்துக்களதும் **அடையாள இலக்கம், மாதிரி/ தொடர் இல/ வகை/ பெறுமதி விபரங்கள்** - ASMP மற்றும் ஏனையவற்றிலிருந்து விநியோகிக்கப்பட்டது- பகிரப்பட்ட சேவைகளுக்காக வழங்கப்பட்ட சொத்துக்களும் உள்ளடங்களாக (அமைப்பு இணைப்பு 11 இல் தரப்பட்டுள்ளது) |
| 08 | **வங்கிப் புத்தகம் –** காசோலை புத்தகம் – அன்றாட கொடுக்கல் வாங்கல், மாதாந்த கடன்/ வைப்பு மீதி |
| 09 | **தொடர்புக் கோவை –**நிறுவன அடிப்படையில், பாட அடிப்படையில் |
| 10 | **கடிதம் உள்வரவு/ வெளிச் செல்லல் பதிவேடு** கிடைக்கப்பெற்ற அனைத்து கடிதங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு/ விடயத் துறை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனுப்பப் பட்ட கடிதங்கள் |
| 11 | **கூட்டக் குறிப்புப் புத்தகம் –** பணிப்பாளர் சபை |
| 12 | **கூட்டக் குறிப்புப் புத்தகம் –** வருடாந்த பொதுக் கூட்டம் (GM) - |
| 13 | **கூட்டக் குறிப்புப் புத்தகம் –**விசேட பொதுக் கூட்டம் (GM) |
| 14 | **கூட்டக் குறிப்புப் புத்தகம் –** ஏனையவை |
| 15 | **வரவுப் பதிவேடு மற்றும் லீவுப் பதிவேடு** – பணியாளர் |
| 16 | **இன்வொயிஸ் புத்தகம்** (இணைப்பு 14) |
| 17 | **வவுச்சர் புத்தகம்** (இணைப்பு 15) |
| 18 | **காசேடு** |
| 19 | **பற்றுச் சீட்டுப் புத்தகம்/ ரசீதுப் புத்தகம்** (இணைப்பு 13) |
| 20 | கொள்வனவு/ விற்பனை/ இருப்பு **பதிவேடு** |
| 21 | **பதிவேடு –**விற்பனை/ வருமானம்/ நிதிசார் நடவடிக்கைகள் |
| 22 | **செலவுப் பதிவேடு** – காகிதாதிகள், பயன்பாடு, பராமரிப்பு |
| 23 | **வைப்புப் பதிவேடு** |
| 24 | **லெஜர் புத்தகம்** |
| 25 | பணிப்பாளர் சபை (BOD) இல் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த நிதிக் கூற்றிற்கான கோவை |
| 26 | PUC இன் இருப்புக் கோவை– வருடாந்த |
| 27 | வருமான மற்றும் இழப்புக் கணக்குக் கோவை – மாதாந்த மற்றும் வருடாந்த |
| 28 | வங்கிக் கூற்றுக்கள்/ கொடுக்கல்வாங்கல் ஆவணங்களுக்கான கோவை |
| 29 | முன்னேற்ற அறிக்கைகளுக்கான கோவை–உற்பத்தி. பெறுமதி சேர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். |
| 30 | செயற்பாட்டுத் திட்டம், முதலீட்டுத் திட்டம், நடைமுறைப்படுத்தல் திட்டத்திற்கான கோவை |
| 31 | வருடாந்த பயிர்களுக்கான பருவகால பயிர்ச் செய்கை திட்டம் –தனிப்பட்ட நபர்களின் பெயர்களுடன் ஒவ்வொரு பயிர்களும் பயிரிடப்பட்டிருக்கும் பரப்பினை XL தாளில் பேணுதல். |
| 33 | எதிர்பார்க்கப்படும் பயிரிடல் மற்றும் அறுவடை திகதிகளுக்கான XL தாள் தனித்தனியாக செருகப்பட்டு மொத்தமாக திரட்டப்பட்டது |
| 34 | மாதாந்த இற்றைப்படுத்தலுடன் கூடிய மொத்த உற்பத்தி எதிர்வுகூறலுக்கான XL தாள் |
| 35 | அடையாளம் காணப்பட்ட சந்தை அனுகலுக்கான கோவை – ஒவ்வொரு அடையாளம் காணப்பட்ட சந்தை நிறுவனத்திற்கும் பிரத்தியேகமான கோவைகள் |
| 36 | வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பதிவேடு |
| 37 | இயந்திரங்கள் வாடகை பயனாளிகளின் கோரிக்கை மற்றும் பதிவு புத்தகம் |

| | |
|---|---|
| 38 | இயந்திரப் பராமரிப்பு புத்தகம் |
| 39 | சம்பவத் திரட்டுப் (லொக்) புத்தகம் |
| 40 | பணிப்பாளர் மற்றும் செயலாளர் பதிவிற்கான புத்தகம் (தொடர்பு விபரங்கள், நியமன திகதி மற்றும் லீவுத் திகதி) |
| 41 | பணிப்பாளர் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அவற்றின் பிரதிகளின் கோவை |
| 42 | பணிப்பாளர்களால் வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்களுக்கான கோவை |
| 43 | வருடாந்த அறிக்கைகளில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

மேலே உள்ள புத்தகங்கள், பதிவுகள், தகவல்கள், தரவு மற்றும் கோவைகள் ஆகியவற்றின் பட்டியல் தலைவரின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட வேண்டும். அத்துடன் வெளிப்படையான, துல்லியமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சபை பணிப்பாளர்களுக்கு வழக்கமான அடிப்படையில் அறிக்கையிடுவதற்கு அலுவலக முகாமையாளர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**இணைப்பு 3 – பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவப் பணியாளர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள பயிற்சித் தெரிவுகள்**

**சபை உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான இயலளவு விருத்திப் பயிற்சிக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள துறைகள்**

**a) நல்லாட்சி:**

- வெளிப்படைத் தன்மை
- ஜனநாயகம்
- கட்டுப்பாடுகள்

**b) நிலைபேறுடன் கூடிய தன்மை:**

- தொழிற்பாடுசார் நிலைபேறுடன் கூடிய தன்மை
- நிதிசார் நிலைபேறுடன் கூடிய தன்மை
- நிலைபேறுடன் கூடிய நிலையை அடைதல்.

**c) ஒருங்கிணைப்பு மற்றும் பங்குடைமை**

- அரச அனுசரனையுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டங்கள்
- பெரு நிறுவனங்கள்
- விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள்
- சந்தைகளுடன்
- ஏனைய அரச மற்றும் தேசிய மட்ட FPOகள் மற்றும் அவற்றின் சிறந்த நடைமுறைகள்

**d) சமூக மூலதனம்:**

- பெறுகை, பெறுமதி சங்கிலி மற்றும் சந்தையில் விவசாயிகளின் ஒற்றுமை
- கொள்கை பரப்புவதில் ஒற்றுமை
- வணிக உள்வரவு மற்றும் வெளிச் செல்லலின் கூட்டு

**e) சட்டங்களுடனான பொருத்தப்பாடு:**

- கணக்காய்வு மற்றும் வருமானங்களை நிரப்புதல்.
- அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அவற்றைப் புதுப்பித்தல்
- நியமங்கள் மற்றும் கம்பனி முகாமைத்துவத்தை வெளிப்படுத்துதல்.
- வரி தொடர்பான பொருத்தப்பாடுகள்
- கம்பனி சார் திருத்தங்கள் மற்றும் அவற்றின் பொருத்தப்பாடுகள்

**f) வியாபார திட்டமிடல்:**

- செலவுக் குறைப்பு
- இலாபம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.
- விவரிக்கப்பட்ட செயற்றிட்ட அறிக்கை ஒன்றின் சிறப்பான கூறுகள்
- வியாபார இடர் பகுப்பாய்வு
- இருப்பு நிலைப் பகுப்பாய்வு
- எளிய நிதி விகிதங்கள்
- கடன் வழங்குவதற்காக வங்கி பகுப்பாய்வு செய்யும் எளிய குறிகாட்டிகள்

**g) நிதி முகாமைத்துவம்:**

- ஏடுகளைப் பராமரித்தல் – சட்டப் பொருத்தப்பாடு
- முகாமைத்துவ தகவல் முறைமை
- பங்கு மூலதனம் மற்றும் சம பங்கு
- கடன் பெறல்
- சேமிப்பு
- கடன்கள்
- பணப் போக்கு மற்றும் நிதிப் போக்கு
- கிடைப்பனவுகள் மற்றும் அவற்றின் முகாமைத்துவம்
- செலுத்த வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முகாமைத்துவம்
- முதலீடுகள்

**இணைப்பு 4**

**உத்தேச ஆட்சேர்ப்பு நடைமுறைகள்**

ஐரோப்பிய ஒன்றிய (EU) மாவட்டங்களில் PUCக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் ஒரு சீரான தன்மையை பராமரிக்க பின்வரும் செயல்முறை முன்மொழியப்பட்டுள்ளது.

- ஒரு குறிப்பிட்ட ஊழியரின் சேவையின் தேவை, அவருக்கு வழங்கப்படவேண்டிய பதவி, உத்தேச பணி விபரங்கள், ஆட்சேர்ப்பு முறை என்பன தொடர்பில் நிறைவேற்றுக் குழு தீர்மானிக்கும் (அமைய/நிரந்தர மற்றும் சம்பள அளவுத் திட்டம்). (PPMU/ PMU/ஆலோசகர்களின் ஒருங்கிணைப்புடன் PUC திரட்டுபவரால் வழிகாட்டப்படல் வேண்டும்.)
- சபைத் தீர்மானங்கள்/ முடிவுகளைப் பெற்றுக் கொள்ளல் (பணிப்பாளர் சபை மற்றும் PUC திரட்டுபவருடன் இணைந்து கம்பனி செயலாளர் இதற்கு வழிகாட்டல்களை வழங்குவார் )
- DPD/PPMU இற்கு எழுத்து மூலமாக அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- DC.CC & PUC திரட்டுபவர் உட்படலாக அனைவருக்கும் தொடர்புகளை பிரதியிடல்.
- விளம்பரத்தை தயார்படுத்தல் (PPMU/PUC திரட்டுபவர் மற்றும் ஆலோசகரது ஆலோசனைகளுடன்)
- விளம்பரத்தில் பதவி, தகைமைகள், அனுபவம், வயதெல்லை, எதிர்பார்க்கப்படும் பணிகள், சம்பளம்/ சலுகைகள், சுய விபரங்காள், உதவி ஆவணங்கள் விண்ணப்ப இறுதித் திகதி, கம்பனியின் பெயர் மற்றும் முகவரி என்பன தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
- பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்வதாற்கு போதுமான எண்ணிக்கையான நாட்களை வழங்குதல் (பிரசுரித்த நாள் முதல் 14 நட்கள்)
- ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் ஒவ்வொரு கோவைகளை உருவாக்குதல்
- கிடைக்கப்பெற்ற அனைத்து விண்ணப்பப் படிவங்களது தகவல்களை உள்ளடக்கி ஒரு சாராம்ச அறிக்கையை தயாரித்தல்.
- நேர்முகப் பரீட்சை சபையைத் தீர்மானித்தல் —DPD/PPMU, DC, CC, PUC திரட்டுபவர், மற்றும் PUC BOD/நிறைவேற்றுக் குழுவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் பொருத்தமாக இருப்பார்கள்.
- புள்ளி வழங்கல் திட்டத்தை தயாரித்தல் – நேர்முகப் பரீட்சை ஆர்மபிக்க முன்னர் அதற்கான இணக்கப்பாட்டினை நேர்முகப் பரீட்சை சபையினரிடம் பெற்றுக் கொள்ளல்.

- நேர்முகப் பரீட்சைக்கான திகதியைத் தீர்மானித்தல்.
- நேர்முகப் பரீட்சையை நடாத்த முன்னர் - பதவியினூடாக எதிர்பார்க்கப்படும் பணிகள், எதிர்பார்கப்படும் அனுபவம், உத்தேச சம்பள வரையறைகள் தொடர்பில் நேர்முகப் பரீட்சை சபையினருக்கு பணிப்பாளர் சபையின் BOD தலைவரால் விபரங்கள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.
- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு PUC இன் கடிதத் தலைப்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்தல், அவர் ஏற்றுக் கொள்கின்றாரா என்பது தொடர்பில் இணக்கப்பாட்டினைப் பெறல் மற்றும் அவர் சேவைக்கு அறிக்கையிடவேண்டிய திகதி தொடர்பிலும் அறியப்படுத்துதல், (DPD-PPMU, DC, CC, PUC திரட்டுபவர் ஆகியோருக்கு இக் கடிதத்தின் பிரதி அனுப்பப் படல் வேண்டும்.,).
- பணி விபரங்கள் உள்ளடங்கிய உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அது PUC இன் தலைவர் மற்றும் பணியாளருக்கிடையே கைச்சாத்திடப்படல் வேண்டும். அது DPD/PPMU ஆகியோருக்கு பிரதியிடப்படல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு செய்த பின்னர் நிறுவப்பட்ட செயல்திட்டத்தின் மூலம் பணியாளரின் செயல்திறனைக் கண்காணிப்பது PUC இன் பொறுப்பாகும். இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளுடன் கூடிய கண்காணிப்பு திட்டத்துடன் PUC தயாராக இருக்க வேண்டும்

PUC ஆனது நல்ல செயல்திறனுடன் பணியாளர் நீண்ட காலம் தங்கியிருப்பதை உறுதி செய்வதற்காக, ஆட்சேர்ப்பின் போது அவர்கள் நிறுவனத்துடன் குறைந்தபட்சம் 6 மாதங்கள் பணியாற்றுவதற்கும், PUC பங்குதாரர்களின் திருப்திக்கும் உத்தரவாதமாக ஒரு மாத சம்பளத்தை வைப்புச் செய்ய வேண்டும்.

ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் அவருக்குரிய EPF/ETF என்பன PUC இனால் தேவைக்கேற்ப செலுத்தப்படல் வேண்டும்.

## இணைப்பு 5 - PUC இன் முகாமையாளர்/ கணக்காளருக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பணி விபரங்கள்

PUC இன் தலைவர்/ பணிப்பாளர் சபைக்கு (BOD) அறிக்கையிடல்

PPMU, PMU மற்றும் உள்ளூர் நிறுவன வலையமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணல்.

PUC திரட்டுபவர்/கொத்தணி ஒருங்கிணைப்பாளருடன் கலந்தாலோசித்து, ASMP ஆல் செயல்படுத்தப்படும் தெரிவு செய்யப்பட்ட பெறுமதிச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டத்ம் தொடர்பில் ஆராய்ந்து பழக்கப்படுத்திக் கொள்ளல்.

PUC இன் அனைத்து அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய வலையமைப்புத் தளமாக கையடக்கத் தொலைபேசி செயலி ஒன்றை நிறுவுதல்.

கம்பனியின் செயற்பாட்டு, நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பதிவேடுகள், கோவைகள், அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் நாளாந்த பரிவர்த்தனைகள்/கருத்துகள்/ஆகியவற்றை தயாரித்து நிறுவுவதற்கான நடவடிக்கைகளைத் ஆரம்பித்தல். ( பட்டியல் வழங்கப்படும்/ **இதற்கான கையேட்டிற்கு இணைப்பு 02 ஐ பார்க்கவும்)**

ASMP இனால் வழங்கப்பட்ட டிஜிட்டல் கணக்கீட்டுத் தொகுதிகளை பயன்படுத்தி முகாமை செய்தல்.

வழமையான சபைக் கூட்டங்கள் மற்றும் வருடாந்தக் கூட்டங்களை PUC பணிப்பாளர் சபை (BOD) மற்றும் கம்பனி செயலாளரது ஒருங்கிணைப்புடன் திட்டமிட்டு நடாத்துதல்.

தேவைக்கேற்ப கூட்டக் குறிப்புக்கள், பதிவுகள், பின் தொடரல்களை தயாரித்தல்.

பெறுமதிச் சங்கிலி மற்றும் மாற்றீட்டு பெறுமதிச் சங்கிலிகளுடன் வணிக வாய்ப்புக்களை அடையாளம் காணல்.

பகிரப்பட்ட சேவைகளை வெளிக்களப்படுத்துவதற்கான வணிக வாய்ப்புக்களை அடையாளம் காணல்.

உள்ளீடு வெளியீட்டு சந்தைப்படுத்தலின் சிறப்பு முக்கியத்துவத்துடன் கூடிய வணிக நடவடிக்கைகள் செயல்படுத்த ஒரு ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை தயாரித்தல்.

தனிப்பயனாக்கப்பட்ட வணிகத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன் BOD/பொது அங்கத்தவர்களால் நிறுவப்பட்டு சரிபார்க்கப்படுவதை உறுதிசெய்தல்.

PUC வணிகத் தொழிற்பாடுகளுக்கான கண்காணிப்புத் திட்டத்தை தயாரித்து நிறுவுதல்.

அலுவலகத்தின் தூய்மையைப் பராமரித்தல் மற்றும் அலுவலகத்தில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், பகிரப்பட்ட சேவை வசதி மற்றும் செயலாக்க மையம் ஆகியவற்றை சரியான நேரத்தில் சேவை செய்தல்,

பௌதீக அடைவுகள், நிதிக்கூற்று, நிர்வாகத்தின் நிலை ஆகியவற்றுடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை BOD கூட்டங்களில் சமர்ப்பித்தல்.

ஏனைய PUC சார்ந்த விடயங்கள் மற்றும் வணிக செயற்பாடுகளை பின் தொடரல்.

தலைவர்/BOD உடன் ஒருங்கிணைந்து அங்கத்தவர்களது கோரிக்கைகள், குறைகள் போன்றவற்றைப் பின் தொடரல்.

PUC மற்றும் நிறுவன வலையமைப்புக்களிடையே தொடர்புகளை முகாமை செய்தல். (தனியார்/ அரச/NGO)

கூட்டங்கள் மற்றும் சந்தை பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளல் மற்றும் தலைவர்/BOD உடன் கலந்தாலோசித்து பின்தொடர்தல் நடவடிக்கைகளை செயல்படுத்துதல்

தலைவர் அல்லது BOD இனால் பணிக்கப்படும் ஏனைய செயற்பாடுகள்.

## இணைப்பு 6 PUC களுக்கு சிறந்தவை என பரிசீலித்து தெரிவு செய்யக்கூடிய வணிக வாய்ப்புக்களின் பட்டியல்

விதை உற்பத்தி
விதை சந்தைப்படுத்தல்
ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளீட்டு வழங்கல்
அடித்தளம் மற்றும் சான்றளிக்கப்பட்ட பெயரிடப்பட்ட விதை நிறுவனம்
நாற்று மேடைகள்
சேதன களஞ்சியம்
களஞ்சியப்படுத்தல் சேவைகள்

நுண் நீர்ப்பாசன உபகரணங்களுக்கான சில்லறை வியாபார நிறுவனம்
விவசாய இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்கள் விற்பனைத் தளம்
பண்ணை இயந்திரங்காள் மற்றும் உபகரணங்களின் திருத்தியமைப்பு சேவைகள்
பண்ணை இயந்திரங்காள்/ செயன்முறையாக்க வசதிகளை வாடகைக்கு வழங்கும் சேவைகள்
சூரிய வலு பயன்பாடு
நுண் போசனை சேதன விளைவுகள்
சேதனப் பசளைப் பூங்கா
தீவனம் (சிலேஜ்) உற்பத்தி
பொதியாக்க பொருட்களின் வழங்கள்
மண் சீராக்கிகளின் வழங்கள்
தழைக்கூழப் பொருட்கள்
புகையூட்டல் மற்றும் கருத்தடை சேவைகள்
வீட்டுத் தேவைக்கான பொருட்களின் வழங்கல்
பண்ணை உற்பத்திகளின் ஒருங்கிணைப்பு மற்றும் சந்தைப்படுத்தல்.
விவசாய கைத்தொழில் துறைகள் – பெறுமதி சேர்ப்பு – உலர்த்துதல்./கூழ்/ உறைந்த பொருட்கள்.

## இணைப்பு 7 வாடகைக்கு வழங்கும் வாய்ப்புக்கள், PUC இன் பகிரப்பட்ட வதிகள்

தனிப்பயனாக்கம் செய்து வாடகைக்கு பெறல் என்பது PUCக்கு சொந்தமான அல்லது வாடகை உபகரணங்கள், உள்கட்டமைப்பு அல்லது இயந்திரங்களை வாடகைக்குப் பெறல் மற்றும் தொழிலாளர் செலவுகள், பிற உற்பத்தி செலவுகள், செயலாக்கம், பெறுமதி சேர்த்தல் மற்றும் கூட்டு சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் நன்மைக்காக அங்கத்தவர்களால் மீண்டும் வாடகைக்கு எடுப்பதைக் குறிக்கின்றது. உ+ம்: PUC க்கு சொந்தமான டிராக்டரில் பொருத்தப்பட்ட நிலம் தயாரிக்கும் கருவிகள் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு மணித்தியால அடிப்படையில் வாடகைக்கு எடுப்பது போன்ற முறையாகும்.

PUCக்கு சொந்தமான பகிர்ந்த வசதிகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட தனிப்பயன் பணியமர்த்தல் வாய்ப்புகள் சில கீழ்வருமாறு

தெளிப்பான்கள்

அறுவடையாளர்கள்

களஞ்சிய இடவசதிகள் –(உலர்ந்த/ குளிரூட்டப்பட்ட)

உலர்த்திகள்

போக்குவரத்து வாகனங்கள்

ஈரப்பதன் பரிசோதிப்பான் போன்ற துல்லியமான உபகரணங்கள்

சாப் வெட்டிகள் (Chaff cutters)

கதிரடிகள் (Threshers)

ராக்டர்கள் உழவு மற்றும் உழவு இயந்திரங்கள்

விதை பதிக்கும் கருவிகள் மற்றும் விதை நேர்த்தி அலகுகள்

புல் வெட்டிகள்

நிலம் தோண்டும் கருவிகள்

அசையும்/ டிராக்டரில் பொருத்தப்பட்ட நீர்பாசன முறைமைகள்

## இணைப்பு 8

**PUC இன் வருடாந்த மற்றும் அரையாண்டு செயலாற்றுகையை அளவிடுவதற்கான கருவி (தரப்படுத்தல்)**

| வகை | வகைக்குரிய மொத்தப் புள்ளி | நியதி | உச்ச பட்ச புள்ளிகள் | பெற்றுக் கொண்ட புள்ளிகள் (PUC ஆல் நிரப்ப படவேண்டும்) |
|---|---|---|---|---|
| A | 5 | செயற்படுத்தப்பட்ட வருடங்களின் எண்ணிக்கை | | |
| | | 5 வருடங்களுக்கு மேல் | 5 | |
| | | 4-5 வருடங்கள் | 4 | |
| | | 2-3 வருடங்கள் | 3 | |
| | | 1 வருடத்தை விடக் குறைவு | 2 | |
| | | | | |
| B | 10 | நிர்வாகம் | | |
| I | | குழுவின் கட்டமைப்பு - முன் கற்றவர் நிபுணத்துவம், தொழில்ரீதியாக தகுதி பெற்றவர்கள், FOக்கள், சங்கங்களின் பிரதிநிதிகள். (இரத்த சொந்தங்கள் இல்லை) | 3 | |
| Ii | | PUC க்கு ஊக்குவிப்பாளர் அமைப்பிலிருந்து உதவியின் அளவு | 2 | |

| | | | | |
|---|---|---|---|---|
| Iii | | குழு கூட்டத்தை கோரத்துடன் முறையாக நடத்துதல் | 3 | |
| Iv | | நிகழ்ச்சிநிரலின் தரம், கலந்துரையாடல்கள், தீர்மானமெடுத்தல், வெளிப்படைத்தன்மை, | 2 | |
| | | | | |
| **C** | 10 | முகாமைத்துவம் | | |
| I | | முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் இருத்தல் – | 4 | |
| Ii | | சம்பளம் வழங்கப்படும் பணியாளர்கள் இருத்தல். | 2 | |
| Iii | | முகாமையாளர்/ CEO/ பணியாளர்களின் பயிற்சி மற்றும் அனுபவம் | 4 | |
| | | | | |
| **D** | 5 | உட்கட்டமைப்பு | | |
| I | | சொந்த/ வாடகை அலுவலக வளாகங்கள் செயன்முறை மற்றும் சந்தைப்படுத்தல் அலகுகள் | 2 | |
| Ii | | இயந்திரங்காள் மற்றும் உபகரணங்கள், அலுவலக தளபாடங்கள், தொடர்பாடல் முறைமைகள் | 3 | |
| | | | | |
| **E** | 10 | PUC இல் அங்கத்துவம் | | |
| | | 1000 இற்கு மேல் | 10 | |
| | | 501 முதல் 1000 | 8 | |
| | | 201 முதல் 500 | 6 | |
| | | 101 முதல் 200 | 4 | |
| | | 50 முதல் 100 | 2 | |
| | | 50 இற்கு கீழ் | 1 | |
| | | | | |
| **F** | 5 | பங்கு மூலதனத்தில் பங்களிப்புச் செய்யும் மொத்த அங்கத்தவர்களின் சதவீதம் % | | |
| | | 90% இற்கு மேல் | 5 | |
| | | 71-90% | 4 | |
| | | 51-70% | 3 | |
| | | 50% இற்கு கீழ் | 1 | |
| | | | | |
| **G** | 5 | மொத்தப் பங்கு மூலதன சேகரிப்பு | | |
| | | 1.5 LKR மில்லியன் வரை | 5 | |
| | | 1.0 முதல் 1.5LKR மில்லியன் வரை | 3 | |
| | | 1.0 LKR மில்லியனுக்கு கீழ் | 1 | |
| | | | | |
| **H** | 10 | நிறைவேற்று அங்கத்தவர்கள், பொது அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களின் பயிற்சி | | |
